THAYAGAM

# தாயகம்

10 . 9 . 93

75¢

உ[illegible]:5
தேடல்:10



## நாட்டைப் பிரிக்க அனுமதிக்க மாட்டேன்

இனப்பிரச்சனை அல்ல, பயங்கரவாதப் பிரச்சனையே!

ஜனாதிபதி கூறுகிறார்

## ஒற்றை ஆட்சிமுறை மாறாமல் தீர்வு இல்லை

கூட்டணி சிவா கூறுகிறார்

## கிளாலிக்கடலில் ஹெலிகொப்டர் தாக்குதல்

## பருத்தித்துறையில் மீண்டும் செஞ்சிலுவைச்சங்கம்

## இராணுவத் தலைமைப்பீடத்தில் மாற்றம்

# EVERGREEN
## IMPORT & DISTRIBUTORS

TEXTILES, GIFTS, EVERSILVER ITEMS & BOOKS

**566 A PARLIAMENT ST**
(PARLIAMENT/WELLESLEY)
(416) 964-8601
324-9345
968-9545

வர்த்தகர்களுக்கு விசேட கழிவுகள் உண்டு

தலைநகை, தலைப்பாகை வாடகைக்கு கிடைக்கும்

சிவசங்கரி, பாலகுமாரன், அனுராதா ரமணன், சுஜாதா, புஷ்பா தங்கத்துரை, லேனா தமிழ்வாணன், மு.கருணாநிதி, கண்ணதாசன், வைரமுத்து, மேத்தா உட்பட தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்களின் புத்தகங்கள் மலிவு விலையில் கிடைக்கும்.

இலங்கை, இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம். நேரடிவினியோகமும் உண்டு.

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக ஆடைகள்
- ஆண்களுக்கான ஜீன்ஸ், ரீ சேட் வகைகள், சாரங்கள், பட்டு வேட்டி வகைகள்
- சாறி வகைகள்
- அலங்காரப் பொருட்கள், பரிசுப் பொருட்கள்
- மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்

அனைத்தும் மலிவான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

வவுனியா, யாழ்ப்பாணம், கொழும்பு, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் உடனுக்குடன் பணம் அனுப்பி வைக்கப்படும்

**566 A PARLIAMENT ST (PARLIAMENT/WELLESLEY)**

Second class mail Registration No:8435

தாயகம்

'உண்மையைத் தேடி'

## கிளாலியில் ஹெலிகொப்டர் தாக்குதல்

கிளாலிக்கடலைக் கடந்து சென்ற படகுகள் மீது விமானப்படை ஹெலிகொப்டர்கள் தாக்குதல் நடத்தியுள்ளன. இத்தாக்குதலில் இரண்டு பேர் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு ஐம்பதுக்கும் மேற்பட்ட படகுகளில் சராசரி ஒவ்வொன்றிலும் பதினைந்து பேர் வரை கிளாலிக்கடலைக் கடந்து கொண்டிருந்தனர். பதினாறு கிலோ மீற்றர் நீளமான இந்தப் பயணத்தில் பாதி வழியில் திடீரென்று இரண்டு ஹெலிகொப்டர்கள் தோன்றி விளக்குகளின் மூலம் ஒளிக்கற்றையை வீசித் துரத்தத்தொடங்கின. அப்போது நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் வள்ள ஓட்டி ஒருவர் கொல்லப்பட்டதுடன், இருவர் காயமடைந்ததாக ஒருவர் தெரிவித்தார். துப்பாக்கிப் பிரயோகம் தொடங்கிய போது பலரும் கூக்குரலிட்டதாகவும் தங்கள் வள்ளம் கட்டுப்பாட்டை இழக்க, வள்ளத்தினுள் நீர் புகுந்ததாகவும் தங்களைக் காப்பாற்ற இன்னொரு வள்ளம் வந்ததாகவும் 43 வயதான பெண்மணி ஒருவர் கூறினார். இந்தப் பெண் மார்புப் புற்றுநோய்க்கு சிகிச்சை பெற கொழும்பு வந்திருந்தார்.

கரையை அடைந்ததும் பற்றைகளுக்குள் தாம் மறைந்து கொண்டதாகவும் இரண்டு மணி நேரமாக விமானங்கள் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் அப்போது மூன்று குண்டுகள் வீசப்பட்டதாகவும் ஒரு பயணி கொல்லப்பட்டதாகவும் இருவர் காயமடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பலர் காயமடைந்ததாகவும் மூன்று வள்ளங்கள் அமிழ்ந்திருக்கலாம் என்றும் பயணிகள் கூறினர்.

# இனப்பிரச்சனையல்ல, பயங்கரவாதப் பிரச்சனையே!

## நாட்டைப் பிரிக்க அனுமதிக்க மாட்டேன் ஜனாதிபதி கூறுகிறார்

இலங்கை பிரிக்கப்படுவதை தான் அனுமதிக்கப் போவதில்லை என்றும் தற்போதைய பிரச்சனை பயங்கர வாதப் பிரச்சனையே அன்றி, இனப்பிரச்சனை அல்ல என்றும் ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்க கூறியுள்ளார்.

புலிப் பயங்கரவாதிகள் தனித்தமிழ் நாட்டை உருவாக்க பிரிவினை கோருவார்கள். அதற்கு நான் நாட்டைப் பிரிக்க அனுமதிக்க மாட்டேன் என்றும் அவர் கூறினார்

தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பிராந்திய கவுன்சில் உறுப்பினர்கள் மத்தியில் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இலங்கையின் ஒருமைப்பாட்டை பேணவும் எல்லா இனங்களிற்கிடையிலும் அமைதியை ஏற்படுத்தவும் தாம் உறுதி பூண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

## கூட்டுப்படைத் தலைமையகம் கலைக்கப்பட்டது

இலங்கை அரசு கூட்டுபபடைத் தலைமையகத்தைக் கலைத்துள்ளது. தற்போது யுத்தத்திற்கு புதிய தலைமை அமைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்பு கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு பொறுப்பாக செயற்பட்டு வந்தார்.

முன்பு பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த விமானப்படையின் முன்னாள் தளபதி வால்டர் பெர்னாண்டோ தனிப்பட்ட காரணங்களுக்காக தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

தற்போது பாதுகாப்பு அமைச்சின் கீழ், ஹமில்டன் வணசிங்கவின் தலைமையில் புதிய பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் வழிநடத்தலிலேயே யுத்தம் நடத்தப்படும்.

இந்த மாற்றத்திற்கான காரணங்கள் தெரிவிக்கப்படவிலலை. முன்பு பிரேமதாசாவின் காலத்தில் கூட்டுப்படைத் தலைமையகத்தின் கீழ் இருந்த கட்டுப்பாடு பின்னர் தளபதிகளிடம் கையளிக்கப்பட்டு பின்னர் மீண்டும் கூட்டுப்படைத் தலைமையகத்திடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது.

## வடக்கில் படகுகளுக்குத் தடை

சென்ற வாரம் வடபகுதிக் கடலில் அனுமதி பெறாத படகுகள் நடமாடக் கூடாது என்று விதிக்கப்பட்ட தடையினால் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு நட்டஈடு வழங்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இந்த தடையினால் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

மன்னாரிலிருந்து திருமலை வரையான கடற்கரையோரமாக படகுகள் நடமாட முடியாது. புலிகளின் தற்கொலைத்தாக்குதல்களை நிறுத்தும் நோக்குடனேயே இந்த தடை அமுலானதாகவும் இந்த தடையினால் மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து லட்சம் பேர் பாதிக்கப்படுவார்கள் என்றும் அரச கூறியுள்ளது. இந்தப் பிரச்சனை குறித்து பேச்சுவார்த்தை நடத்த திருமலை மீனவர்கள் அரச அதிகாரிகளுடன் சந்திப்பு ஒன்றை திங்கட்கிழமை ஒழுங்கு செய்திருந்தனர்.

## ஏடு இட்டோர் இயல்

# உட்கட்சிப் பிரச்சனையைத் தீர்க்காத எதிர்க்கட்சிகளும் இனப்பிரச்சனையும்

முன்பு அமெரிக்கா வியட்னாமில் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த போது, அமெரிக்காவின் ஜனாதிபதியாவதற்கு போட்டியிட்ட நிக்சன் 'அமெரிக்கா தன்மானத்துடன் அங்கிருந்து வாபஸ் பெறச் செய்வேன்' என்று கூறி வெற்றி பெற்றார். அவர் எவ்வாறான திட்டத்தை வைத்திருக்கிறேன் என்று யாரும் அப்போது கேட்கவில்லை. பதவிக்கு வந்த பின்னர் அவர் படைகளை வாபஸ் பெறவும் இல்லை.

சென்ற வாரம் சுதந்திரக்கட்சி தனது கொள்கைத் திட்டம் ஒன்றில் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றை முன்வைக்கப் போவதாகக் கூறியதும் இந்த நிக்சனின் வாக்குறுதி தான் நினைவுக்கு வந்தது. இன்றைய நிலையில் சுதந்திரக்கட்சியின் நிலை கவலைக்குரியது. அது குடும்பச் சண்டையா? அல்லது கட்சியில் உள்ள இடதுசாரிகளுக்கும் வலதுசாரிகளுக்கும் இடையிலான சண்டையா? என்பது தெரியாத நிலையில் சண்டை நடைபெறுகிறது. அனுராவை ஜே.ஆரின் உளவாளி என்று சிறிமாவே குற்றம் சாட்டும் அளவில் நிலை இருக்கிறது. கட்சிக்குள்ளேயே எல்லாரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வை கொடுக்க முடியாத நிலையில் இருக்கும் போது எவ்வாறு நாடு முழுவதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை கட்சி தரும் என்பது சந்தேகத்திற்குரியது.

இன்றைய ஆட்சி இனப்பிரச்சனை பற்றி என்ன தீர்வைக் கொண்டிருக்கிறதோ என்னவோ, ஆனால் தனது தீர்வு சுதந்திரக்கட்சிக்கு சாதகமாகி விடக் கூடாது என்பதில் உறுதியானதாக இருக்கிறது. இந்தப் பயம் காரணமாகத் தான் பிரேமதாசாவும் தமிழ்க் கட்சிகளிடம் பேசும் போதெல்லாம் தனது இக்கட்டான நிலையை விளக்கிக் கொண்டிருந்திருக்கிறார். அத்தோடு தனது இரண்டாவது ஆட்சிக்காலத்தில் பிரச்சனையைத் தீர்ப்பதாகக் கூறியதை நம்பிய தமிழ்க் கட்சிகளும் உண்டு. இவர் இதைத் தான் புலிகளுக்கும் கூறியிருப்பாரோ என்னவோ? தமிழ் மக்களுக்கு சார்பான எந்த தீர்வையும் தமிழ் ஈழத்தை தாரை வார்த்துக் கொடுக்கும் நிலை என்று சுதந்திரக்கட்சி பிரசாரம் செய்யப் போனால் தீர்வைக் கொடுக்கின்ற ஜனாதிபதியின் அரசியல் எதிர்காலம் பூச்சியம் தான்.

இந்த நிலையில் எதிர்க்கட்சிகளுக்கு இனப்பிரச்சனையை விட கட்சிக்குள் தங்கள் நிலைமைகளை ஸ்திரப்படுத்திக் கொள்வது முக்கியமானதாக இருக்கிறது. பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சிக்கும் அரசாங்கத்தின் பயம் உள்ளது. தீர்வு என்று ஒன்றை முன்வைக்கப் போக அதுவே ஐ.தே.கட்சிக்கு அடுத்த தேர்தலில் வெற்றிக்கு வாய்ப்பாகி விடும் என்ற பயம் தான் சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான மங்கள முனசிங்கவின் யோசனையின் பேரில் உருவாக்கப்பட்ட தெரிவுக்குழுவிற்கு சுதந்திரக் கட்சி எந்த யோசனையையும் சமர்ப்பிக்கவில்லை.

சுதந்திரக் கட்சிக்குள் சந்திரிகாவைக் கொண்டு வந்து தனது வாரிசாக்கும் சிறிமாவோவின் முயற்சியும் முடிக்குரிய இளவரசன் தானே வாரிசு என்ற அனுராவின் குரலும் சுதந்திரக் கட்சியின் ஸ்திரநிலைமையைக் குழப்பிக் கொண்டிருக்கின்றன. சென்ற தேர்தலில் சந்திரிகாவின் கட்சியைச் சேர்ந்த ஒஸி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபடியால் தான் ஐ.தே. கவிற்கு எதிரான வாக்குகள் பிரிந்து சிறிமாவோ தோல்வியடைய நேர்ந்தது, இந்த நிலையில் சந்திரிகா எப்படி கட்சிக்கு தலைவியாக முடியும் என்பதும் அனுராவின் வாதம். சென்ற மாகாண சபைத் தேர்தலில் மேல் மாகாணத்தில் சந்திரிகா வெற்றியடைந்ததால் அவருக்கு தனது செல்வாக்கை நிருபிக்க சந்தர்ப்பம் கிடைத்ததால் அதிருப்தியடைந்த அனுராவின் கூற்றாகவே இது கருதப்படுகிறது.

கட்சியின் இந்த பிளவு தத்துவார்த்தப் பிரச்சனை என்ற விளக்கங்களும் உண்டு. சோவியத் யூனியன் உடைவுக்குப் பின்னர் சுதந்திரக்கட்சியின் இடதுசாரிப் போக்கினால் பயனில்லை என்றும் திறந்த பொருளாதாரக் கொள்கை தான் சரியானது என்று அனுரா தலைமையிலான அணியும் சுதந்திரக் கட்சியின் பாரம்பரியக் கொள்கைகள் பேணப்பட வேண்டும் என்ற சிறிமாவின் அணியும் மோதிக் கொள்கின்றன என்றும் கூறப்பட்ட போதிலும் சமீபத்திய அறிக்கையில் சுதந்திரக் கட்சி தனது கொள்கைகளில் பலவற்றை யதார்த்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றிக் கொண்டதைக் காண முடிகிறது. சென்ற தேர்தலில் இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி போன்றவற்றுடன் கூட்டு வைத்ததற்கு அனுரா எதிர்ப்பு தெரிவித்திருந்தார்.

சுதந்திரக்கட்சியின் இந்தப் பிளவுக்குள் இனவாத அணியான ஹெல உறுமய பெரும் தலையிடியாக இருந்து வருகிறது. இதனால் வெளியேற்றப்பட்ட திலக் கருணாரத்தினவை வெளியேற்றியது தவறு என்ற உயர்நீதிமன்றத் தீர்ப்பு சிறிமாவோவின் அதிகாரத்துக்கு ஏற்பட்ட பலத்த அடி.

இருந்தாலும் இந்த அடிதடிகள் ஆளும் ஐ.தே.கட்சிக்கு பலத்த மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே சுதந்திரக் கட்சியை உடைக்கும் நோக்குடன் ஜே.

**இன்றைய ஆட்சி இனப்பிரச்சனை பற்றி என்ன தீர்வைக் கொண்டிருக்கிறதோ என்னவோ, ஆனால் தனது தீர்வு சுதந்திரக்கட்சிக்கு சாதகமாகி விடக் கூடாது என்பதில் உறுதியானதாக இருக்கிறது.**

வி.பிக்கு உதவி புரிந்தது பற்றி பலர் தற்போது தாயகத்தில் வரும் கட்டுரைகள் மூலம் அறிந்திருக்கக் கூடும். அனுரா கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட போது, அவர் இடைத் தேர்தல் ஒன்றில் போட்டியிடும் போது அவருக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தப் போவதில்லை என ஐ.தே.கட்சி முடிவு எடுத்தது அனுரா மீதான அனுதாபம் அல்ல, சுதந்திரக்கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே.

அடுத்த தேர்தல் வரும் வரை இந்த களேபரம் இழுபடுவது ஐ.தே.கட்சிக்கு நன்மை பயக்கும் என்பதால் அதற்காக எதுவும் செய்து வெற்றியை ஊர்ஜிதப்படுத்தவே அரசு முயலும்.

எதிர்க்கட்சிகளின் மூன்றாவது சக்தியாக புறப்பட்ட காமினி அணி தற்போது புஸ்வாணமான நிலையில் இருக்கிறது. காமினி மீண்டும் அரசில் சேர்ந்து பாதுகாப்பு அமைச்சராகக் கூடும் என்ற செய்திகள் வந்ததும் இந்திய தரப்பில் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டிருந்ததாம். காரணம் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு காமினி தெரிவித்த ஆதரவு தான் காரணம். ஐ.தே.கட்சியில் சேர்ந்தால் ஒருவேளை என்ன செய்வாரோ தெரியாது. ஆனால் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஒவ்வொரு சரத்துக்களையும் தான் ஆதரிப்பதாகவும் வடக்கு கிழக்கு இணைப்பை அது உறுதிப்படுத்துவதாகவும் காமினி கூறியிருந்தார். ஜே.ஆரின் ஆட்சியில் இந்தியத் தலையீட்டுக்கு பலத்த எதிர்ப்பு இருந்த நிலையிலும் அதை ஆதரித்தவர் காமினி. இவரோடு சேர்ந்த லலித்தின் நிலைப்பாடு யாவரும் அறிந்ததே. தமிழர் பிரச்சனை பயங்கர வாதப் பிரச்சனை என்பதுடன் லலித்தின் கருத்து முடிந்த ஒன்று. அதே பயங்கரவாதத்திற்கு லலித் பலியுண்டதுடன் ஜனநாயக ஐக்கிய தேசிய கட்சியின் எதிர்காலம் முடிந்தது என்றே கருத வேண்டும்.

சுதந்திரக் கட்சி போலவே இனப்பிரச்சனைக்கான தீர்வு ஒன்றை முன்வைக்க முடியாதபடிக்கு கட்சிக்குள் பிரச்சனைகள் அதிகமாக இருக்கின்றன. லலித் கொலையுண்டதும் தொடர்ச்சியாக பிரேமதாசா கொலையுண்டதும் அரசியலில் காமினியின் முக்கியத்துவத்தை பெருமளவில் குறைத்திருந்தன. காமினியின் பிரிவினால் ஐ.தே.கட்சியின் வாக்குகள் பிரியும் என்ற பயமும் போய் விட்டது. கட்சியில் லலித் போன்ற செல்வாக்குள்ளவர்கள் இல்லாத காரணத்தினால் ஐ.தே.கட்சியுடன் சேர்வது தான் தன் எதிர்காலத்தைக் காத்துக் கொள்ள சரியான வழி என்பதை உணர்ந்த காமினி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். இருந்தாலும் லலித்தின் தீவிர ஆதரவாளர்கள் சிலர் இதற்கு முட்டுக்கட்டையாக உள்ளனர்.

**சிங்கள இனவாதத்தின் தலைமையை யார் கைப்பற்றுவது என்ற போட்டி ஐ.தே.கட்சிக்கும் சுதந்திரக்கட்சிக்கும் இடையில் இருக்கும்வரை தமிழர் பிரச்சனை என்பது அவர்களுக்கு தேர்தலில் ஒரு கருவியமாகப் பயன்படுத்தப்படக் கூடுமே அன்றி உண்மையான தீர்வு தரும் நோக்கம் இரு கட்சிகளுக்குமே இருக்கப் போவதில்லை என்பது மட்டும் நிதர்சமான உண்மை.**

அடிப்படையில் லலித் காமினியின் வெளியேற்றத்திற்கான காரணம் பிரேமதாசா மீதான எதிர்ப்புணர்வு தான். ராஜீவின் மரணச் சடங்குகளிற்கு சென்ற இடத்திலேயே இருவரும் தங்களது வேறுபாடுகளை ஒருபுறம் வைத்து விட்டு பிரேமதாசாவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கினர். தாங்கள் இருவருமே ஜனாதிபதி பதவிக்கு ஆசைப்பட்டாலும் பிரேமதாச இருக்கும்வரை அதற்கான சாத்தியங்கள் குறைவு என்பதாலும் பிரேமதாசா மீதான சாதி எதிர்ப்புணர்வில் லாபம் பெறும் நோக்குடனும் தொடங்கிய இந்த முயற்சி தோற்றதால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு புதிய கட்சி ஆரம்பிக்க வேண்டிய நிலையில் இருந்தனர். இதற்கு அந்த நேரம் ஜே. ஆரின் ஆசீர்வாதமும் இருந்தது.

ஐ.தே.கட்சியின் வாக்குகளை இந்தக் கட்சி பிரித்தால் தான் அதில் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையில் தான் சுதந்திரக்கட்சி தனியே போட்டியிட முயன்றது. தற்போது காமினி கட்சிக்குத் தேவை என்ற நிலை படிப்படியாக மங்கி வருகிறது. முதலில் பெரும் ஆர்வம் காட்டப்பட்ட போதும் காமினியின் வருகைக்கு பலவகையிலும் எதிர்ப்பு காட்டப்பட்டு வருகிறது. பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவிற்கு காமினியின் வருகை ஒரு பின்தள்ளலாகவே முடியும். ரணில் தனது மருமகனாக இருப்பதால் ஜே. ஆரும் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, காமினி கட்சியில் சேருவதாயின் தனது கட்சியை கலைத்து சாதாரண உறுப்பினராக சேர வேண்டும், அவருக்கு அமைச்சர் பதவி தருவதாக உறுதியளிக்கப்படக் கூடாது என்று கூறியிருக்கிறார். அரசியலில் எதுவும் நடக்கும் என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம் தான்.

காமினிக்கு வழிவிட கட்சி உறுப்பினர்கள் மறுப்பதாலும் இது இழுபட்டுப் போய் கடைசியில் காமினி ஒரு தேவையற்றவராகி இந்த இணைப்பு முயற்சி முறிந்து போகலாம். அப்போது மக்கள் மத்தியில் இருந்த நம்பிக்கையையும் இழந்து காமினியின் எதிர்காலம் சூனியமாகக் கூடும். அப்போது இனப்பிரச்சனை தொடர்பான காமினியின் கருத்துக்கள் தேவையற்றதாகி விடவும் கூடும்.

மற்றக் கட்சிகளில் இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி என்பன சோவியத் உடைவின் பின்னர் தொய்வு நிலையிலேயே உள்ளன. வாசுதேவ மட்டும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்திக் கொண்டாலும் அது எந்த தீர்வையும் தீர்மானிக்கும் நிலையிலும் இல்லை.

சிங்கள இனவாதத்தின் தலைமையை யார் கைப்பற்றுவது என்ற போட்டி ஐ.தே.கட்சிக்கும் சுதந்திரக்கட்சிக்கும் இடையில் இருக்கும்வரை தமிழர் பிரச்சனை என்பது அவர்களுக்கு தேர்தலில் ஒரு கருவியமாகப் பயன்படுத்தப்படக் கூடுமே அன்றி உண்மையான தீர்வு தரும் நோக்கம் இரு கட்சிகளுக்குமே இருக்கப் போவதில்லை என்பது மட்டும் நிதர்சமான உண்மை.

# தொடர்ந்தும் அகதிகளால் சிக்கல்படும் டென்மார்க் அரசு

இலங்கைத்தமிழ் அகதிகளின் பிரச்சனையால் டென்மார்க்கின் சமூக ஜனநாயகக் கட்சியினரிற்கான ஆதரவு சரிந்து வருகிறது. இலங்கை அகதிகள் விடயத்தில் இந்த அரசு தாராளமாக இருப்பதால் பொதுமக்கள் மத்தியில் பலத்த எதிர்ப்பு உணர்வு ஏற்பட்டுள்ளது. 90ம் ஆண்டு தேர்தலில் 37.4 வீதமாய் இருந்த ஆதரவு 28 வீதமாக குறைந்துள்ளது.

நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களில் மீண்டும் தோல்வியைத் தழுவாதிருக்க அரசாங்கம் அகதிகள் பிரச்சனை குறித்து கடும் போக்கை கடைப் பிடிப்பதாக உறுதியளிக்க வேண்டும் என்று ஆளும் கட்சி சார்பான மேயர்கள் கூறியுள்ளனர்.

ஆயினும் இந்த பிரச்சனையால் கட்சிக்குள் பெரும் பிளவு, ஏற்பட்டுள்ளது. தற்போது யூகோஸ்லாவியாவில் இருந்தும் பெருமளவு அகதிகள் வந்துள்ளதால் மக்கள் மத்தியில் அகதிகள் பற்றிய எதிர்ப்புணர்வு ஏற்பட்டு வருகிறது.

முன்னைய அரசு தமிழ் அகதிகளின் குடும்பங்கள் மீண்டும் இணைவதில் தடைகளை அமுல்படுத்த முற்பட்டதால் ஆட்சியை இழந்தது தெரிந்ததே.

# பருத்தித்துறையில் மீண்டும் செஞ்சிலுவைச் சங்கம்

பருத்தித்துறையில் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து அப்பகுதியில் செயற்பட மறுத்த செஞ்சிலுவைச் சங்கம் தற்போது தொடர்ந்தும் செயற்படுகிறது. நான்கு நாட்களாக செஞ்சிலுவைச் சங்கம் தனது செயற்பாடுகளை நிறுத்தியிருந்தது. யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருட்களைக் கொண்டு செல்லும் கப்பல்களில் செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடிகளைப் பறக்க விடுவதன் தனது அதிகாரி ஒருவரையும் செஞ்சிலுவைச் சங்கம் அனுப்புகிறது.

தாங்கள் செயற்படும் பகுதிகளில் தாக்குதல் நடத்தக் கூடாது என்று செஞ்சிலுவைச் சங்கம் அரசிடமிருந்தும் புலிகளிடமிருந்தும் உறுதிமொழியை கேட்டிருந்தது. யாழ் வைத்தியசாலை இவ்வாறான ஒரு உறுதிமொழியின் அடிப்படையிலேயே செயற்படுகிறது.

புலிகளின் தாக்குதல்கள் இப்பகுதியில் நடைபெற்றால் பதில் தாக்குதல் அப்பிரதேசங்களில் நடத்தப்படும் என்று இராணுவம் கூறியிருந்தது. இதையடுத்தே செஞ்சிலுவைச் சங்கம் புலிகளிடமிருந்து உறுதிமொழி கேட்டிருந்தது.

ஆயினும் உறுதிமொழி கிடைத்ததா என்பது பற்றி தெரியவில்லை.

# கடற்படைக்கு பெரும் இழப்பு

கடற்படைப் படகுகளின் மீது புலிகளின் தற்கொலையாளிகளைக் கொண்ட படகுகள் மோதியதை அடுத்து மன்னார் முதல் திருமலை வரையிலான கடலோரப் பகுதியில் அனுமதி பெறாத படகுகளின் நடமாட்டம் தடை செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ரோந்து செய்யும் படகுகளுக்கும் உணவுப் பொருட்களைக் கொண்டு செல்லும் கப்பல்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கவும் கடற்படை முயற்சிக்கிறது.

அத்துடன் புலிகளின் நடமாட்டத்தை முறியடிக்க கடற்படைக்கு இன்னமும் படகுகளும் ஆயுதங்களும் வேண்டும் என்றே இராணுவ ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

சமீபத்தில் நடந்த தாக்குதலில் இஸ்ரேலிய தயாரிப்பான ட்வோராப் படகு தகர்க்கப்பட்டது. இந்த வகையான பதினைந்து படகுகள் இலங்கை கடற்படையிடம் உள்ளன. இந்தப் படகுகள் மூன்று கப்பல்களில் இருந்து பெறப்படும் தகவல்கள் மூலம் செயற்படுகின்றன. ஆயினும் ஓரே நேரத்தில் ஐந்து ட்வோராப் படகுகளே செயற்படுகின்றன. மற்றவை துறைமுகங்களில் நங்கூரமிடப்பட்டிருக்கும். 300 மைல் நீளமான கடற்கரையோரத்தை இந்தப் படகுகள் ரோந்து புரிகின்றன.

சமீபத்திய தாக்குதல்களில் தகர்க்கப்பட்ட இரண்டு நீர்ஜெட் படகுகள் யாழ்ப்பாணக் கடலேரியில் ரோந்து புரிந்து வந்தன. கடற்படையிடம் பத்து நீர் ஜெட் படகுகள் இருந்தன. கடலேரியில் ஆழம் குறைவான காரணத்தால் இவ்வாறான படகுகளே செயல்திறன் மிக்கன. இதில் ஒன்று புலிகளால் மண்டைதீவில் இருந்து கைப்பற்றப்பட்டது. இரண்டு ஏற்கனவே புலிகளால் தகர்க்கப்பட்டன.

தற்போது பிரான்ஸ் நாட்டிலிருந்து இரண்டு படகுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

# கடற்படையின் தாக்குதலுக்கு இந்திய மீனவர் பலி

இலங்கைக் கடற்படை நடத்திய தாக்குதல் ஒன்றில் இந்திய மீனவர் ஒருவர் கொல்லப்பட்டார். அத்துடன் மூவர் காயமடைந்தனர். கடந்த புதன்கிழமை இலங்கைக் கடற்கரையோரமாக நின்ற இந்த படகின் மீது கடற்படையினர் சந்தேகம் கொண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

காயமடைந்தவர்கள் பலாலி முகாமில் வைத்து சிகிச்சையளிக்கப்படுகின்றனர். இவர்களை விடுவிக்க இந்திய தூதுவரகம் முயன்று வருகிறது. ஆயினும் இந்திய அரசு இந்த நடவடிக்கைக்கு ஆட்சேபம் தெரிவிக்கவில்லை.

# வெளிநாடுகளில் புலிகளின் நடவடிக்கை பற்றி அரசு கண்காணிக்கிறது

வெளிநாடுகளில் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து தாம் தொடர்ந்தும் அவதானித்து வருவதாகவும் மேற்கு நாடுகள் சிலவற்றில் உள்ள தூதுவரகங்கள், ராஜதந்திர அலுவலகங்கள் மூலம் இந்த கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் ஹமீது பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி உறுப்பினரான திலக் கருணாரத்தினவின் கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் மேற்கொண்டவாறு தெரிவித்தார். உலகிலேயே மோசமான கொலை இயந்திரம் என்று புலிகளை வர்ணித்த கருணாரத்தின 'இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிட்சலாந்து, ஜேர்மனி, நோர்வே, ஸ்வீடன், கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் புலிகளை தங்கள் நாடுகளின் தலைநகரங்களில் செயற்பட விட்டுள்ளதாகவும் அங்கிருந்தே அவர்கள் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் இலங்கை அரசு இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்றும் கேள்வி எழுப்பியிருந்தார். அத்துடன் புலிகள் அப்பாவி சிங்கள, தமிழ், முஸ்லிம்களை கொன்று, காயப்படுத்தியதுடன் ஆயிரக்கணக்கான இலங்கையர்களை தங்கள் நாட்டிலேயே அகதிகளாக்கியுள்ளனர் என்றும் அரசியல் வாதிகளையும் இராணுவத் தலைவர்களையும் கொன்றதுடன் ஆயிரக்கணக்கானவர்களை சிறையில் வைத்து கற்பனை செய்ய முடியாத அளவில் சித்திரவதை செய்கிறார்கள் என்றும் கருணாரத்தின குற்றம் சாட்டினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் இந்த மேற்கு நாடுகளை இலங்கை அரசு இது குறித்து விசாரித்த தாகவும் 'தங்கள் நாடுகளில் செயற்படும் புலிகள் தங்கள் நாட்டு சட்டத்தை மீறுத வரைக்கும் தாங்கள் தலையிட முடியாது' என்று கூறியதாகவும் அமைச்சர் கூறினார். அத்துடன் புலிகள் அந்த நாட்டு சட்டங்களை மீறினால் மட்டுமே அந்த நாடுகள் தலையிட முடியும் என்றும் தெரிவித்தார்.

இறைமையுள்ள நாடுகள் என்ற ரீதியில் அவை அவ்வாறான கருத்தைக் கொண்டிருக்க முடியும் என்றும் ஆனால் அந்த நாடுகளின் இப்படியான நிலைப்பாட்டினால் இலங்கை எதிர்நோக்கும் பிரச்சனைகள், கஷ்டங்கள் குறித்து தொடர்ந்தும் அவற்றிற்கு விளங்கப்படுத்துவதாகவும் அமைச்சர் கூறினார்.

# அமெரிக்க வானொலி நிலையத்தை மூட அரசு மறுப்பு

புத்தளத்தில் அமைக்கப்படும் வொய்ஸ் ஒப் அமெரிக்கா ஒலிபரப்பு நிலையத்தின் நிர்மாணிப்பை நிறுத்தும்படி எதிர்க்கட்சிகளின் கூட்டணியான மக்கள் கூட்டணி கேட்டுள்ளது. இந்த நிலையம் இராணுவ தொடர்புகளுக்கு பாவிக்கப்படுவதன் மூலம் இலங்கையின் அணிசேராத் தன்மை பாதிப்படையும் என்றும் இது சம்பந்தமாக கைச்சாத்திடப்பட்ட சகல ஒப்பந்தங்களும் பகிரங்கப் படுத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரணவிலவில் அமைக்கப்படும் இந்த வானொலி நிலையத்திற்கு அங்குள்ள மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பது தெரிந்ததே. 1951 முதல் இலங்கை வானொலியின் கருவிகளைப் பாவித்து வொய்ஸ் ஓஃப் அமெரிக்கா ஒலிபரப்புவதாகவும் இந்த ஒப்பந்தத்தை வாபஸ் பெற முடியாது என்றும் இலங்கை அரசு கடந்த புதன்கிழமை மறுத்திருந்தது. இந்த ஒப்பந்தம் 1983 கைச்சாத்திடப்பட்டதாகவும் அரசு கூறியது.

இந்த நிலையத்தினால் அங்குள்ள சுற்றாடன் பாதிப்புறும் என்றும் உள்ளூர் வாசிகளின் உடல்நலமும் பாதிப்புறும் என்றும் கூட்டணி தெரிவித்தது.

இந்த நிலையத்தினால் உமிழப்படும் மின்காந்த அலைகள் கர்ப்பிணிப் பெண்களில் கருச்சிதைவுக்கு காரணமாகலாம் என்றும் ஆரோக்கியமான மன நிலையுள்ளவர்கள் பாதிப்புறலாம் என்றும் மீன்வளங்கள் அழிந்து போகலாம் என்றும் விஞ்ஞானிகள் நம்புவதாகவும் கூட்டணி விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரகம் இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்ததுடன் இந்த நிலையம் இராணுவ நோக்கத்திற்காக பயன் படுத்தப்பட மாட்டாது என்றும் கூறியது.

# ராஜீவ் கொலை சம்பந்தமாக விசாரிக்க இந்திய புலனாய்வாளர் வருகை

ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமாக இந்திய புலனாய்வாளர்கள் இலங்கை வந்து கொழும்பில் கைது செய்யப்பட்ட புலி ஒருவரை விசாரிப்பார்கள். கடந்த ஞாயிற்றுக்கிழமை மூன்று இந்தியப் புலனாய்வாளர்கள் கொழும்பு வந்திருந்தார்கள். சமீபத்தில் கொழும்பில் சுற்றி வளைப்பொன்றில் நிக்சன் என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார். முன்பு ராஜீவ் கொலை சம்பந்தமாக இவர் இந்தியாவில் கைது செய்யப்பட்ட போதும் பின்னர் போதிய சாட்சிய மின்மையால் விடுவிக்கப் பட்டிருந்தார்.

தற்போது பிரேமதாசவின் கொலை சம்பந்தமாகவும் இவர் விசாரிக்கப்படுகிறார்.

# சமஷ்டி முறையை பெரும் கட்சிகள் ஏற்றுக் கொண்டுள்ளன தொண்டமான் பேட்டி

லண்டனிலும் பாரிஸிலும் தொண்டமான் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தியது பற்றி பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டிகளில் தெரிவித்துள்ளார். தான் அங்கு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களைச் சந்தித்தாகவும் அவர்களில் சிலர் புலிகளின் ஆதரவாளர்களா என்பது பற்றி தனக்குத் தெரியாது என்று தொண்டமான் தெரிவித்தார்.

தொண்டமான் லண்டனில் சுமார் நூறு பேரையும் கென்ற் என்ற இடத்தில் ஐம்பது பேரையும் சந்தித்திருந்தார். அங்கு புலிகளின் லண்டன் அமைப்பாளர் தொண்டமானைச் சந்தித்து திலகர் அவரைச் சந்திக்க விருப்பம் கொண்டிருப்பதாகக் கூறினுர். இதையடுத்து நாடு திரும்பும் வழியில் பாரிஸில் வைத்து திலகர் தொண்டாவைச் சந்தித்தார்.

மற்ற இயக்கங்கள் பற்றி தெரிவித்த தொண்டமான், பிரச்சனையைத் தீர்க்க ஒருபுறத்தில் புலிகளும் மறுபுறத்தில் அரசும் இருப்பதாகவும் உண்மையான தீர்வை விரும்பினுல் மற்றக் கட்சிகள் ஒன்று சேர வேண்டும் என்றும் தெரிவித்ததுடன் இதுவரையும் அவை என்ன செய்தன என்றும் கேள்வி எழுப்பினுர்.

தான் அமைச்சர் என்ற ரீதியில் அல்ல, தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் என்ற முறையிலேயே பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாகவும் கூறிய தொண்டமான், திலகர் போன்றவர்கள் தன்னை உதவும்படி கூறியதாகவும் அரசாங்கம் அனுமதி தந்தால் ஒழிய தான் யாழ்ப்பாணம் போக முடியாது என்றும் தெரிவித்தார்.

அத்துடன் திலகர் சமஷ்டி முறையிலான தீர்வு பற்றி கூறியதால் ஈழம் என்ற பேச்சுக்கு இடம் இல்லை என்றும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமா என்பதை தீர்மானிக்க புலிகளால் மட்டுமே முடியும் என்றும் தொண்டமான் தெரிவித்தார்.

முன்னைய பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்து புலிகள் யுத்தம் செய்வது பற்றிக் கேட்ட போது முன்னைய பேச்சுவார்த்தையின் போது தாம் இருக்கவில்லை என்றும் அமைச்சர் ஹமீது மட்டுமே பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார் என்றும் தொண்டமான் கூறினுர்.

ஏற்கனவே சமஷ்டி அமைப்பை இரு பெரும் கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளது என்பதையும் தொண்டமான் நினைவுபடுத்தினுர்.

வடக்கு கிழக்கு இணைப்பு பற்றிக் கேட்ட போது அவை பேச்சுவார்த்தைகளின் போதே தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற அவர் இந்த விடயங்கள் குறித்து ஜனுதிபதி, பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகவும் கூறியுள்ளார்.

# உணவுக்கப்பல்கள் செல்கின்றன

செஞ்சிலுவைச் சங்கம் மீண்டும் பருத்தித்துறையில் செயற்படுவதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து கோமாரி என்ற கப்பலில் 3200 தொன் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. காங்கேசன துறையிலிருந்து இக்கப்பல் பருத்தித்துறை சென்று அங்கு பொருட்களை இறக்கும். ருகுணு கப்பல் ஆயிரம் தொன் பசளை வகைகளுடன் திருமலையிலிருந்து பருத்தித்துறை செல்லும். வதுவ, குமன ஆகிய கப்பல்கள் ஏழாயிரம் தொன் உணவுப் பொருட்களுடன் கொழும்பிலிருந்து செல்லும்.

# ஈ.பி.டி.பியின் பத்திரிகை வெளியீடுகள்

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியின் போது தினமுரசு, துபத என்னும் சிங்களப் பத்திரிகை ஆகியன ஈ.பி.டி.பியின் நிதியுதவியுடன் நடைபெறுகிறதா என்ற கேள்விக்கு பதிலளிக்க ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா மறுத்து விட்டார். ஆனுல் வடக்கு கிழக்கு பற்றிய செய்திகளை இந்தப் பத்திரிகைக்கு தமது அமைப்பே கொடுக்கிறது என்று அவர் கூறிய போதும் இந்த அமைப்பு நேரடியாகவே அந்தப் பத்திரிகைகளின் வெளியீட்டில் சம்பந்தப்பட்டுள்ளது என்று கொழும்புப் பத்திரிகை கூறியுள்ளது.

ஈ.பி.டி.பி ஆங்கில வார இதழ் ஒன்றை ஆரம்பிக்கும் நோக்கம் கொண்டிருப்பதாயும் அந்தப் பத்திரிகை மேலும் கூறியது.

# சட்டத்தரணிகள் கொலை அதிகரிப்பு

உலகிலேயே அதிகமான சட்டத்தரணிகள் கொல்லப்பட்டது இலங்கையிலேயே என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று வருடங்களில் 22 சட்டத்தரணிகள் கொல்லப்பட்டிருக்கிறுர்கள் என்று இலங்கையில் மனித உரிமைக்கான புலம் பெயர்ந்த சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்திருக்கிறது.

இதன் தலைவராக முன்னுள் பாராளுமன்ற உறுப்பினரான பிரின்ஸ் குணசேகர உள்ளார். மனித உரிமைகளுக்காகப் போராடிய 35 சட்டத்தரணிகள் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் இதில் 24 பேர் லண்டனில் உள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

கொல்லப்பட்டவர்களில் விஜேதாச லியனுராய்ச்சி, காஞ்சனு அபேபால, அமர வெலப்பிலி, லலித் அத்துலத் முதலி ஆகியோரும் அடங்குவர்.

இதற்கு முன்னர் கொல்லப்பட்ட அமிர், யோகேஸ்வரன போன்றவர்களுட் சட்டத்தரணிகளே என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இப்படியும் சேதிகள்-

ஜனமித்திரன்

***1993 ஆகஸ்ட் 29 'திவய்ன' ஞாயிறு இதழின் 'மானியின் கலம்' பகுதியைத் தழுவி தமிழில் எழுதப்பட்டது.***

*நன்றி: திவய்ன*

பஸ்வண்டியில் எனக்கு முன் ஆசனத்தில் உட்கார்ந்திருந்த இளம் சோடிகள் அப்படியும் இப்படியுமாக வளைந்து நெளிந்து காதல் மொழியில் குசுகுசுத்தனர். மற்றவர்களின் பேச்சைக் கேட்பது கூடாத பழக்கம் என்பது எனது மனதுக்கு பட்ட போதிலும் எனது இரு காதுகளும் அதனை அறியவில்லை.

"நாம் சின்ன ஒரு காணியை வாங்கி அதில் சிறிய ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டு இருப்போம், நல்லது தானே" காதலி தன் காதலனின் காதுப்புறமாக நெருங்கி மெதுவாக கூறுகிறாள்.

காதலனும் அதற்கு உடன்படுகிறான்.

"சரி நாம் எங்கே தான் வீட்டைக் கட்டுவது" அவன் காதலியைப் பார்த்து வினவுகிறான். "குருணகலைப் பிரதேசத்தில் எங்களுடைய ஊரிலே எனக்கு சொந்தமாக இன்னொரு காணித்துண்டு இருக்குது"

"ஐயோ, குருணகலையிலேயோ! என்னத்துக்குத் தான் சின்னக் காணித் துண்டு?" அதைச் சகிக்காத குரலில் காதலி கூறினாள். "அப்படியென்றால் நாம் அந்தப் பிரதேசத்திலே ஒரு ஐம்பது ஏக்கர் தென்னங்காணியை வாங்குவோம்."

இந்தத் தடவை காதலன் கோபமடைந்தான்.

"ஐம்பது ஏக்கர் தென்னங் காணி வாங்க என்னிடம் எங்கே இருக்குது காசு?" அவன் தணியாத கோபத்துடன் கேட்டான். "பேர்ச் ஒன்று ஐந்நூறு ரூபா விலையாக பார்த்தாலும் கூட ஐம்பது ஏக்கருக்கும் முப்பந்தைந்து இலட்சத்துக்கு கிட்ட தேவைப்படும்."

அப்போது காதலி சிரிப்புடன் தனது பையிலிருந்த செய்திப் பத்திரிகையை புரட்டினாள்.

"குருணகலைப் பிரதேசத்தில் ஐம்பத்தி இரண்டு ஏக்கர் செழிப்பான தென்னங் காணியும், அக்காணிக்குள் எல்லா வசதிகளையும் கொண்ட மாளிகையும் சேர்த்து பெறுமதி இரண்டு இலட்சம் ரூபாய் தானே" கையிலிருந்த அந்தப் பத்திரிகையைப் பார்த்து கூறினாள்.

"யாருடைய காணி அது?" காதலன் ஆர்வத்துடன் கேட்கிறான். "ஏன் அவ்வளவு லாபமாக இருக்குது?"

"இது செத்துப்போன பிரேமதாச அவர்களுடைய கஹம்பிலிய தோட்டத்து காணியின் பெறுமதிதான்." காதலி கூறினாள்,

"வேறு யாருமல்ல ஹேமா பிரேமதாச அம்மையார் தான் நீதி மன்றத்திலே சொல்லி இருக்கிறார்."

"அந்த அம்மையார் சொல்லி இருந்தா அந்தக் கணக்கு சரியாத் தான் இருக்க வேணும்". காதலன் தன் காதலி கூறியதை அங்கீகரித்த சுபாவத்துடன் "ஆனால் அவற்றையெல்லாம் என்னத்துக்குத்தான் நீதிமன்றத்தில் சொல்ல வேணும்?"

"ஜனாதிபதி பிரேமதாச அவர்கள் மரணசாசனம் எழுதி வைக்காமலே செத்துப் போயிற்றார்." காதலி கூறினாள்.

"அதனாலே தான் பாரியார் நீதிமன்றத்துக்குப் போய் சொத்துகளெல்லாம் தனக்குத் தான் சேரவேண்டும் எனச் சொல்லி இருக்கிறார்."

"இந்தப் பேச்சுக்களையெல்லாம் இதிலேயே விட்டிடுவோம். செத்துப் போன மனுஷர்களைப் பற்றி பேசாமல் வாழப்போகும் நம்மைப் பற்றி பேசுவோம். "காதலன் பிரேரித்தான்.

"அது சரி, நாம் எங்குதான் வீட்டைக் கட்டுவது?"

"நாம் கறுவாத் தோட்டத்திலே ஒரு காணித்துண்டை வாங்கி அங்கேயே வீட்டைக் கட்டிடுவம்." காதலி கூறினாள்.

"அதிகம் காசு தேவைப் படாது. பிரேமதாசவினுடைய கறுவாத் தோட்டத்து காணியும் வீடும் எல்லாமகச் சேர்த்து ஒன்பது இலட்சம் தானும்."

காதலன் மீண்டும் கோபமடைந்தான்.

"ஒன்பது இலட்சத்துக்கு கறுவாத் தோட்டத்தில் காணியும் வீடும் அல்ல இரண்டு மூன்று பேர்ச் நிலத்தைக் கூட வாங்க முடியாது." அவன் கூறினான்.

"மற்றது அந்த விலைக்கு கிடைத்தாலும் கூட கறுவாத்தோட்டத்து மனுஷரோடு சேர்ந்து நமக்கு ஒன்றாக வாழத்தான் முடியுமா?"

"அப்படியென்றால் நம்மோடு சேர்ந்து வாழக்கூடிய ஆட்கள் இருக்கிற இடமாகப் பார்த்து காணியொன்றை வாங்குவோம். வாழைத் தோட்டத்திலே மிகவும் இலாபத்துக்கு காணி வாங்க முடியுமாம்." காதலி கூறினாள்.

"பிரேமதாசவின்ர வாழைத் தோட்டத்து சுசரித்த இல்லமும் பதினான்கு பேர்ச் காணியும் சேர்த்து பெறுமதி இரண்டு இலட்சத்துக்கும் குறைவு தானே!"

"அந்த மனுஷர்கள் தங்களுடைய சொத்துக்களின் பெறுமதியைக் கூட அவ்வளவு குறைவாகத்தானே நினைக்கிறார்கள் என்றால் நாம் அவர்களைப் பார்த்து குறை கூறுவது பிழைதானே?"

காதலன் கூறினான். "இந்த மாதிரியாகத்தான் இந்த மனிதர்கள் நாட்டின்ர வாழ்க்கைச் செலவைப் பற்றியும் எவ்வளவு குறைவாக நினைத்திருப்பாங்க."

"வாழைத் தோட்டத்திலே நாம் குடியிருக்க போனவுடனே நாம் பெஜரோ கார் ஒன்று வாங்கவும் வேணும்" காதலி மீண்டும் கூறினாள்.

"பிரேமதாசவினுடைய பெஜரோ காரின் பெறுமதியும் எழுபத்தி ஓராயிரம் ரூபாய் தானும்!"

"ஆம், அது சரி இதையெல்லாம் ஹேமா அம்மையாரா சொன்னவ?" காதலன் வினவினான்.

"ஆம்".

"ஐயோ, நாம் என்ன பாடுபட்டாவது அந்த அம்மையாரை அரசியலுக்கு கொண்டு வரவேணும்." காதலன் கூறினான். "திரு.பிரேமதாசவையும் பார்க்க நல்லதொரு ஜனாதிபதியாக இருக்க அந்த அம்மையாருக்கு முடியும்."

# ஆயுதக் கொள்வனவில் ஊழல் ரணதுங்க மறுப்பு

இலங்கை இராணுவத்திற்கான ஆயுதங்கள் வாங்கியதில் ஊழல் நடந்திருக்கலாம் என்று செய்திகள் வெளிவந்ததை முன்னுள் பாதுகாப்புச் செயலாளர் சிறில் ரணதுங்க மறுத்திருக்கிருர். தற்போது இங்கிலாந்தில் தூதுவராக இருக்கும் இவர் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் டெண்டர் முறைப்படியே ஆயுதங்கள் வாங்கப்பட்டதாகவும் என்ன ஆயுதங்கள் தேவை என்பதைப் படைத்தளபதிகளே முடிவு செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

ஒரு முறை மட்டும் முக்கிய யுத்த டாங்கிகள் கொள்வனவின் போது மட்டும் இராணுவத் தளபதியின் பரிந்துரையின் பேரில் வாங்கப்பட்டதாகவும் தெரிவித்த ரணதுங்க பாதுகாப்பு செயலாளர் என்ற ரீதியில் பணம் சம்பாதித்ததாக பத்திரிகை ஒன்றில் வந்த செய்தியையும் மறுத்தார்.

# ஒற்றையாட்சி முறை மாருமல் தீர்வு இல்லை

## சிவசிதம்பரம் பேச்சு

இலங்கை ஒற்றை ஆட்சி முறைக்கு உட்பட்ட நாடாக இருக்கும், பௌத்த மதம் அரச மதமாக பேணிப் பாதுகாக்கப்படும் என்று அரசியல் அமைப்பில் உள்ளது எந்த ஒரு பல இன, மொழி கொண்ட நாட்டிலும் இல்லாத அம்சம், இந்த நிலையில் எப்படி இனப்பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரான சிவசிதம்பரம் கேட்டிருக்கிருர்.

சட்டத்தரணிகள் சங்கமும் தொழில்சார் அமைப்புகளின் சங்கமும் நடத்திய 'இலங்கை அரசியலமைப்புக்கு மாற்றம் அவசியமா' என்ற கருத்தரங்கில் பேசிய சிவசிதம்பரம் இவ்வாறு பேசியிருக்கிருர். இந்தக் கூட்டத்தில் காமினி திசநாயக்க, ஜே.ஆர், சந்திரிகா ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

1978 இல் ஜே.ஆர் புதிய அரசியலமைப்பை உருவாக்கிய போது இனப்பிரச்சனையைத் தீர்க்கக் கூடிய எதையும் அதனுள் புகுத்தவில்லை, பல இனம், சமூகம் கொண்ட ஒரு நாட்டிற்கான அரசியலமைப்பாக அது உருவாக்கப்படவில்லை, ஜுன் 7ம் திகதி நடைபெற்ற கூட்டணி மாநாட்டில் சமஷ்டி தீர்வே சரியானது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, இவ்வகையான அமைப்பிலேயே சகல மக்களும் திருப்தியாக இருக்க முடியும், 1920 இல் பண்டாரநாயக்கவும் கண்டி லீக் அமைப்பும் சமஷ்டி கோரிக்கையை முன்வைத்தன, இதே கோரிக்கையை தமிழர் கேட்ட போது தான் மோசமான விடயமாக பெரும்பான்மையினருக்கு தெரிகிறது, இது பிரிவினைக் கோரிக்கை என்று பிரசாரம் செய்தார்கள்.

சிறிநிவாசனிஞல் சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தை பாராளுமன்றத் தெரிவுக்குழு முக்கியத்துவம் கொடுத்தது, இது சமஷ்டிக்கான திட்டம் என்றும் வடக்கு கிழக்கை பிரிக்கும் திட்டத்தையும் கொண்டிருந்தது. சிறிமாவோ மங்கள முனசிங்கவிடம் இதற்கான ஆதரவை தெரிவித்தார். அமைச்சர் ஹமீது ஐ.தே. கட்சி அதை ஆதரிக்கிறது என்றும் சொன்னர்.

ஆனல் சமஷ்டிக்கு நீங்கள் ஆதரவா என்று சிறிமாவைக் கேட்ட போது அவர் மறுத்ததுடன் சில வகையான சமஷ்டிக்கே தான் ஆதரவு என்று கூறினர். ஹமீதுவும் இவ்வாறே தெரிவித்தார்.

நாம் எம் பிராந்திய தன்னுட்சியைக் கோருகிறோம் என்றல் அப்பகுதி மக்கள் தொடர்ந்தும் ஒடுக்கப்படுகிருர்கள், பிரதான கட்சிகள் இரண்டும் ஒரு இணக்கமான தீர்வுக்கு உடன்பட்டால் தான் தீர்வு காண முடியும், காலம் கடந்த நிலையிலாவது அவர்கள் உணர வேண்டும்.

இவ்வாறு சிவசிதம்பரம் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

# சபாநாயகரின் சமாதான முயற்சி

இனப்பிரச்சனைக்கான தீர்வு காணும் முயற்சியில் சபாநாயகர் முகமதுவும் ஈடுபட்டுள்ளார். அவர் தற்போது தொண்டமானின் முயற்சிக்கு ஆதரவு தெரிவித்திருக்கிருர். அவசியம் ஏற்பட்டால் தானும் யாழ்ப்பாணம் செல்வதாக சபாநாயகர் கூறினர்.

வடக்கு கிழக்குக்கான இடைக்கால கவுன்சில் ஒன்றை அமைப்பது குறித்து ஈ.பி.டி.பி யோசனை தெரிவித்திருந்தது. அதை சபாநாயகர் வரவேற்றதுடன் இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் தான் பேசவிருப்பதாகவும் அரசாங்கம் மற்றக் கட்சிகளும் இதில் அக்கறை செலுத்த வேண்டும் என்றும் கேட்டிருக்கிருர்.

இந்த திட்டப்படி தற்போது செயலற்றிருக்கும் வடக்கு கிழக்கு மாகாண சபையில் தமிழ்க்கட்சிகளின் உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றின் மூலம் இடைக்காலச் சபை ஒன்றை ஏற்படுத்தி பின்னர் தேர்தலை நடத்துவதே நோக்கமாகும். இதை ஆரம்பப்படியாக வைத்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாம் என்று சபாநாயகர் கருதுகிருர். தமிழ் கட்சிகளும் முஸ்லிம் காங்கிரஸும் இதை வரவேற்றுள்ளன.

வடக்கு கிழக்கு மாகாண சபை செயற்படாததால் அரச அதிகாரிகள் தம்மிஷ்டப்படி பணம் சம்பாதிப்பதாக தமிழ் கட்சிகள் கூறுகின்றன என்றும் இந்த கவுன்சிலில் புலிகளும் இணைந்தால் நன்று என்றும் சபாநாயகர் கூறினர்.

அரசியலமைப்புக்கு பொறுப்பான அமைச்சர் சொக்ஸி இந்த முறை சாத்தியமல்ல என்று கூறிய போதும் ஜனதிபதி இந்த கவுன்சிலை அமைக்கலாம் என்றும் சட்டரீதியான பிரச்சனைகள் இருந்தால் அவற்றை நீக்கும் வழிகளையும் ஆராயலாம் என்றும் கூறிய சபாநாயகர் நியாயமான அரசியல் தீர்வுக்கு ஆரம்ப கட்டமாக இது அமையலாம் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.



# சூன்யம்

நிவேதிகா

மெல இருட்டு...... அந்த இருட்டை பாங்கொக் மின்விளக்குகள் பிரகாசத்துடன் விரட்டியடித்துக் கொண்டிருந்தன.... இருட்டு தொலைந்து போனது..... போட்டிருந்த ஆடைகள் வியர்வையில் நனைந்து போய்கொண்டிருந்தன... பாதைகளிலே வாகனங்கள் ஊர்ந்து சென்று கொண்டிருந்தன..... ஹார்ன் இரைச்சல்கள், மோட்டார் சைக்கிள்களின் இரைச்சல்... காதைப்பிளக்க... டீசல் மணம் மூக்கை துளைத்து மனதை ஏதோ செய்தது.. சில பெண்மணிகள் நதிக்கரையோரம் நீராடுவது போல் சாரத்தை மார்புக்கு மேல் கட்டிய வண்ணம் வீதியில் கூச்சமின்றி நடந்து சென்றுக் கொண்டிருந்தார்கள்...... பாதையோரம் தேங்கிநிற்கும் சாங்கடையின் துர்நாற்றம் காற்றிலே கலந்து மயக்கத்தை தந்தது....
.

பசி அந்த லாஜ்ஜில் மூன்று நேர சாப்பாடு தரப்படும்...... அதற்கு இன்னும் நேரம் கிடக்கின்றது.... காணேஷன் பாலில் சுடுதண்ணியும், தேயிலைச்சாயமும் கலந்து ஒரு தேனீர்..... எங்கள் ஊரில் மழைக்காலத்தில் கலங்கிவரும் நீரோடையின் நிறம் போன்றிருக்கும்.... . ஒரு அறையில் நான்கு பெண்கள் ஒரு கட்டிலில் நான்கு பெண்கள்....... நான்கு பேர்களின் தெய்வங்களும் வேறு தெய்வங்கள் என குறிப்பிடுவது ஏஜென்சியை தான்....... எனது முதல் தெய்வம் எனது காசை வாங்கிக் கொண்டு ஒடிப்போய்விட்டது.... மனம் உடைந்து போன நான் இப்போது இரண்டாம் தெய்வத்திடம் காசை கொடுத்து விட்டு அதன் தரிசனத்துக்காக ஏங்கி கிடப்பதுவே வேலையாகிவிட்டது......

நாட்கள் ஊர்வது எனக்கு பயத்தையும், பீதியையும் தந்தது..... யாருடனும் பேச பிடிக்கவில்லை.... சாப்பிட பிடிக்கவில்லை. சதா என்னை ஏமாற்றி சென்ற முதல் தெய்வத்திற்கு சாபம் இட்டப்படி மனம் உறங்காது அழும்....

அந்த லாஜ்ஜியில் பல விதமான இதயங்கள் அழுது கொண்டிருந்தன.. அவனுக்கு வயது 27 தான் அவன் அந்த லாஜ்ஜில் இரண்டு வருடங்களாக தங்கியிருக்கின்றான்... அவனது தெய்வம் லட்சக்கணக்கான பணத்தை எடுத்துவிட்டு அவனை அம்போ என விட்டு சென்று விட்டது... அந்த இளைஞனை பார்ப்பதற்கு பரிதாபமாக இருக்கும். எத்தனை கனவுகளை சுமந்து அவன் பாங்கொக் வரை பறந்து வந்திருப்பான். ... அந்த லாஜ்ஜில் வந்து தங்கி வெளியூர் செல்பவர்கள் எல்லாம் போய் உதவி செய்வதாக கூறி கரையை அடைந்ததும் அப்படியே மறந்து போவார்களாம்....... அவனுக்காய் என் மனம் அடிக்கடி அழுதது..... பல முறை அவன் காசை திருப்பி கேட்டும் தெய்வம் தரிசனம் கொடுக்காமல் எங்கோ காணாமல் போய்விட்டது... தூரதேசத்தில் யாருமின்றி அவன் கைவிடப்பட்டு விட்டான். அவன் கரை சேர்வானா? என்பது ஒரு கேள்விக்குறி?

அவனைப் பார்க்கும் போது பரிதாபமாக இருக்கும். நல்ல இதயங்கள் என்றுமே வஞ்சிக்கப்படும் போலும்! நாட்கள் நகர . ....... மெதுவாக ஒவ்வொரு இதயங்களின் வாழ்க்கை வரலாற்றையும் அறிந்து வைத்துக் கொண்டேன்.... ஹீரா அவளது தலைமயிர் அழகாய் சுருண்டு கிடக்கும், அவளது மூக்கு நீண்டு பார்ப்பதற்கு அழகாய் இருப்பாள்........ அவள் இந்த லாஜ்ஜில் ஒரு வருடகாலமாக தங்கிவருகின்றாள்..... நான் இனி ஊருக்கு திரும்பி போனால் ஊரார்கள் என்ன சொல்வார்கள்...... என இரவிலெல்லாம் மௌனமாக கண்ணீர் வடிப்பாள்....... அவளுக்கு நான் எத்தனையோ முறை ஆறுதல் சொன்னேன்..... அவள் மனம் சோர்ந்து போவாள்...... ஒராண்டு முடிந்து விட்டது ....

ஒரு நாள் நானும் அவளும் கடைக்கு செல்வதற்கா சற்று தூரம் நடந்து சென்றுக் கொண்டிருந்தோம்...... .. வீதியின் ஒரத்தில் மாங்காய் கீறி உப்பு தூள் தூவி ஒரு வண்டியில் வைத்து விற்றுக் கொண்டிருந்தாள்... ஒரு இளம் பெண்.......... எனக்கு ஆசையாக இருந்தது. நான் மாங்காய் வாங்கிக் கொண்டேன்....... சாப்பிட்டுக் கொண்டே நானும் ஹீராவும் நடந்து வந்த போதுதான்...... எங்கள் பின்னால் ஒரு மோட்டார் சைக்கிள் வந்து நின்றது... திடுக்கிட்டோம்..

பாஸ்போட்... அவன் தான் கேட்டான்... .....அவன் பொலீஸ்காரனும்...... ஹீரா நடுங்கிப் போனாள்....... அவளது விசா முடிந்து எத்தனையோ நாட்களாகி விட்டன... ஆனால் அவள் புதுப்பிக் கவில்லை. புதுப்பிக்க லாவோஸ் போய் வரவேண்டும். அதற்கும் பணம் வேண்டும். ஹீரா வேகமாய் லாஜ்ஜூக்கு ஓடினாள்... . அவனும் பின்னாலேயே ஹீராவை தொடர்ந்தான். ஹீரா மாடிக்கு ஓடினாள்.. .. அதற்குள் லாஜ்ஜினுள் உள்ள பெண்கள், இளைஞர்கள் அனைவரும் சுறுசுறுப்பானார்கள்.... ஹீரா ஒரு பாஸ்போட்டுடன் திரும்பி வந்தாள்....... நான் அவளை ஆச்சரியமாக பார்த்தேன்.. அவன் அந்த பாஸ்போட்டை பார்த்து விட்டு போய் விட்டான்.

ஹீரா சிரித்தாள். அவளது கரங்களை நான் பிடித்துக் கொண்டேன்.

சிரித்த வண்ணம் "நான் மேல ஒடிப்போய் ஜெயா அக்காவின் பாஸ்போட்டை வாங்கி வந்து காட்டினேன். நம்பிட்டான். போய்விட்டான்" என சிரித்தாள்.........

அவள் சாதாரணமாக சிரித்தாள்...

எனக்கு உள்ளூர நடுக்கம் எடுத்தது.....

"ஏன் ஜீனு பயந்திட்டியா? " என்றாள்

"நான் ஒரு வருட காலமாக இப்படித்தான் இவர்களை ஏமாற்றி வருகின்றேன். பிடித்துக்கொண்டு போனால் களோ அவ்வளவு தான். ஒரு நாள் எங்கள் லாஜ்ஜில் உள்ள மூன்று பொடியன்களை பிடித்துக் கொண்டு போய்விட்டான்கள். நானும் இன்னுமொரு பெண்ணும் போய் தான் காசு கட்டி அவர்களை மீட்டுக் கொண்டு வந்தோம" என்றாள்.

ஒ! இவர்கள் எத்துனை துணிச்சலானவர்கள்..... நான் தான் கோழையா? என எனக்குள் எண்ணிக் கொண்டேன்.....

நாட்கள் ஒடிக்கொண்டிருந்தன. வித்யா என்னும் பதினாறு வயது பெண் எங்கள் அறையில் இருந்தாள் அவள் ஜேர்மன் போவதற்காக வந்திருந்தாள்.... சதா

அழுதவண்ணமே இருப்பாள்... அவளது காதலனை கொழும்பிலே விட்டு விட்டு இங்கு வந்திருந்தாள். தன் தாய் அவளை பலவந்தமாக அனுப்பி வைத்துள்ளதாக மனவேதனையுடன் சொல்வாள். அவனது போன் கோலுக்காய் இரவெல்லாம் உறங்காமல் விழித்த வண்ணமிருப்பாள். .. அவளுக்கு நான் எவ்வளவோ புத்திமதி சொல்லியும் கேட்காமல் சில சமயங்களில் சாப்பிடாமலே இருப்பாள்.......

நாட்கள் ஊர்ந்து கொண்டிருந்தன.

அன்று லாஜ்ஜில் இரவு இரண்டு பெண்கள் சுவிஸ் செல்வதற்காக பயணமானார்கள்.. ..... அனைவரிடமும் வந்து சொல்லி விட்டு போனார்கள்........ நிச்சயமற்ற பயணம்.. .. பிடிபட்டால் திரும்பி மீண்டும் இந்த லாஜ்ஜுக்கு வரவேண்டி வரும்... அவர்கள் முகத்தில் பீதி குடி கொண்டிருந்தது..... . அவர்கள் சென்று இறங்கினால் போன் பண்ணுவார்கள் என அவர்களது நண்பிகள் காத்திருந்தார்கள். . அவர்கள் பிடிப்பட்டு போனார்கள்.. மீண்டும் அந்த லாஜ்ஜியில் அந்த தெய்வத்துக்கு மீண்டும் செலவு தான்.

இன்று நரேஸ் என்னும் இளைஞன் கனடாவிற்கு பயணமாகின்றான்.. எல்லா ஏற்பாடுகளும் முடிந்தாகி விட்டதாம். அவன் கூறிவிட்டு போனான்.. உறக்கமற்ற இரவுகள் எத்தனை ... சொந்த தேசத்துக்கு போய் விட வேண்டும் என மனம் கெஞ்சியது. ஆனால் விடிந்தது நரேஸ் சோகமான முகத்துடன் நின்று கொண்டிருந்தான். அவன் பிடிப்பட்டு போனானும். இப்போதெல்லாம் கடுமையான சோதனையாம். உள்ளம் நடுங்கியது....

மாலா எனும் பெண் ஒரு வருடகாலமாக அதே அறையில் அவள் இவ்வாறு திரும்பி வந்த கதைகளை எல்லாம் கதை கதையாக சொல்வாள். மனம் அதைக் கேட்டு சோகத்தில் உறங்கிபோகும்...

அன்று என் தெய்வம் திடீரென வந்து என்னை ஆயத்தமாகி யாரிடமும் சொல்லாமல் புறப்பட சொன்னது. சொல்லிவிட்டு போனால் ஒன்றும் சரிவராது. சே! கூட இருந்தவர்களிடம் எப்படி சொல்லாமல் புறப்படுவது....... வேறு வழியின்றி அவர்களிடம் சொல்லாமலே புறப்பட்டேன்...

மீண்டும் வந்த நாட்டுக்கு......அங்கிருந்து போகலாமாம்... மனம் சோர்ந்து போனது. அழுகை அழுகையாக வந்தது இப்படியெல்லாம் தெரிந்திருந்தால் நான் வந்திருக்கவே மாட்டேன்...... சே........ கடவுளே நீ தான் என்னை காப்பாற்ற வேண்டும்.

அந்த விமான நிலையத்தில் மனப்போராட்டத்துடன்.. பரிசோதனைகள் முடிவடைய குடைந்து குடைந்து கேள்விகள் கேட்கப் படுகின்றன..... சாதாரணமாகவே பதிலளித்த நான்... அந்த விஷப் பரீட்சையில் சித்தியடைந்து விடுகின்றேன்......இரண்டு மணித்தியால விஷப் பரீட்சைக்குப் பின் விமானம் ஏறி ஒரு மூலையில் அமர்ந்து கொள்கின்றேன். எங்கிருந்து ஏறினேனோ அங்கேயே சென்று இறங்கினேன்.. மீண்டும்......

நாட்கள் ஓட நம்பிக்கை இழக்கலானேன். .... நான் ....... அன்று என் தெய்வம் மீண்டும் திடீரென தோன்றி பணம் தேவை என்றது...... உடனே கடன்பட்டு பணத்தை தேடி கொடுக்க நான் மீண்டும் விமான நிலையத்திற்கு கூட்டி வரப்பட்டேன்.... அங்கு மாபெரும் விஷப்பரீட்சை! அதிலும் சித்தி........ நான் மெதுவாக விமானத்தை நோக்கி நடக்கின்றேன்....... எல்லோரும் ஆசனத்தில் அமர்ந்திருக்க நான் மட்டும் கடைசியாக ஒரு ஆசனத்தில் அமர்ந்துக் கொள்கின்றேன்..... சில விநாடிகளில் விமானம் பறக்கின்றது....... என் மனம் அந்த லாஜ்ஜை சுற்றிதான் வருகின்றது. அந்த லாஜ்ஜில் ஒரு அழகான பெண்..... .. சுலோமி.........அவள் பெயர்.. அவள் பெயருக்கேற்ற அழகு... சிவந்த நிறமும் நீளமான கூந்தலும்..... கருவிழிகளும்.... ... நீண்ட புருவமும், அவளது உயரமும் மெல்லிய உருவமும். அவளை ஒரு பேரழகியாகதான் காட்டியது. சுலோமியை கண்டு சில பெண்கள் பொறாமைப்பட்டார்கள்... ஹீரா, மாலா யாரும் சுலோமியுடன் கதைப்பதில்லை.... ஏன்? எனக்குள் கேள்விகள் வியாபிக்க தொடங்கியது.... அப்போது தான் ஹீரா கதை கதையாக சொன்னாள்..... சுலோமி பிரான்சுக்கு போக வந்தவள்.... அவளுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு அவளை மணமுடிக்கப் போபவன் தான் கூப்பிட்டிருந்தான். அவள் பேங்கொக் லாஜ்ஜில் தங்கியிருக்கும் போது பக்கத்து லாஜ்ஜிலிருந்து புதிதாக பிரான்சிலிருந்து வந்திருந்த ஒரு இளைஞன் அடிக்கடி இவளிருக்கும் லாஜ்ஜுக்கு வந்துப் போனான்....... அவளுக்கு அவன் மேல் காதல் பிறந்து விட்டது.

ஒரிரு நாட்கள் மலர்ந்த காதல் அது ஆனால் அவளை எத்தனையோ வருடங்கள் அவளுக்காய் காத்திருந்து அவளை கூப்பிட்டவனை விட்டு விட்டு இன்று இவனுடன் இவள் பிரான்சுக்கு செல்கின்றாள் ..... அவனையே அவள் மணம் முடிக்க போகின்றாளாம்...

எத்தனை இதயங்கள் இந்த உலகில் வாழ்கின்றன........ எங்கும் மேக கூட்டம்! ஒன்றும் தெரியவில்லை...... விமானம் வானுயர பறந்துக் கொண்டிருந்தது..... மனம் அமைதியின்றி தவித்தது........ எத்தனையோ மணித்தியாலங்கள் பறந்த விமானம்...... மெதுவாக தரை இறங்கியது.... இதயம் வேகமாக அடித்துக் கொள்ள.... நிவ்யோர்க் விமானநிலையத்தில் விமானம் தரை இறங்கியது....... அறிமுகமில்லாத இடம், முகங்கள், ........ பரிசோதனை........ பரிசோதனை... மாபெரும் சோதனை இதுதானோ..... என்னை ஏற இறங்க பார்த்த அந்த மனிதன் எனது புத்தகத்தில் சீல் அடித்து என்னிடம் புத்தகத்தை தந்து விட நான் மெதுவாய் நன்றி கூறி வெளியேறுகின்றேன்....

வெளியே வந்த நான் நியூ யோர்க் நகரில் உயர்ந்து நிற்கும் கட்டிடங்களை அண்ணாந்து பார்க்கின்றேன்.....

அழுகை தொண்டை வரை வந்து போனது... யாரும் தெரிந்தவர்கள் இல்லை. ...... என் நண்பியின் தொலைபேசி இலக்கத்தை சுழற்ற.. அவள் என்னை தனது வீட்டு விலாசத்துக்கு வரும்படி கூற நான் டாக்சியில் ஏறி அவளது வீட்டுக்கு போகின்றேன்..........அவள் என்னை கட்டியணைத்து முத்தமிடுகின்றாள். களைத்துப்போயிருந்த என்னை குளித்து விட்டு வரும்படி கூறினாள்.........

அவள் சமைத்துக்கொண்டிருந்தாள்.... நான் குளித்துக் கொண்டிருக்கும் போது திடீரென கொதி தண்ணீர் என்னை சுட்டு பொசுக்கியது. கத்திவிட்டேன். நண்பி வெளியிலிருந்து கத்தினாள். "மன்னித்துக் கொள் மறந்து போய்விட்டேன் யாராவது குளிக்கும் போது கிச்சன் பைப்பை திறந்தால் அங்கு தண்ணீர் கொதித்தவாறு வரும்" என்று. ஓ... நியூ யோர்க்கில் அப்படித்தானோ! என்றேன் "இல்லை என் வீட்டில் அப்படி" என்றாள்......

என் தலைவிதி என்னை இங்கே கொண்டு வந்து விட்டது. தங்கள் தலைவிதிகளை பாஸ்போட்டுக்களோடும் பணத்தோடும் சேர்த்து ஏஜண்டுகளிடம் அடைவு வைத்து... கற்பனை செய்திரான இடங்களில் எதிர்காலம் சூனியமாக நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் மற்றவர்கள்....

# ஜெயந்தீஸனுக்கு இரண்டு வயதாம்!

## கொஞ்ச(சு)ம் குறிப்புகள்

அண்மைக் காலங்களாக நான் காதல் கவிதைகளையே நிறைய எழுதியுள்ளேன். மனிதிலே காதல் வித்துக்கள் தூவப்படும்போது சாதல் கவிதைகளா எழுதவரும்? காதல் விநோதமானது. சிலவேளைகளில் ஏற்கனவே எழுதிய காதல் கவிதைகளை மீள வாசிக்கும்போது சிரிப்புத்தான் வரும். வாழும் கணங்களினது பதிவுகளாக உள்ள இந்தக் காதல் கவிதைகள் முழுக்க முழுக்க அர்த்தங்களைக் கொண்டிருக்காதெனக் சொல்ல முடியாது. பின்புலம் பற்றிய எந்த ஆராய்ச்சிகளையும் செய்யாமல் நாம் எழுதுபவை காதல் கவிதைகள் மட்டுமே. எனவேதான் காதலிகள் தமது கபாடங்களை இறுகப் பூட்டிக்கொள்ளும் வேளைகளில் கூட, நான் இவைகளுக்குப் புனித அர்த்தங்கள் கொடுக்கின்றேன். வழமைபோல இன்று காலையிலும் TENNYSON இனது மிகவும் அற்புதமான காதல் கவிதைத் தொகுப்பை புரட்டினேன். மனதில் சில கவிதை வரிகள் தைத்தன நீங்களும் அதை வாசியுங்களேன்....

What is she now? my dreams are
bad. She may bring me a curse
No, there is fatter game on the moon:
she will let me alone.
Thanks, for the friend best knows
whether women or man be the worse
I will bury myself in my books, and
the Devil may pipe to his own

★ ★ ★

எனக்கல்ல எனது குட்டிக்கதைகளின் தொடருக்குத்தான் இரண்டு வயது. 1991 செப்டம்பரில் தான் தாயகத்தில் எனது முதலாவது குட்டிக்கதையான "உண்மை" பிரசுரமானது இந்த நிகழ்வின் பதிவாகவே வாசகர், வாசகிகளுடன் நெஞ்சம் திறந்து சில கொஞ்சும் குறிப்புகளை எழுதவேண்டும் என்ற விருப்பம் எனக்குள் ஏற்பட்டது.

"கொஞ்சுதல்" ஆபாசமான ஒரு சொல் அல்ல. பிரெஞ்சுக் காதலர்கள் சுரங்க ரயில்களிலே தம்மை மறந்து கொஞ்சிக் குலாவுவதை அடிக்கடி ரசித்துள்ளேன். எமது கிராமப் புறங்களிலே முதியோர் தமது பேரப்பிள்ளைகளை இழுத்துக் கொஞ்சுவதை காணுதல் இனிமை தருவது. நான் கொஞ்சியவன் மட்டுமல்ல, கொஞ்சப்பட்டவனும் கூட. பிரெஞ்சுப் பெண்களின் கொஞ்சுதல்கள் பகிரங்கமானதெனில், தமிழ் பெண்களினது கொஞ்சுதல்களோ பரம ரகஸியமானவை... சித்திரமயமான உலகை நாம் விசித்திரமயமாக்க வெளிக்கிட்டதால் வந்த விளைவுதான் இது... ஒழுக்கம் பேசியே அழுகிக்கொண்டிருக்கும் தமிழர் சமூகத்துள், அடிக்கடி நான் என்னைத் தீக்கோழியாக்கி, எனது தலையை மண்ணுள் புதைத்துக் கொள்கின்றேன்.

...★ ★ ★

ஜயா பற்றி சின்னக் கதை சொல்லவா? ஜெயந்தீஸனுக்கு விளம்பரம் தேடுவதிலே இன்று முன்னணியில் நிற்பவர் இவர்தான். அண்மையிலே லண்டன் சென்ற இவர், தான் ஜெயந்தீஸனைக் கண்டு பிடித்துவிட்டதாக சேமம் இழுத்தாராம். இவர் ஓர் பரிசு கெட்ட எழுத்தாளர்! இவரது நிழல் பட்டாலேயே, எமது புதிய எழுத்தாளர்களினது எழுத்தாற்றல் கருகிப் போய்விடும். ஜயாவைக் கௌரவிக்குமுகமாக நான் ஒரு புதுக் குறள் எழுதியுள்ளேன். இதோ!

இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
"பொன்னுடை" போர்த்தி விடல்
"ஏன்? ஒரு பொற்கிழியையும் புடிச்சுக் குடுத்துவிடலாமே"

★ ★ ★

புகலிடத்துக்கு வந்த, வரவிருக்கும் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளை நான் எனது தொடரில் அதிகம் தொட்டுள்ளேன். நான் என்னை ஒரு பெண்ணிலைவாதியாகப் பிரகடனப் படுத்திக் கொள்வதுதான் இதற்குக் காரணம். பிரச்சனைகளுக்குக் காரணம் ஆணு பெண்ணு என்பதல்ல பிரச்சனை. .. இருபக்கத்திலுமே பிரச்சனைகள் தோன்றுகின்றன. ஆண்கள் சோகக் கவிதைகள் எழுத பெண்களும் காரணிகளாக அமையலாம் என்பதைப்போல, பெண்கள் "பிடி சாபம்" போட ஆண்களும் காரணமாக அமையலாம். எது எப்படியோ, புகலிடத்தில் வாழும் "பொன்"மனச் செல்வர்கள் மீதான எனது விமர்சனம் ஓர் தொடர்கதையாகவே இருக்கும்.

★ ★ ★

தாயகத்தின் அமைப்பு மாறிவிட்டது. எனவே எனது குட்டிக்கதைத் தொடரினது அமைப்பையும் மாற்றி விடலாமென என்னிடம் ஒரு ஐடியா உள்ளது. இதேவேளையில் சில பரிசுத் திட்டங்களையும் தாயகம் வாசகர்கட்கு அறிமுகப்படுத்தவுள்ளேன்.

இதேவேளையில், ஆபிரிக்காவிலே, சுன்னத்துக் கலியாணம் செய்து கறுப்பிகள் சிலருடன் வாழ்பவரும், பில்லி சூனிய வித்தைகளைக் கற்று அதையே தொழிலாக கொண்டவருமான எனது சொந்த தம்பி "புதுமைப்புத்தன்" (இவன் புதுமைப் பித்தனல்லன், புத்தன்) தனக்குத் தாயகம் ஒழுங்காகக் கிடைப்பதாகவும் தானும் அதற்கு எழுத விரும்புவதாகவும் எழுதியுள்ளான். நானறிந்த வரையில் இவன் பேனாவைத் தொட்டதில்லை. என்ன எழுதுவான், எப்படி எழுதுவான் என்பதை நினைக்க எனது நெஞ்சு படக் படக்கென அடிக்கின்றது....

★ ★ ★

எனக்கு இரண்டு வயது பூர்த்தியானதைக் கொண்டாடுமுகமாக நான் ஓர் விசேஷ குட்டிக்கதை எழுதி வைத்துள்ளேன். இதனது பெயர் "தாயகம்" புதுவடிவம் பெற்றுத் "தாயகம்" எனது கைக்கெட்டியபோது ஏற்பட்ட திகிலூட்டும் அனுபவங்களைக் கொண்டது. அடுத்த வாரம், உங்கள் வாசிப்பிற்காக இது தாயகத்துக்கு அனுப்பப்படும். கதை எப்படி அமையும் என்பதை விளக்கும் ஓர் சூஷகக் குறிப்பு "என்னிடம் 3 உள்ளது, நீ எனக்கு 18 ஐத் தருவாயா?"

★ ★ ★

# எனக்கும் ஒரு ஆசை!

தாயகத்தில் நான் ஏன் எழுதக்கூடாது என ஒரு சின்ன ஆசை. சிந்திக்க முடிகிறது ஆனுல் எழுத்தில் வடிவம் பெற மாட்டேன் என்கின்றது. தாயகம் என் கரங்களுக்கு வரும் வரை பதட்டம், வந்த பின்பும் பதட்டம், சந்தா கட்டாமலே என் நண்பன் தொடர்ந்து பத்திரிகை வாசித்து வருகிருன்..

நான் வாசித்து முடிக்கும் முன்பே கை மாறி பல இடங்கள் மாறி விடுகின்றன. .. பல நாட்களாய் எழுத வேண்டும் என ஆசை. ஆனுல் முனியைபோல் எழுத முடியுமா? கியூறியஸை போல் எழுத முடியுமா? அசை சிவதாசனை போல் எழுத முடியுமா?

சிறிமா ஆசனத்தில் அமர்ந்த நாளையும் ஜே. ஆர் ஆசனத்திற்காக போட்டியிட்ட நாளையும் நினைவில் வைத்திருக்கும் சின்னத்தம்பி வேலாயுதம் போல் எழுத முடியுமா? வீடியோவில் பெண் பார்க்கும் யூரோப் ஹீரோக்களைப் பற்றி எழுதும் ஜெயந்தீஸனைப் போல் எழுத முடியுமா? மரபும் கவிதையுமாக கிரிதரனை போல் கட்டுரை எழுத முடியுமா? கே. எல் நேசமித்திரன் போல் காதல் கதைகளை கற்பனையில் எண்ண முடியுமா? நிச்சயமாக என்னுல் முடியாது. அட்லீஸ்ட் கவிதைகளாவது....

இரத்த கறைகளற்ற
தெளிந்த நீரோடையில்
நான் சிறகு நனைக்க வேண்டும்

என்று எங்கிருந்து இந்த வரிகளை மொனிக்கா உருவாக்கினுர் இவற்றை போன்று ஆழமான சிந்தனை எனக்கு வருமா?

21.5.1993 தாயகத்தில் அசை சிவதாசனின் 3124 வது செம்மறியை தேடல் என்ற தலைப்பின் கீழ்...

உலக ஜாதகத்தில் கிரக நிலைகள் கொஞ்சம் கூட சரியாக இல்லை. கேந்திர ஸ்தானங்களில் எல்லாம் நீசக்கிரகங்கள் பலம் பெற்று எந்தவொரு கிரகங்களிடையேனும் சுப பார்வை கிட்டாது, ஆயுத பகவான் உச்சம் பெற்று மனித உயிர்கள் தோஷம் பெற்று ஒரே அல் லோலகல் லோலப் பட்டுக் கொண்டிருக்கிறது உலகம்.

என்ற கட்டுரையின் ஆரம்பம் எத்துனை ஆழமான கருத்துக்களை இவர்களால் எப்படி எழுத முடிகிறது.....

இவர்களுக்கு மத்தியில் எங்களைப் போன்றவர்களின் கருத்துக்களை யெல்லாம் தாயகம் ஏற்றுக் கொள்ளுமா? என்பது ஒரு கேள்விக் குறிதான்.........

...?தாயகத்தில் எழுதி வரும் எழுத்தாளர்களின் எழுத்துக்களில் ஒர் வெளிச்சம் உண்டு......... ஆறுதல் உண்டு.......நாட்டுக்காக அழும் போது எடிட்டோரியல் ஆறுதல் தரும் வேஷம் போடும் நண்பர்களை எண்ணும் போது அறுசுவை ஆறுதல் தரும். வாழ்க்கையை எண்ணி கலங்கும் போது அசை ஆறுதல் தரும்....

சிந்திக்க தூண்டும் தாயகம்... எம் போன்றவர்களின் எழுத்துக்களையும் ஏற்றுக் கொள்ளுமா?

**து.தேவேந்திரன்**
**(ஜேர்மன்)**


# Antony Brothers Peoples Market

**1472 QUEEN ST WEST**
**(LANSDOWNE)**

**இவ்வார விசேட விலைகள்...**

பல்கன் பஸ்மதி அரிசி 6.99
4 ரூத் மைசூர் பருப்பு 2.49
2 லீற்றர் கொக்கோ கோலா 1.59
சன்யோ T 20 வீடியோ கசட்டுக்கள் 2.99
உள்ளி .99
பால் 2% 2.99
தயிர் 1.59
மரக்கறி எண்ணெய் 2.99
பத்து ரூத் வெங்காயம் 1.99
கோழிக்கால் ரூத் 79 சதங்கள்
10 கிலோ பார்பொயில் அரிசி 5.99

**எம்மிடம் சகலவிதமான மரக்கறிகளும் மலிவு விலையில்**

# Antony Brothers Fashion House

*1484 Queen St West*

**சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உடைகள், பரிசுப் பொருட்கள் அனைத்தும் ஒரே இடத்தில் மலிவு விலையில்**

காலத்தின்
இலக்கியக் கலந்துரையாடல்

சுந்தர ராமசாமி
கலந்து கொள்கிறார்

என்.கே.மகாலிங்கத்தின்
'உள்ளொலி' கவிதைத் தொகுப்பு
வெளியீட்டு விழா

11.9.93 சனிக்கிழமை
பி.ப இரண்டு மணி முதல்

100 St.George St
(St.George Subway)
University of Toronto, Sidney
Smith Hall

அன்னை
வேளாங்கண்ணி
திருநாள் திருப்பலி
ஆராதனைகள்
12 செப்டம்பர்
ஞாயிற்றுக்கிழமை
மாலை 4.30 மணிக்கு
புனித மரிய கொரற்றி
ஆலயத்தில்
நடைபெறும்

717 Kennedy Rd,
Scarborough

**விவேகானந்தர்**
**வாழ்க்கை வரலாறு நாட்டிய**
**நாடகம்**

மட்டக்களப்பு இராமகிருஷ்ண சங்க
சிறுவர் இல்ல நிதிக்காக

செப்டம்பர் 12, ஞாயிறு
மாலை 5 மணி
றெஸ்டேல் கல்லூரி
(Castle Frank Subwayக்கு எதிரில்)

கட்டணம்
10 டொலர்
7 டொலர் (முதியோர், மாணவர்)
35 டொலர் (நான்கு பேருக்கு
மேற்பட்ட குடும்பம்)

தொடர்புகளுக்கு
696 5501

இளமாலை


இளவாலை
புனித ஹென்றிஸ் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
இரண்டாம் வருட விழாவை ஒட்டி
இளமாலை நிகழ்வை
வழங்குகிறார்கள்

நடனம், நாட்டிய இசை நாடகம்,
நகைச்சுவை நாடகம், சுருதியின்
'என்றும் இனியவை'

புரட்டாதி 18ம் திகதி மாலை 6.30
மணிக்கு
Glen Forest Secondary School
3575 Fieldgate Ave

பிரவேசம் 7 டொலர் மட்டுமே

# வினா(?)



**நவகீதன்**

அழு! அழு! இன்னும் நன்றாக அழு! இந்தக் கல்மனம் கரைந்து போகும் வரை அழு! நான் உனக்காக இரங்கும் வரை அழு! விழிகளைத் துடைக்காதே! கண்ணீர் கொட்டட்டும்! மழைபோல கொட்டட்டும்! உனது முகம் எப்போதும் கறுத்துக் கிடக்கும் முகிலாகவே இருக்கட்டும்! செங்கமலம்! ஏன் நீ அழாதுள்ளாய்? அழு! செங்கமலமே அழு! எனது கல் மனதைக் கரைய வைத்து அங்கே இரக்கம் கசிய வைக்க உனக்கு விருப்பமில்லையா? செங்கமலமே! அழு!

அரங்கில் நிசப்தம்.... எனதும் அவளதும் நடிப்பிலே சனங்கள் லயித்திருப்பதை உணர்ந்தேன். "கண்ணீர்" ஆறாவது தடவையாக மேடையேறியுள்ளது. டிக்கெட் கிடைக்காமல் பலர் கோபத்துடன் திரும்பிப் போனதை மேடையில் ஏறுமுன்னர் நான் கண்டிருந்தேன்.

கடைசிக் கட்டம்.....

அழு! செங்கமலம்! அழு! நான் கோபம் கொண்டு கத்தினேன்.

நான் அழாது விட்டால் நீங்கள் இரங்க மாட்டீர்களா?

இரக்கத்தைத் தொலைத்து விட்டேன். மனது கல்லாகிவிட்டது. அதற்குள்ளே இரக்கம் முளைப்பதாயின் நீ அழவேண்டும்.... செங்கமலமே! தயவு செய்து என்னை இரங்கச் செய்! அழு! அழு!

செங்கமலம் அழுதாள். உண்மையாகவே கண்ணீர் கொட்டுண்டது..... குரல் தளும்பியது... எனக்குள் இரக்கம் மெல்ல மெல்ல விகசித்தது... நான் அவளைத் தொட்டேன். தழுவினேன்.... என்விழிகளும் அழுதன. திரை மூடப்பட்டது.......

★ ★ ★

"உங்கடை நடிப்பு சுப்பர்" ஒரு இளம் பெண் வந்து தனது அபிப்பிராயத்தைச் சொல்லி விட்டுப் போனாள். இதன் பின்னர் பலர் கூடி என்னை வாழ்த்தியபடி...... பாராட்டுகள் அனைத்தும் எனக்குள் சந்தோஷத்தினைத் தந்தனவா? நான் எனக்குள் அழுது கொண்டிருந்தேன்.

"எங்கடை குறுாப்பிலையும் நடிப்பியளோ!" என நாடக இயக்குநர் செல்வராசா வந்து என்னிடம் கேட்டார். "நான் அரசியல் நாடகங்களிலே நடிப்பதில்லை என்பதைத் தெரிந்த பின்னரும் ஏன் இப்படிக் கேட்கின்றீர்கள்?" என்றதும் முகத்தைக் கோணலாக்கிக் கொண்டு போய் விட்டார்.

நாடகம் பார்க்க வந்த சனங்கள் மெல்ல மெல்ல வெளியேறிக் கொண்டிருந்தன. தூரத்திலே ரேவதி தனது கணவனுடன் தட்டுப்பட்டாள். எனக்கு நன்றாக அழத் தெரியும் என்பதை அவளை விட வேறு யாரும் அறியார். நான் நடிக்கின்ற நாடகங்கள் என்றால் தவற விடமாட்டாள். ஒரு கடவை கூட எனக்கு முன்னே வந்து "உங்களது நடிப்பு நன்றாக இருந்தது" என அவள் சொன்னதேயில்லை. அவளுக்குத் தெரியும் நான் ஒரு போதுமே அவளுடன் நடித்ததில்லையென்று......

ரேவதியும் நானும் கடைசியாகச் சந்தித்த அந்த தினம் என்முன் நாடகக் காட்சியாக.......

"ரேவதி! நாங்கள் எங்காவது ஓடிப்போவோம்!"

"என்னை மறந்து விடுங்கள்....."

"ஏன்?"

ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்?

அதனை மட்டும் அவள் ஒரு போதுமே சொன்னதில்லை. நான் அழுதேன். அவளது மனம் கல்லாக. எனது கண்ணீர்த் துளிகள் எதுவுமே அவளது கல் மனத்தைக் கரைய வைக்காமல். சதுரம் நடுங்க அழுதேன்....

"ரேவதி! நீ என்னை விரும்பவில்லையா?"

"உங்களை நான் விரும்புகின்றேன்...."

"எனக்காக நீ இரங்க மாட்டாயா?"

"விடைகளைத் தேடவேண்டாம்.... நான் போய் வருகின்றேன்."

கனவுகள் உடைந்தன.... பிரமச்சாரியம் பூணுவதென முடிவெடுத்தேன்... மேடைகளில் ஏறுவதையும் தவிர்த்துக் கொண்டேன். இந்தக் கால கட்டத்தில் என்னால் எழுதப்பட்ட நாடகமே "கண்ணீர்" கவலையோடு காலங்களைக் கழிக்கும் என்னால் எப்படி, ஒர் இரக்கமற்ற□ அத்தோடு சற்றே வக்கிரத் தனத்தோடு இரக்கத்தைத் தேடும் ஒர் ஆண்பாத்திரத்தை எனது நாடகத்தின் இயக்குநரான குணசிங்கத்தால் உருவாக்க முடிந்தது என்பதை விளங்கமுடியவில்லை.

மேடையில் பின்புறம் சென்றேன். செங்கமலமாக நடித்த சுதர்சினி தனது மேக்கப்பை அகற்றிக் கொண்டிருந்தாள். அவள் தனது கூந்தலைப் பின்னிக்கொண்டே, "நான் நன்றாக அழுதேனா?" கேட்டாள்.

"நானும் அழுதேன். இது உனக்குத் தெரியுமா?"


"தெரியும்".

செங்கமலம் பாத்திரத்தில் நடித்த கீதா கர்ப்பிணியாக இருந்ததால், அவளது இடத்துக்கு வந்த புதுமுகம்தான் சுதர்சினி. எனக்கும் அவளுக்குமிடையே 10 வயது வித்தியாசம். சிட்டுக்குருவியின் சின்ன விழிகளைக் கொண்ட அவள் எனது சோகங்களில் மிகவும் இயல்பாகவே, பங்கெடுக்கப் பழகியவள். ரேவதியை நான் லவ் பண்ணியதெல்லாம் அவளுக்குத் தெரியும். குறுகிய காலப்பழக்கமெனினும், எனது கலங்கிய மனதினுள் ஒர் அமைதியைக் கொள்டு

வரவேண்டுமென மனதார விரும்புகின்றவள். அடிக்கடி போன் பண்ணி, என்னைத் தேற்றுவாள்.
"சுதர்சினி!" நான் அவளை அழைத்தேன். முகம் வினாக்குறியாக மாற என்னைப் பார்த்தாள்.
"நான் இனிமேல் நடிப்பதை நிறுத்தப் போகின்றேன்...."
"என்ன? "எனக் கேட்டபோது அவளது விழிகள் பெரிதாக விரிந்தன. "நீங்கள் நடிப்பதை நிறுத்துதல், நாடகத்துறைக்கே பெரிய இழப்பாகிவிடும். சோகங்களிலிருந்து அமைதி பெறக் கலை உதவும்.... உங்களோடு நடிக்க வெளிக்கிட்டபின்னர் நான் நிறையக் கற்றுவிட்டேன்... உங்களது ஊக்குவிப்புகளை என்னால் மறக்க முடியாது......"
"சுதர்சினி! ரேவதி என்னை விட்டுப் பிரிந்ததற்கான காரணம் எது என்ற கேள்வி பாம்பாகி என்னைத் துரத்துகின்றது.... இந்தக் கேள்விக்கு விடை கிடைக்காதிருக்குமட்டும் எனக்குள் அமைதி வந்துவிடாது...."
சுதர்சினியின் கணவன், கார்த்திறப்பைக் கையில் ஆட்டியபடி வந்து சேர்ந்தார். அவள் அவருடன் போகப் போகின்ருள் என நான் நினைக்க .... "இன்றிரவு எங்கள் வீட்டில் தங்கலாமே!" எனக் கேட்டார்.
"உங்களைத் தொல்லைப்படுத்த விரும்பவில்லை...."
"ஒரு தொல்லையுமில்லை. வந்து காருக்குள்ளே ஏறுங்கள்...."
சுதர்சினி வீட்டிற்கு ஒரேயொரு தடவை மட்டும்தான் போயிருந்தேன். இரண்டு பேருமே இனிமையானவர்கள் அவள் ஒரு நல்ல நடிகையாக வரவேண்டுமென்பதிலட் ஆர்வம் கொண்டவர்தான் அவர். பின் சீட்டில் நான் ஏறப்போக, அவர், என்னை முன் சீட்டிற்கு அழைத்தார்.
"உங்களது நடிப்பு ஒவ்வொரு தடவையும் மிகவும் வித்தியாசமானதாகவுள்ளது, நாடகக் கல்லூரியொன்றில் நீண்டகாலமாகப் படித்தீர்களா?"
"படித்ததுமுண்டு, படிப்பித்ததுமுண்டு.. நீங்கள் ஏன் ஒரு இயக்குநராக வராமல், நடிகனுகவே மாறிக் கொண்டீர்கள்?" எனச் சுதர்சினி கேட்டாள்.
என்னால் எந்தப் பதிலையும் சொல்லமுடியாது போய் விட்டது மௌனமாக இருந்தேன். வீதியிலே வாகன நெருக்கடி இல்லாததால், கார் விரைவிலே அவர்களது வீடு வந்து சேர்ந்தது....

ஒப்பனையின் பதிவுகளை அழிக்க நான் குளித்தேன். எனக்குப் பின்னர் சுதர்சினி குளிக்கப் போனுள். அவளது கணவன், ஒரு கிளாஸில் விஸ்கியைக் கொண்டுவந்து என்னிடம் தந்துவிட்டு சாப்பாடு ஏற்பாடுகளை கவனித்தார்.
"ஏதாவது உதவி செய்யலாமா?" கேட்டேன்
"மத்தியானம் சமைத்தவைகள் அப்படியேயுள்ளன. சூடாக்குவது மட்டும்தான்....." என்றபடி "புதிதாக நாடகம் ஏதாவது எழுதிக் கொண்டுள்ளீர்களா?" என்று கேட்டார்.
"விழிகள் என்ற பெயரிலே ஒரு நாடகம் எழுதுவதற்குத் திட்டமிட்டுள்ளேன்.... முழுக்க முழுக்க பெண்களை வைத்தே இந்த நாடகம் அமைய வேண்டுமென்பதுதான் எனது விருப்பம்... ஆனுல், சுதர்சினி போல மேடையிலே துணிந்து நடிக்கக் கூடிய பெண்களைப் பிடித்தல் கடினம்.... சில நடிகர்கள், பெண் பாத்திரமொன்றுடன் நடிக்க வேண்டியுள்ள பட்சத்தில் அவர்களது மனைவிமாரே நடிகைகளாகின்றனர்.... ஒரு பெண் மேடையில் ஏறுவதென்பதல்ல முக்கியம், அவள் நடிகையாக இருக்கவேண்டும்...." என நான் சொல்லிக் கொண்டிருந்தபோது சுதர்சினி குளியலறையை விட்டு வெளியே வந்தாள். மனதைத் தடவிச் செல்லும் விதத்திலே வடநாட்டு இசையொன்றைப் போட்டுவிட்ட பின்னர் சாப்பாட்டு மேசையைத் தயார் செய்தாள்.........
சாப்பிடும் போது நாம் நிறைய விஷயங்களைப் பேசினேம். சுதர்சினி சில ஜோக்குகளையும் விட்டாள். என்னால் விழுந்து விழுந்து சிரிக்கமுடியவில்லை. அந்த வினுவிற்கு விடைகாணுமட்டும் என்னால் எப்படி அமைதியாக இருக்கமுடியும்? நேரம் போவதையும் மறந்து எமது சம்பாஷணை தொடர்ந்தது. .. அவர் கண்ணயர்வது போலபட்டது.. குறை நினைக்க வேண்டாம். நான் தூங்கப் போகின்றேன். நீங்கள் பேசிக்கொண்டிருங்கள்" என்றபடி அவர் படுக்கை அறைக்குள் போனுர்.
"கோப்பி போடவா?" எனக் கேட்ட சுதர்சினியிடம், "நான் போட்டுக் கொள்கின்றேன். களைப்பாக இருந்தால் போய்ப்படு" என்றேன்.
"எனக்குக் களைப்பில்லை... உங்களோடு நான் பேச வேண்டும்... உங்களது மனதுக்குள் புதையுண்டு போன சோகமுள்ளை எப்படியாவது எடுக்கவேண்டும்...."
"எனக்காக நீ ரேவதியுடன் பேசுவாயா?"
"போனவாரம் அவளோடு நான் பேசினேன். உங்களைத்தான் இன்னும் விரும்புவதாக சொன்னுள்... பிரிவின் காரணத்தை மட்டும் சொல்ல மறுத்துவிட்டாள்... அவளது மனம் ஏன் இப்படி மாறியது என்பதை என்னால் விளங்க முடியாமலிருக்கின்றது......"
"எனது மனதில் அவளுக்கு அக்கறை இருந்திருப்பின் எப்போதோ உண்மையைச் சொல்லியிருப்பாள்...."
"உண்மையைச் சொல்லப் பயப்படுகின்ருளோ?"
"ஒருவேளை அப்படியுமிருக்கலாம்......... உண்மையைச் சொல்ல ஏன் பயப்படவேண்டும்? அவளது மனதின் மாற்றமும் அதனுள்ளே ஒழிந்து கிடப்பவைகளும் எனக்குத் தெரியாதவை...."
"நீங்கள் இப்படியே தொடர்ந்தும் வாழ்ந்தால் சோகம் தான் கூடிக்கொண்டு செல்லும்... ஒரு திருமணத்தைச் செய்தால் ........ சரி நீங்கள் இப்போது யாரையாவது காதலிக்கின்றீர்களா?"
சுதர்சினி என்னை ஆழமாகப் பார்த்தாள். நான் யாரையாவது காதலிக்கின்றேனு? வினுப் புழு என் மனதைக் குடைந்தது.
"சுதர்சினி! சொல், ஏன் ரேவதி என்னைக் காதலிக்காது விட்டாள்... ஏன், எனது மனதுள் ஒரு முள்ளைச் செருகி விட்டுப் போனுள்?"
எந்தப் பதிலும் சொல்லாமல், எழுந்து ஒரு அல்பமொன்றை எடுத்து எனக்கு முன்னே போட்டுவிட்டு "இவளை உங்களுக்குத் தெரியுமா?" என ஒரு படத்தைக் காட்டிக் கேட்டாள்.
எனக்கு அவளைத் தெரியாது. ஒரு போதும் நான் அவளைக் காணவும் இல்லை. யாரிவள்?
"இவள் உங்களைக் காதலிக்கின்ருள்..... யாரிவள்? இவள் முள்ளா? அல்லது மலரா? யாரிவள்?
என் முன் விகர்சித்தது வினு.


# WE APOLOGIZE TO ALL OF OUR CUSTOMERS FOR THE SHORTAGE OF VITAMOL




## VITAMOL by DR. ROBERT

DUE TO THE OVERWHELMING DEMANDS FOR VITAMOL, WE HAVE EXPERIENCED SEVERE SHORTAGES. HENCE, WE APOLOGIZE TO ALL OUR CUSTOMERS. VITAMOL IS A NOURISHING MALTED FOOD DRINK MIX FORMULATED BY DR. ROBERT. IT IS THE ONLY MALTED NOURISHMENT MIX WITH VITAMINS, IRON, CALCIUM AND HONEY. VITAMOL IS AN EXCELLENT FOOD FOR ALL THE TISSUES OF THE BODY ; FOR EXAMPLE CALCIUM FOR THE BONES, VITAMINS & IRON PREVENTS ANEMIAS, PACKED WITH ENERGY. SO NOURISH YOUR BODY WITH THE BEST. YOU GET MORE IN EACH BOTTLE OF VITAMOL. COMPARE THE QUALITY, SIZE AND PRICE. DON'T SETTLE FOR ANY INFERIOR MALT BEVERAGE MIX. DEMAND VIATMOL, TODAY'S BEST BUY FOR QUALITY AND VALUE. VITAMOL IS RECOMMENDED FOR CHILDREN AND ADULTS.




## DR. ROBERT GLUCOSE

GLUCOSE IS FOUND IN NATURE IN FRESH FRUITS AND VEGETABLES. DR. ROBERT GLUCOSE IS MADE WITH THE BEST NATURAL INGREDIENTS AND PURIFIED TO ITS HIGHEST QUALITY. DR. ROBERT GLUCOSE IS GOOD FOR QUICK ENERGY. IDEAL FOOD FOR THE BRAIN, RED BLOOD CELLS, LIVER & MUSCLES. EXCELLENT FOR FEEDING CHILDREN AND ADULTS BECAUSE IT IS USED QUICKLY BY THE BODY.




## NERVOGEN NERVE FOOD

NERVOGEN NERVE FOOD: EXCELLENT FOR HARD WORKING TISSUES OF THE BODY, SUCH AS THE BRAIN, IMMUNE SYSTEM, KIDNEY, LIVER, GUT AND HEART. ONLY NERVOGEN IS BETTER TASTING AND PROVIDES A BETTER PROTEIN PROFILE THAN SANATOGEN. FOR GOOD MENTAL AGILITY DON'T SETTLE FOR LESS, DEMAND THE BEST.




## CHATAK: Curry Excellence

CHATAK CHATAK MADRAS CURRY POWDER IS THE BEST CURRY POWDER ON THE MARKET TODAY. MADE WITH 475 YEARS EXPERIENCE. IT IS SUPERB AND SO GOOD, NO OTHER CURRY POWDER CAN COMPARE. DEMAND CHATAK CURRY POWDER TO EXPERIENCE MADRAS AS IT 'S BEST. ALSO AVAILABLE CHATAK MEAT SEASONING, FISH SEASONING, TANDOORI CHICKEN MIX, SALTED

SUPPLIES CAN BE OBTAINED IN USA, CANADA, AND THE WEST INDIES FROM UNIVERSAL FOODS & MERCHANDISE CO. (416) 535-3118 TORONTO, CANADA.
FOR SUPER VALUE, LOW WHOLESALE & RETAIL PRICES ON GIFT, TOYS, SRI LANAKAN GROCERIES & ALL THE ABOVE ITEMS CONTACT

மிசிசாகா யங் ஹென்றிஸ்
விளையாட்டுக்கழகம் நடத்தும்
ஒன்பது பேர் கொண்ட
உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

சனிக்கிழமை செப்டம்பர் 11ம் திகதி
காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது.

Burnamthorpe Fleetwood park
(East of Dixie/Burnamthorpe - at Pony Tail Dr)

அனைவரும் அன்புடன்
அழைக்கப்படுகின்றனர்.



## சோகம்!

காதலில் பிரிந்தாய்
ஒரு சோகப் பாடல்!
நான்
தேசம் தொலைத்து விட்டு
புலம்பிக் கொண்டிருப்பது
யாரிற்கும் கேட்கவில்லையா?

அனந்தன்

## உனக்குத்தான்

நீ எனக்கு வேண்டும்
என் கண்கள் குழிவிழுந்து
உதடுகள் உலர்ந்து
கரங்கள் நடுங்கி
கால்கள் தள்ளாட
நான் நீண்ட உறக்கத்துக்குள்
பயணமாகும் முன்பு
நீ எனக்கு வேண்டும்....

கனவுகள் இப்போது வருவதில்லை
நினைவுகள் நிலைத்திருப்பதில்லை
உறக்கத்தை தொலைத்துவிட்டு
உன் உயிருக்குள் நுழைந்து கொள்வது
எப்படி என சிந்திக்கின்றேன்
உன் கர்ப்பபையில் என்னை
தாங்கி வைத்துக்கொள்ளும் சக்தி
உனக்கு இருக்குமானால்
எனக்கு எழுது
நான் வந்து
அங்கே
அடைக்கலம் புகுந்து கொள்கின்றேன்

நிவேதிகா

## ஏஜென்சிக்காக

எங்கள் பணத்தில்
சுகமாக வாழும்
ஏஜென்சிகள்
ஏமாற்றம் எனும்
விலங்கை எமக்கு
தரும் போது
நாம் கடன்கைதிகளாகுகின்றோம்
வட்டி அதிகாரிகள் நம்மை
நசுக்கும் போது
எங்கள் சாபம் விஸ்வரூபமெடுக்கும்

தினேஷ் குமார்

மரித்து எழுவதற்கு
நான் யேசுபிரான் அல்ல
மரித்து விட்டேன்
இனி எழுந்திருக்கவே
மாட்டேன்
தயவு செய்து
என் கல்லறையில்
காகிதப்பூக்களை வைத்து
கண்ணீர் வடிக்காதே
வானலோகத்து தேவதைகளுடன்
நான் உறவாட வேண்டும்

ஏன்ஜல்

## ஆறாத ரணங்களாய்



நண்பனே நீ
நலிவடைந்த எம்
நாடியைப் பார்
நன்றாகப்பார்

துன்பமே நீ
துயருற்ற எம்
துயரைச் சேர்
தூரச் சேர்

உண்மையே உன்
உறக்கத்தை விட்டு
ஊருக்கு வா
ஊற்றெடுத்துவா

பொய்மையே உன்
பொல்லாமை விட்டு
போருக்கு வா
போர் தொடுத்து வா

பொருதிப் பார்ப்போம்
பொழுதைப் புலர்த்த இல்லை
பொய்யாய் வாழ்வதிலும்
பொங்கிச் சரிவோம்

நந்தன்

பெருமானே
நீ
இறங்கி வரவில்லையானால்
நான் அங்கே
ஏறி வருவேன்

பிரசன்னா

என் இன்பக் கனவுகளை
இருவயதுக் குழந்தையொன்று
இருகரத்தை ஆட்டியங்கே
தன்னருகே வட்டமிடும் வண்ணாத்துப்
பூச்சிதனை வாவென்று அழைத்தது போல்
என் வாழ்க்கை ஆனதம்மா
எதிர்பார்த்து ஏமாந்து
இல்லையென ஆனபின்பு
விதியென்று மனங்குமுறும்
என் மனத்தை யார் அறிவர்
அறிந்தவனும் போய்விட்டான்
அழுவதற்கு மனமில்லை
நடக்கும் வரை நடத்துவிட்டு
நாவரண்டால் முடிவெடுப்பேன்.

பரன்

## புகலிடம்

ஒரு சிறைச்சாலையிலிருந்து தப்பி
இன்னொரு பெரிய
சிறைச்சாலைக்குள் நான்
சிக்குப்பட்டு விட்டேன்

க. கலாமோகன்

## பணம்

பாசம் ஒரு வேஷம்
அன்பு வெறும் கோஷம்
பண்புகளின் அளவுகோல்
குணத்தின் குரல்வளையில்
பணத்தின் ஆதிக்கம்
பலம் பெற்றுவிட்டது
போட்டி பொறாமை பூசல்கள்..
எதிர்காலத்தை எண்ணிப்பார்க்க
முடியாத
இன்றைய நாட்கள்
சோகத்தின் விளிம்பில்
எங்கள் எதிர்காலம்
எல்லாம் கேள்விக் குறியாகிவிட
பணம் மட்டுமே விடையென்று
பணம் தேடும் படலத்தில் தன்
மானத்தையே இழக்கத் துணிந்து
விட்டான்
மானமுள்ள மனிதன்

மலர் மகள்

# புதுக் கவிதை

சிவதாசன்

# கர்மசூத்திரம்



ஏப்ரல் 8,

இன்று மனம் ஏனோ குழம்பித் தவிக்கிறது. தூக்கம் வருவதாயில்லை. என் மாலினி பலத்த எதிர்பார்ப்புகளுடன் இருப்பாள் போலிருக்கிறது. பாலியல் பற்றிய் சர்ச்சைகள் பள்ளிக்கூடத்தில் நடைபெற்றதாகவும் அதில் பெண்களின் நிலைபற்றி தனது உறுதியான நிலைப்பாடு பற்றியும் அழுத்தம் திருத்தமாக தெரிவித்ததாகவும் சொன்னாள். ஆசிரியைத் தொழில் என்றால் பலதும் பத்தும் கதைப்பார்கள் தான். இருந்தாலும் அவள் மிகவும் கவர்ச்சியானவள். பாலியல் பிரச்சனைகள் பற்றி அவளுக்கு எப்படி...? மனம் சலனப்படுகிறது.

ஏப்ரல் 9,

முன்வீட்டு விஜயலட்சுமி அக்காவைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. நாற்பது வயதிலும் அந்த இளம் விதவை வாலைக்குமரி போல இருக்கிறாள். கப்பலில் மாலுமியாக வேலை செய்த அவள் கணவன் இறந்து பதினைந்து ஆண்டுகள். அவ மறுமணம் செய்யவில்லை. பிள்ளைகளும் இல்லை. மாலினியையும் அவளையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். விஜயலட்சுமி அக்கா தாம்பத்ய சுகமில்லாது எப்படி சமாளிப்பா..? விரசமான கேள்வி தான். என்னுடனேயே இருந்து விட்டுப் போகட்டும்.

மே 6

கலியாண நாள் குறித்தாகி விட்டது. மாலினியின் குடும்பத்தினர் பெரிதாகச் செய்ய வேண்டும் என்று ஏற்பாடு. அவளைப் போலவே அவளது குடும்பத்தினரும் ஷோவுக்காக வாழ்பவர்கள் போலிருக்கிறது. என்ன செய்வது? விரும்பி விட்டேன். செய்து தானே ஆக வேண்டும். அவள் மீது எனக்கு இருப்பது காதலா? அல்லது கவர்ச்சியா? அவளில்லாமல் வாழ்வு என்று ஒன்று இருக்க முடியுமா?

மே 8

முற்றத்து சீமைக்கிழுவை கொத்துக் கொத்தாக பூத்திருக்கிறது. இரவு நிலா உச்சியில்.... அம்மா, அக்கா, தங்கச்சி, நான், விஜயலட்சுமி அக்கா எல்லோரும் முற்றத்திலிருந்து கதைத்துக் கொண்டோம். விஜயலட்சுமி அக்காவுக்கு மாலினியை அவ்வளவாகப் பிடிக்கவில்லைப் போலிருக்கிறது. எனக்கு மாலினி பொருத்தமானவள் என்று அக்கா சந்தோசப்பட்டுக் கொண்டாள். எனக்கு பெருமையாக இருந்தது.

ஜூன் 10

நாளைக்கு எனது திருமணம். காரணமில்லாமல் பயம் நுழைந்து விட்டது. பாலியல் பிரச்சனைகள் பற்றி மாலினி கதைத்தவற்றை நினைத்துப் பார்க்க பயம் இன்னும் அதிகரிக்கிறது. சாத்திரியும் பொருத்தம் அவ்வளவு சரியில்லை என்று சொன்னார். என்னவோ கடவுளை நம்பி இறங்க வேண்டியது தான்.

ஜூன் 11

இன்று கல்யாண நாள். தாலி கட்டு முன்பே சம்பந்திமாரிடையில் சண்டை ஆரம்பித்து விட்டது. படம் எடுத்தவர் தங்களை முன்னுக்கு விட்டு படம் எடுக்கவில்லை என்று மாலினியின் தாயார் குழம்பி விட்டார். சிறுபிள்ளைத் தனமான குழப்பங்கள். மாலினியும் முஞ்சியை நீட்டிக் கொண்டுவிட்டாள்.

மணவாழ்வின் சகுனம் சரியில்லைப் போலிருக்கிறது.

ஜூன் 12

சாந்திமுகூர்த்தம். மாலினிக்கு திருப்தியாகவில்லை. எனக்கு மனம் சுக்குநூறாக உடைந்து விட்டது. நான் தாம்பத்தியத்துக்கு தகுதியில்லாதவனோ என்ற பயம் பிடித்துக் கொண்டு விட்டது. மாலினி என்னைப் பூரணமாக நிராகரித்து விடுவாளோ? கடவுள் தான் காப்பாற்ற வேண்டும். தற்கொலை செய்து விடலாம் போலிருக்கிறது. அவள் நடந்து கொண்ட விதம்..... இன்று இரவு என்று ஒன்றில்லாது இருந்தால் நன்றாக இருக்கும்.

ஜூன் 13

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போலிருக்கிறது. மாலினி மட்டுமல்ல, அவளைப் பார்க்க வந்திருந்த தாயார் கூட என்னை இகழ்ந்து பார்ப்பது போல ஒரு பிரமையாக இருக்கிறது. தலையிடி என்று சொல்லி ஓரமாகப் படுத்துக் கொண்டது அவளுக்குப் புரிந்து கொண்டிருக்கும். மாலினியின் நடைமுறை எனக்குள் பயத்தைத் தருவித்ததா? அல்லது நான் என் மீது கொண்ட நம்பிக்கையீனம் பயத்தை கொடுத்ததா? பயம் இன்னமும் தீர்ந்தபாடில்லை.

ஜூன் 14.

இன்று மூன்றாம் நாள் அழைப்பு. மாலினி வீட்டுக்கு இருவரும் வந்தாகி விட்டது. நானும் மாலினியும் ஊரார் கண்ணுக்கு தம்பதிகள் தான். உண்மையில் எங்களது உறவு எந்த வகையானது? திருமண நாள் ஒன்றைத் தவிர நாங்கள் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டதில்லை. மாலினியை நெருங்கப் பயமாக இருக்கிறது. இந்தத் தடவையும் போகம் சோரம் போய் விடுமோ என்று பயம். அப்படி நடந்து விட்டால் மாலினி வாழ்நாள் முழுவதும் என்னை மன்னிக்க மாட்டாள். அவள் தானாகவே வந்து என்னோடு அன்பாகப் பேசி என் பயத்தைப் போக்க முயற்சி எடுத்திருக்கலாம். யாருடனாவது பேசி ஆறுதல் பெறவேண்டும் போலிருக்கிறது.

ஜூன் 15

இன்று அம்மா வீட்டுக்கு தனியே போனேன். என்ன முகம் வாடிப் போயிருக்கிறது? என்றா. என் கண்கள் கலங்கி விட்டது. அம்மாவுக்கு உண்மையைச் சொன்னேன். அம்மா தன் மடியில் கிடத்தி தலையைத் தடவித்

தந்தாள். மீண்டும் குழந்தையாக மாறி விட்டேன். அப்பாவுக்கும் இதே பிரச்சனை இருந்ததாகவும் தான் பொறுமையைக் கடைப்பிடித்து திருப்தியில்லாவிட்டாலும் திருப்தி போல் நடித்ததும் அவரோடு பேசிப் பறைந்து அவரது பயத்தைப் போக்கியதும் பின்னர் தங்கள் வாழ்வில் நிரம்ப சந்தோசம் இருந்ததும் பற்றி அம்மா சொன்னது கொஞ்சம் தென்பாக இருக்கிறது. ஆனால் மாலினி அம்மா போலில்லையே. மனம் தவிக்கிறது.

ஜூன் 16
இந்த இரவும் அப்படியே தான். மாலினி ஓரமாகப் படுத்துக்கொண்டாள். உடம்பை அப்படியும் இப்படியுமாகப் புரட்டிப் பார்த்தேன். கனமாகப் பெருமூச்சு விட்டுப் பார்த்தேன். என் மூச்சின் உஷ்ணம் அவளை உசுப்பவில்லை. மிகவும் கோபமாயிருந்திருக்கலாம். விழித்துக் கொண்டு தான் இருந்திருக்கிறாள்.

ஜூன் 17
இன்றும் அம்மா வீட்டிற்குப் போனேன். நடந்ததை விபரித்தேன். அம்மாவும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டா. கடவுள் தான் உன்னைக் காப்பாற்ற வேண்டும் என்றாள்.

நான் அவளுடன் பேசிப் பார்க்கவா என்று கேட்டாள். எனக்கு விருப்பமில்லை. படுக்கையறை விடயத்தை வெளியில் போய் சொல்வதாக மாலினி காளியாக மாறி விடலாம். பிரச்சனைக்கு தீர்வு காண முதல் அது எங்கிருக்கிறது என்றும் அறிய வேண்டும். பிரச்சனை என்னிலா? அல்லது மாலினியிலா?

ஜூன் 18
வழமையான இன்னுமொரு இரவு. வேதனை தாங்க முடியவில்லை. தலையணையை எடுத்துக் கொண்டு போய் விருந்தையில் போட்டு நிலத்தில் தூங்கினேன். மாலினி வந்து எழுப்பி உள்ளே கூட்டிக் கொண்டு போக மாட்டாளா என்று ஏங்கினேன். அவள் வரவேயில்லை.

என் மீது அவளுக்கு காதல் அறவேயில்லைப் போலிருக்கிறது. வாழ்வை இழுத்துக் கொண்டு போவதில் அர்த்தமில்லை.

ஜூன் 19
பகல் அம்மா வீட்டுக்கு போய் விட்டு, மாலை விஜயலட்சுமி அக்கா வீட்டுக்குப் போனேன். விஜயலட்சுமி அக்கா மூலம் ஒரு அரைப் போத்தல் எடுத்தேன். வெறியேறியதும் நானே கதையைத் தொடக்கினேன். விஜயலட்சுமி அக்காவின் முகத்தில் எதுவித உணர்ச்சியும் தோன்றியதாக தெரியவில்லை. என் கதையைக் கேட்டு நொந்து கொண்டாவோ? அல்லது தன் கதையை நினைந்து வருந்திக் கொண்டாவோ? தெரியாது. கதை முடிந்ததும் பெருமூச்சு விட்டுக் கொண்டா. எனக்கு வெறியேறி விட்டது. கண்கள் விஜயலட்சுமி அக்காவை இளமையாக்கிக் கொண்டிருந்தன. நான் அங்கே படுத்து விட்டுப் போகிறன் என்றேன். இல்லை! உறைக்கும்படியாக சொன்னா. உணர்வுகள் அதிர்ச்சியில் பழைய நிலைக்குத் திரும்பின. வெட்கமாக இருந்தது.

ஜூன் 20
நேற்றிரவு மாலினியின் நடத்தை மோசமாகவிருந்தது. ஏன் அவள் வெளியில் போய் படுத்துக் கொள்ள வேண்டும்? அறையில் ஆடி முடிந்து அம்பலத்திற்கு வந்தாகி விட்டது. நான் எங்கையாவது ஓடி விட வேண்டும்.

ஜூன் 21
பகல் மீண்டும் விஜயலட்சுமி அக்கா வீட்டுக்குப் போனேன். முதல் நாள் இரவை ஒப்புவித்தேன். அவ கவலைப்பட்டா. பல புத்திமதிகள் சொன்னா. இவ்வளவு அனுபவமும் அவவுக்கு எப்படிக் கிடைத்தது. வாத்சாயன முனிவரின் மறுஅவதாரமோ? இப்படியெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாவே!

ஜூன் 22
என்ன நடந்தது? எல்லாமே ஆச்சரியமாக இருக்கிறது. மாலினி வந்து அன்போடு கதைத்தாள். சரசமாடினாள். உடலோடு ஒட்டிப் போன இரவு ஆடையுடன் அலை போன்ற நீளமான கூந்தலை விரித்து கழுத்தைச் சுற்றி மார்பின் மீது விட்டிருந்தாள். பிரபஞ்சமே மாலினி அளவில் சுருங்கி விட்டிருந்தது. மார்பில் துவண்டாள். ஆலிங்கனம் இதமாக இருந்தது. என் மனமும உடலும் பயத்தை துரத்த முயற்சித்தன. சிறிய வெற்றி! மாலினி நடித்திருப்பாள் போலிருக்கிறது.

ஜூன் 23
உறவில் பாரிய மாற்றம். எல்லாம் திருப்தியாக இருந்தது. மாலினி மோட்டார் பூட்டிய பொம்மை மாதிரி ஓடித் திரிகிறாளே! சந்தோசம் அந்த மாதிரி.. ஏன் இந்த திடீர் மாற்றம்?

ஜூன் 24
விஜயலட்சுமி அக்காவைக் கண்டேன். கடைவாயை இழுத்துச் சிரித்தாள். நகைப்போ? நக்கலோ? இரண்டு கைகளையும் தட்டிச் சத்தம் போட்டா. அவதான் சதிகாரி போலிருக்கிறது. ஒப்புக்கொண்டு விட்டாவோ?

ஜூன் 25
மாலினியிடம் கதை கொடுத்து வாங்கி விட்டேன். எல்லாம் விஜயலட்சுமி அக்காவின் வேலை தான் என்றாள். தான் பாலியல் பற்றி அறிந்திருந்தது ஒரு வீதம் கூட இல்லை என்றும் இந்த அக்கா எப்படி இவ்வளவையும் தெரிந்து வைத்திருக்கிறா என்று தான் ஆச்சரியத்துடன் கேட்டதாகவும் எல்லாம் பாட்டிக் கதைகளும் வேலியடி வம்புகளின் மூலம் தான் என்றும் சொன்னாளாம். இன்னுமொரு விடயத்தை மாலினி ஒத்துக் கொண்டாள். ஆயிரம் பேரைக் கொன்ற அரை வைத்தியரைப் போல தாம்பத்தியம் பற்றி அரைகுறையாக தெரிந்து வைத்திருக்கும் அரைவைத்தியங்களை எடுத்துக் கொள்ளவே கூடாது.

உளவியல் என்பது பரிசோதனைக் கூடத்தில் தயார் செய்யப்படுவதல்ல. அனுபவச் சுவடிகளில் ஆய்ந்து அறிந்து கொள்வது. மாலினி கற்றுக் கொண்டு விட்டாள்.

ஜூன் 26
மாலினியுடன் கடற்கரைக்குப் போய் வந்தேன். வரும் வழியில் விஜயலட்சுமி அக்காவைப் பார்த்தேன். முகம் வாடியிருந்தது. எங்களைக் கண்டதும் முகத்தை மாற்ற எத்தனித்தாள் போலிருக்கிறது. மாலினி பிடித்திருந்த என் கைகளை உதறிப் பிரித்துக் கொண்டாள். விஜயலட்சுமி அக்கா அதிகம் கதைக்கவில்லை. போய் விட்டாள். நாங்கள் இருவரும் கை கோர்த்துக் கொண்டு சந்தோசமாக வந்தது அவள் மனதில் இளமை நினைவுகளை மீட்டியிருக்கலாம். இறந்து போன புருசனை நினைத்து மனம் வாடிப் போயிருக்கலாம். எனது மாலினி சொல்லிக் கொண்டாள்.

மனம் உண்மையிலேயே விசித்திரமானதுதான்.

# கணவன் மனைவிக்கிடையில்



சிவப்பிரகாசம்

எங்கள் சமூகத்தில் பெண்களை விட ஆண்களே வெளி உலகத்துடன் கூடிய தொடர்பு உடையவர்கள். ஆண்கள் தினமும் பல இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கலாம். ஊர்திகளிலோ தரிப்பிடங்களிலே வியாபார நிலையங்களிலோ பாதை ஓரங்களில் கூட எத்தனையே பெண்களை பார்த்து ரசித்துக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் இருக்கும். கொஞ்சம் "ஏற இறங்க" உடையணிந்த பெண் ஒருத்தியைக் 'கண்டால் திருமணமான ஆண்கள் கூட பார்த்துவிட்டுச் செல்வது வழமைதான். வீட்டுக்கு வந்து ரீவியைப் போட்டாலும் "அது அது" துல்லியமாகத் தெரிய பாலியல் எண்ணங்கள் அலை மோதுகின்றன. இதனால் விருப்பு பெருகிய நிலையில் கணவன் இருக்கும் போது அதை அவ்வப்போது ஈடு செய்ய மனைவி முன்வர வேண்டும். ஆனால் எதிர்பார்த்துக் கொண்டு கணவன் இருக்க எந்த நேரமும் போர்த்தி மூடிக் கொண்டு ஆர்வம் எதுவும் காட்டாது மனைவி இருந்தால் கணவனுக்கு எப்படி இருக்கும். பல தமிழ் குடும்பங்களிலும் "கேட்டால் மட்டுமே" மனைவியிடம் இருந்து கிடைக்கும். அதுவும் "சொன்னதைச் செய்யும்" கிளிப்பிள்ளை போலத் தான் நடந்து கொள்வார்கள். தமது மனைவியிடமிருந்து சரியான "பாலியற் பதில் தாக்குதல்கள்" வருவதில்லை என்பது பல ஆண்களின் குற்றச்சாட்டு. கட்டிப்பிடிப்பது கூட கடமைக்கு என்று நினைக்கிறார்களோ என்னவோ என்று கணவன் அலுத்துக் கொள்ளும்படி பல மனைவிகள் நடந்து கொள்கிறார்கள்.

'நாங்கள் அப்படி என்ன பிழை விடுறம். அவர் என்ன செய்தாலும் அதுக்கு மறுப்புச் சொல்லிறதில்லையே. அதை விட என்ன வேண்டிக்கிடக்குதாம்' என பெண்கள் நினைக்கலாம். இங்கே தான் தாம்பத்தியத்தின் பெண்களின் பாலியல் பங்களிப்பு தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.

உளவியல் ஆய்வுகளின் படி கணவன், மனைவி தனியாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அணியப்படும் உடைகளும் நறுமணங்களும் பாலியல் உந்துகையில் பெரும் பங்கு வகிக்கின்றன. வீட்டுக்குள் தானே, என்ன உடை அணிந்தால் தான் என்ன என்ற எண்ணம் பல பெண்களிடம் காணப்படுகிறது. மேலைத்தேசப் பெண்கள் படுக்கை அறை உடுப்புகளைக் கூட மிக ஆராய்ந்தே வாங்குவதற்கு இதுதான் காரணம். எமது பெண்களில் பலர் பட்டுப் புடவை வாங்க செலவிடும் நேரத்தில் ஒரு சிறுபகுதியைக் கூட இவ்வாறான உடைகள் வாங்குவதில் செலவிடுவதில்லை. படுக்கை அறையில் பழைய உடைகளை அணிதல் சாதாரணமான விடயம் என பெண்கள் அலட்சியமாக இருக்கக் கூடும். அதை கணவன் விரும்புகிறான் என்பதை உணர முற்படுவதில்லை. இந்த சின்ன விடயங்கள் சேர்ந்து தான் இறுதியில் 'சின்ன வீடாகவும்' கூடும்.

தமது குடும்பங்களில் நடக்கும் பாலியல் சம்பந்தப்பட்ட விடயங்களை வெளியில் எவருக்குமே கணவனோ மனைவியோ கூறக் கூடாது. இது பற்றியெல்லாம் கதைப்பது 'நாகரீகம்' என்று கருதிக் கொண்டும் நட்பின் இறுக்கத்தைக் காட்டுவதாகவும் நினைத்துக் கொண்டு பெருமிதம் கொள்வார்கள்.

தாம்பத்தியத்திய இன்பத்தை பூரணமாக அனுபவிக்க கணவனுக்கும் மனைவிக்கும் 'அந்தரங்கம்' தனிமை தேவை. அதிலும் திருமணமான புதிதில் கட்டாயமாகத் தேவை. ஆனால் வெளிநாட்டு வாழ்வு முறையில் வாடகை கொடுத்து கட்டுப்படியாகாது என்றோ, பெற்றோர் சகோதரர்களுடன் சேர்ந்திருந்தால் உதவியாக இருக்கும் என்றோ பலருடன் வாழ வேண்டிய நிலை. அங்கே கணவனும் மனைவியும் கற்பனையில் வரைந்து வைத்திருப்பவைகளை திருமணமான பின்னரும் அரங்கேற்ற முடியாத நிலை. மனைவி குளித்து விட்டு ஜில்லென்று வந்து நிற்க... உணர்வுகள் ஜிவ் என்று ஏற.. முடியுமா? அம்மா குசினிக்குள், அப்பா டீ.வி பார்த்தபடி, தம்பி பக்கத்து றூமில் படுத்தபடி... மனைவியை படுக்கையறைக்குள் இழுத்துச் செல்ல முன் மூட் போய் விடும்.

சரி, மனைவியுடன் மனம் விட்டுப் பேச முடிகிறதா? அதுவும் இல்லை. தனிக்குடித்தனம் செய்பவர்கள் ஓய்வு நேரங்களில் வெளியே பார்க், பீச், படம் என்று தனியாகவே போய் வர வேண்டும். அங்கே தனிமையாக சிங்காரம் புரிந்து ஒரு பகுதி உணர்வுகளை கட்டுப்படுக்கடக்கி மீதியை தனியாக படுக்கையறையில் வைத்துக் கொள்ளலாம்.

திருமண உறவில் சல்லாபங்களும் உடலுறவும் இன்றியமையாதது. சில குடும்பங்களில் ஆண் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவதற்காக கணவன் மனைவியிடம் இருந்து விலகி இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. அப்படியாயின் மனைவியிடம் தாம்பத்தியம் பற்றி கலந்தாலோசித்து எவ்வாறு கட்டுப்பாட்டைப் பேணலாம் என்ற மனமொத்த கருத்து ஏற்பட்ட பின்னர் தாம்பத்தியத்தை தொடரலாம்.

முதலிரவின் போது வெள்ளைத் துணி விரிப்பது குறித்து நீங்கள் அறிந்திருக்கக் கூடும். உடலுளவு கொள்ளாத பெண்ணுக்கு முதலுறவில் மென்சவ்வு ஒன்று பிரிவதனால் இரத்தக்கசிவு ஏற்படும் என்பது பொது விதி. இதனால் பையனின் அம்மாமார் இதை விரிக்கும் பழக்கம் பல கலாசாரங்களில் இன்றும் உண்டு. சில பெண்களுக்கு பரம்பரையாகவோ, பிறப்பிலோ இச்சவ்வு இருக்காது. அத்துடன் விளையாட்டுக்கள், சைக்கிள் ஓடுதல் போன்றவற்றில் ஈடுபடும் பெண்களுக்கு அவை பிரிவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன. எனவே முதலிரவில் அவ்வாறான ஆதாரங்கள் எதுவும் கிடைக்காவிட்டால் சந்தேகத்துடன் வாழ்வை ஆரம்பித்தால்,

26ம் பக்கம் பார்க்க..

# GAMINI WANIGASEGARA

**(416) 449 4294**

BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
BARRISTER-AT-LAW (ENGLAND)
ATTORNEY-AT-LAW (SRI LANKA)

30 YEARS EXPERIENCE IN ENGLAND, SRI LANKA & TORONTO, CANADA

Suite 600, Don way West
Don Mills, Ontario
Fax:(416) 449 4369

REAL ESTATE
BUSINESS
CRIMINAL LAW
FAMILY LAW
ESTATES

- -BUYING, SELLING, MORTGAGING
- -PURCHASE OF BUSINESSES & CORPORATIONS
- -INCORPORATIONS
- -ALCOHOL RELATED OFFENCES
- -SEPARATION AGREEMENTS, DIVORCE
- -LAST WILLS

காணி நிலம்:வாங்க, விற்க
வியாபாரம்: வாங்க, இணைத்தல்
குற்றச்சட்டம்: மது சம்பந்தமான குற்றம்
குடும்பச்சட்டம்: பிரிவு, விவாகரத்து
சொத்து:கடைசி உயில்

தமிழிலும் உரையாடலாம்



குறைந்த செலவு நிறைந்த திருப்தி

# ELECTRON AUTO SERVICE

எந்த வித வாகனங்களுக்கும்
எந்த வித திருத்த வேலைகளுக்கும்
திறமையாகவும் நுணுக்கமாகவும்
உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும்
Engine Rebuilt செய்யவும்
பாவித்த தரமான இயந்திரங்களை
உங்கள் வாகனங்களுக்கு பொருத்தவும்
பாவித்த தரமான உதிரிப்பாகங்களை வாங்கவும்
தொடர்பு கொள்ளுங்கள்

**25 Heritage Rd, #14,**
McGowan/Highway 7
(On McGowan)
TEL:472 8343/ 921 8005(Erai)
Mobile Tel:399 1830

**ஞானம்ஸ் ஸ்டுடியோ**

ஆறு வருட கனடா அனுபவம்
தலைசிறந்த படப்பிடிப்பாளர்கள்
நவீன தொழில் நுட்பம்
அனைத்தையும் ஒருங்கே கொண்டது
ஞானம்ஸ்

---

★ திருமணம்
★ அரங்கேற்றம் மற்றும் அனைத்து வைபவங்களுக்கும் எம்மை முதலில் அழையுங்கள்

**750 8118**

**GNANAMS STUDIOS**

**2387 Eglinton Ave E #1**
**(At Kennedy, Top of Beckers)**

★ மனதை விட்டகலா படங்களை மீண்டும் படம் பிடித்து தரம் குறையாது பெரிதாக்கி மகிழ்ந்திட

★ வண்ண வண்ண வடிவங்களில் உங்கள் குடும்ப, குழந்தைகளின் படங்களை பார்த்து மகிழ்ந்திட

★ Film roll developing and printing நவீன கொம்பியூட்டர் தொழில் நுட்பத்துடன் color density, skintone correction செய்து நிறம் மாறாத படங்களாகப் பார்த்திட

**High Quality albums, frames**

பாஸ்போட் படங்கள் பத்து டொலர்கள் மட்டுமே



*சகல விதமான அச்சுவேலைகளுக்கும்.....*

**QUIK GRAFIX**
OUR NAME TELLS EVERYTHING

## சிவாஸ் ரேடிங் கோ
## மாபெரும் மலிவு விற்பனை

**டின்னில் அடைத்த பழவகைகள்**
(நுங்கு, கொய்யாப்பழம் போன்றன)
**50 சதம் மட்டுமே**

| | |
|---|---|
| சம்பா அரிசி 5 கிலோ | 4.99 |
| பஸ்மதி அரிசி (பரட் பிராண்ட்) 5 கிலோ | 7.99 |
| மரக்கறி எண்ணெய் 3l | 2.99 |
| மாங்காய் கோடியல் | 1.59 |
| மிஸ்டர் குடாஸ் பார்பொயில்ட் அரிசி 10கிலோ | 4.99 |
| மிஸ்டர் குடாஸ் *All purpose* மாவு 10 கிலோ | 4.99 |

| | |
|---|---|
| கோழிக்கால் ரூத் (பத்து ரூபாவுக்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு) | .69 |
| உடன் கோழி (ஒருவருக்கு ஐந்து மட்டும்) | 1.99 |
| ஆட்டுக்கால் ரூத் | 1.99 |
| வறுத்த மிளகாய்த் தூள் 900 கி | 4.99 |
| எல்லா இலங்கை சவர்க்கார வகைகளும் | .48 சதம் |
| முட்டை *(Tray of 30)* (ஒருவருக்கு இரண்டு மட்டும்) | .99 சதம் |

**இவ்வார ஸ்பெஷல்**
**பஸ்மதி அரிசி 20 கி**
**27.99**

**Fresh frozen King Fish**
**2.99Lb**

மேலதிக விபரங்களுக்கு
பின் அட்டையைப்பார்க்க..

# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**
**755 8550**
**CALL**
**MIKE or RAJAN**

**Car Certification**
**29.99**


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்

**We use Quaker State Oil**



குறுநாவல்

# வன்னி மண்



வ.ந. கிரிதரன்

நிமிடத்திற்கு நிமிடம் புயலின் உக்கிரம் கூடிக் கொண்டேயிருந்தது. யன்னலினூடு வெளியில் இயற்கை நடத்திக் கொண்டிருந்த அனர்த்தங்களைப் பார்த்தவாறு குடங்கிப் போயிருந்தோம். அப்படியொரு புயலை அதற்கு முன்னும் சரி, பின்னும் சரி பார்த்ததேயில்லை. சுழன்றடித்த காற்றில் மரங்கள் தலைவிரி கோலத்துடனாடிக் கொண்டிருந்தன. தொலைவில் மரங்கள் சில சாய்வதைக் கூட அவதானிக்க முடிந்தது. மழையென்றால் பொதுவாக எனக்குப் பிடித்த இயற்கை நிகழ்வு. ஆனால் இந்த மழையல்ல வானம் மப்பும் மந்தாரமுமாக இருண்டு, மின்னி முழங்கிக் கொட்டும் மழையை எனக்குப் பிடிக்கும், நனைந்த இறகுகளை ஒடுக்கியபடி பறவைகள் மரங்களில் கூம்பிக் கிடக்கப் பெய்யும் மழையென்றால் எனக்குப் பிடிக்கும், வயற்புறங்களிலிருந்து கேட்கும் தவளைகளின் கச்சேரிகளை இரசித்தபடி, வானம் பொத்துக் கொண்டு பெய்வதை பார்த்துக் கொண்டு படுத்திருப்பதென்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் இந்த மழை.... இந்த மழை எனக்கு இன்பத்தைத் தரவில்லை இந்த மழை எனக்குக் கற்பனையை, அமைதியைத் தரவில்லை. அச்சத்தைத் தந்தது. மனிதனின் இயலாமையை உணர்த்தியது. எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மையைத் தந்தது.

இத்தகைய இயற்கை நிகழ்வுகள் தான் மனிதனின் இயலாமையை வெளிக்காட்டி விடுகின்றன. விஞ்ஞானத்தின் இறுமாப்பை மட்டம் தட்டி விடும் நிகழ்வுகள் செய்வதற்கொன்றுமின்றி வேடிக்கை பார்த்து நிற்பதுதான் செய்யக் கூடிய ஒரேயொரு வழி. அந்த இரவையும் அவ்விதம் தான் கழித்தபடியிருந்தோம்.

எனக்கு இன்று நினைத்தால் கூட ஆச்சர்யத்தைத் தரும் விஷயம் என்னவென்றால் அந்தப் புயல் நூற்றுக்கணக்கான வருஷங்களாக உறுதியுடன் கம்பீரமாக நிலைத்திருந்த கருங்காலி, முதிரை, பாலை போன்ற பெரு மரங்களையெல்லாம் வேரோடு பிடுங்கி எறிந்து பேயாட்டம் போட்டு விட்டிருந்தது. ஆனால் எங்கள் வீட்டிற்கருகாக, வீட்டிற்கு மேலாகக் கிளைபரப்பி நின்றிருந்த பெரியதொரு கருங்காலிமரத்தை மட்டும் சும்மா விட்டு விட்டிருந்தது. ஆச்சர்யம் தான். இப்போ கூட அம்மாவிடம் கேட்டால் அவ சொல்லும் பதில் தான் நம்புகிற சிவபெருமான் என்பது தான். அம்மாவிடம் ஒரு பழக்கம் ஏதாவது பிரச்சனைகள் ஏதாவது ஏற்பட்டால் ஓயாமல் ஜெபித்துக் கொண்டிருப்பது. அன்றும் அப்படித்தான் ஓயாமல் சிவசிவா என்று நேரம் கிடைத்த போதெல்லாம் ஜெபித்துக் கொண்டிருந்தா. அவ்விதம் அவ வேண்டியதால் தான் சிவபெருமான் மனமிரங்கி எங்களைக் காப்பாற்றியதாக அவ பலமாக இன்று கூட நம்பிக் கொண்டிருக்கிறா.

இந்த விசயத்தில் இன்று அவவின் நம்பிக்கை பற்றி நான் கேலியாக எண்ணுவதில்லை. சிவபெருமான் இருக்கிறாரோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் இருப்பின் ரகசியமே புரியாத நிலையில் எதுபற்றியுமே முடிவு செய்யும் நிலையில் நானில்லை. இந்த பிரபஞ்சம் விரிந்து கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். பதினைந்து பில்லியன் வருடங்களின் முன்னால் நிகழ்ந்த பெருவெடிப்பில் தோன்றியதாகக் கூறுகின்றார்கள். அப்படியென்றால் அந்தப் பெருவெடிப்பிற்கு முன்னால் என்ன இருந்தது? விடை காண முடியாத கேள்வி? இந்நிலையில் யாருடைய நம்பிக்கையும் இகழும் துணிவு என்கில்லை. அதற்காக மூட நம்பிக்கைகளைப் போற்றிப் பேணும் வழக்கமும் எனக்கில்லை.

நேரத்திற்கு நேரம் புயலின் கோரம் கூடிக்கொண்டேயிருந்தது. ஒருமுறை வெளியில் நடப்பவற்றைப் பார்ப்பதற்காக அப்பா பின் விறாந்தைக் கதவைத் திறக்க முற்பட்டார் பலமாக வீசிய காற்று அப்பாவை உள்ளே தள்ளியதுடன் கதவையும் பலமாக அடித்துச் சாத்திவிட்டது. அப்பா அத்துடன் வெளியில் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டார். இந்த நிலையிலும் எனக்கு உள்ளூர ஒரு சந்தோஷமிருந்தது. விடாமல் பெய்து கொண்டிருந்த மழை தான் காரணம். பொங்கி வழியும் குளத்தினழகை எண்ணி மனம் துள்ளியது. புயல் நின்றதும் முதல் வேலையாகக் குளத்துப்பக்கம் செல்ல வேண்டும். நிறைந்து வழியும் நீரில் மின்னும் விரால்களைப் பார்க்க வடிவாகயிருக்கும். நீரில் ஆடும் செந்தாமரைகள் பார்வைக்குக் குளிர்ச்சியைத் தருவன.

நள்ளிரவைத் தாண்டியபொழுது யாரோ விறாந்தைக் கதவைத் தட்டினார்கள் திறந்தால் சுமணதாஸ் பாஸ் குடும்பத்தினர் ரஞ்சிற்றும் கூட வந்திருந்தான். புயல் அவர்கள் வீட்டுக் கூரையைக் கொண்டு போயே விட்டது. எல்லோருமே மழையில் நனைந்து வெடவெடித்தபடியிருந்தார்கள். சுமணதாஸ பாஸைத் தவிர எல்லோர் முகத்திலும் பயத்தின் சாயை படர்ந்திருந்தது. சுமணதாஸ பாஸ் பயந்து நான் பார்த்ததேயில்லை. எப்பொழுதும் மலர்ந்த சிரித்த முகத்துடன் எத்தகைய சூழலையும் எதிர் கொள்ளும் பக்குவம் அவரிடம் அத்தகைய சூழலையும் எதிர் கொள்ளும் பக்குவம் அவரிடம் நிறையவே

யிருந்தது. எனக்கு அவரிடம் பிடித்த முக்கியமான குணம் இதுதான். எத்தகைய ஆபத்தையும் பொருட் படுத்தாமல் இறங்கிவிடுவார் தனக்கு ஏற்படக்கூடிய உயிராபத்தையும் கூட அத்தகைய சமயங்களில் அவர் பொருட்படுத்துவதில்லை. இன்று நான் உயிரோடிருப்பதற்குக் கூட காரணம் அவரது அத்தகைய போக்குதானே.

சுமணதாஸ் பாஸ் குடும்பம் வந்த சிறிது நேரத்திலேயே எங்கள் வீட்டிற்குப் பின் வீட்டிலிருந்த குடும்பத்தவர்களும் வந்து விட்டார்கள். மன்னார் பகுதியைச் சேர்ந்த முஸ்லீம் குடும்பம்.. அக்குடும்பத்தைச் சேர்ந்த காஜா, முபாறக், நலீமா..... எங்கள் வயதை ஒத்தவர்கள் எங்களிற்குச் சொல்லவா வேண்டும். அதுவரை சோர்ந்து கிடந்த என்மனதில் மகிழ்ச்சி பெருக்கெடுத்தோடியது. எங்கள் வயதை ஒத்தவர்கள் வந்து விட்டார்களே.... குழந்தைகள் எல்லோரும் படுக்கையறையிலிருந்த ஸ்பிறிங் கட்டிலில் துள்ளி விளையாடத் தொடங்கினோம். அம்மா வந்திருந்தவர்களிற்கு உடுப்புகள் கொடுத்தா. தேநீர் போட்டுக் கொடுத்தா. எல்லோரும் தங்கள் தங்கள் அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டார்கள். வெளியிலோ புயல் பலமாகவே அடித்தபடிதானிருந்தது. நாங்களோ அது பற்றியெல்லாம் கவலையேதுமின்றி விளையாடிக் கொண்டிருந்தோம்

இன்று நினைத்தாலும் என் நெஞ்சைத் தொடுவது..... அன்று இயற்கையின் அழிவு பல்வேறு இன,மத, மொழி பேசும் அயலவர்களை ஒன்றாக இணைத்து விட்டிருந்தது. ஆனால் இன்றோ... மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் ஒன்றாக வாழ்ந்த மக்களை இன, மத, மொழி ரீதியாகப் பிரித்து விட்டிருக்கின்றது. இனப்பிரச்சினை அன்றும் இருக்கத்தான் செய்தது. ஆனால் அப்பிரச்சனை எங்கள் குடும்பத்தவர்க்கும், சுமணதாஸ பாஸின்ற குடும்பத்தவர்க்கும், மன்னார் முஸ்லீம் குடும்பத்தவர்க்குமிடையில் உறவுகள் தழைப்பதற்கு, வளர்வதற்குத் தடையாக இருந்ததில்லை. உண்மையில் அப்படியொரு பிரச்சனை இருப்பதே எனக்கு அந்த வயதில் தெரிந்திருக்கவில்லை.

சிலவேளைகளில் நான் எண்ணுவதுண்டு. மனிதன் எதற்காகப் போர்வெறி கொண்டு அலைகின்றான்? இயற்கையில் போரும் அழிவும் நியதியான விசயங்களா? இல்லாவிட்டால் இயற்கையில் ஏன் ஒவ்வொரு உயிருமே இன்னுமொரு உயிரின் அழிவில் வாழும்படியாகப் படைக்கப்பட்டிருக்கின்றது? வலிமை படைத்தது தப்பிப்பிழைப்பது தான் இயற்கையின் நியதியான போக்கா? அப்படியென்றால் சகோதரத்துவம், மனிதத்துவம் போன்ற கோட்பாடுகளெல்லாமே கற்பனையான எண்ணங்கள் தானா? சாத்தியமற்றவை தானா? அன்பு, காருண்யம் என்பதெல்லாம் அர்த்தமற்ற விசயங்கள் தானா?

சின்னஞ் சிறிய வாழ்க்கையை ஏன் மனிதனால் அமைதியாக இன்பமாக வாழ முடியவில்லை? சின்னஞ்சிறிய தீவு மக்களால் ஏன் ஒற்றுமையாகயிருக்க முடியவில்லை? ஒற்றுமையாயிருக்க வழிகளாயில்லை? ஆனால் ஏன் முடியவில்லை? ஆறாவது அறிவு இருப்பதாகப் பெருமைப்படும் மனிதனின் அந்த ஆறாவது அறிவிற்கு நடந்தது தானென்ன? மிருகங்களைக் கேவலமாக ஒருவரையொருவர் கொன்று குவிக்கும் மனிதனின் நிலைக்குக் காரணமென்ன?

சிந்தனை மீண்டும் பின்னோக்கிப் பறக்கிறது. அந்தப் புயல் வன்னி மண்ணில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி விட்டுத் தான் போயிருந்தது. நூற்றுக்கணக்கான வருஷங்களாக நிலைத்திருந்த பெருமரங்களை வேரோடு கிள்ளி எறிந்து விட்டிருந்தது. சில இடங்களில் பாலை, முதிரை, கருங்காலி போன்ற மரங்களை அப்படியே தூக்கி நூறு யார்களிற்குமப்பால் கொண்டு சென்று போட்டு விட்டிருந்தது. பல வீடுகள் கூரைகளை இழந்திருந்தன. இன்னும் பல முற்றாகவே சிதைக்கப் பட்டிருந்தன. இவற்றிற்கிடையில் எங்கள் வீடு தப்பியதுதான் பெரிய அதிசயம். படுக்கையறையில் ஒரு ஓடு உடைந்து போனதைத் தவிர பெரிய சிதைவு எதுவுமில்லை. உடனடியாகவே ரஞ்சித் விருந்தைப்பக்கமிருந்த ஓடொன்றைக் கழட்டி படுக்கையறைக் கூரைக்கு மாற்றி விட்டதால் அந்தப் பிரச்சனையும் தீர்ந்து விட்டது.

மறுநாட் காலையில் புயல் தணிந்து விட்டிருந்தது. காற்றும் மழையும் அடங்கி விட்டிருந்தன. அப்பா சுமணதாஸ் பாஸ் எல்லோருமாக வெளியில் புயல் ஏற்படுத்திவிட்ட சேதங்களைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டோம். பார்த்த பக்கமெல்லாம் மரங்கள் வீழ்ந்து செடி கொடிகள் பிடுங்கப்பட்டுக் காணப்பட்டன. குரங்குகள் தான் பாவம். மூலைக்கு மூலை செத்துக் கிடந்தன. பறவைகள் எதனையும் செத்த நிலையில் நான் பார்க்கவில்லை. விழுந்திருந்த மரங்கள், கொடிகளிற்கிடையில் கிடக்கலாம். வீடுகளில் வளர்க்கப்பட்ட கால்நடைகள், கோழிகளில் பெரும்பாலானவற்றைப் புயல் விழுங்கி விட்டது.

இரவு முழுக்கப் பெய்த மழையில் கிணறுகள் முற்றாகவே நிரம்பி விட்டன. குளங்கள் முட்டி வழியத் தொடங்கி விட்டன. வயற்புறங்களில் பயிர்கள் முற்றாகவே சேதமாக்கப்பட்டுப் போயின. தங்களுடைய வாழ்க்கையில் இப்படியொரு புயலை இதுவரையில் பார்க்கவில்லையென அப்பாவும், சுமணதாஸ பாசும் தமக்குள் கதைத்துக் கொண்டனர். எனக்குப் புயல் ஏற்படுத்திய அனர்த்தங்களின் நிலை பயத்தைத் தரவில்லை. ஒருவித மகிழ்ச்சியைத் தந்தது என்று கூடச் சொல்லலாம். விழுந்து கிடந்த மரங்கள், பொங்கி வழியும் குளங்கள், நிறைந்து கிடக்கும் கிணறுகள் எல்லாமே ஒருவித இனிமையைத் தந்தன. எனக்குப் பிடிக்காத அந்தச் சுடலை நரிகள், மரநாய்கள், கீரிகளையெல்லாம் அந்தப் புயல் விழுங்கி ஏப்பம் விட்டிருக்குமென்ற நினைவு, சந்தோஷத்தைத் தந்தது. ஆனால் புயலின் பாதிப்புகள் மறைந்த நிலையில், மீண்டும் நள்ளிரவுகளில் சுடலைகளிலிருந்து நரிகளின் ஊளைச் சப்தங்களைக் கேட்டபோது சிறிது ஏமாற்றமாகவிருந்தது. உயிரினம் அப்படியும் தப்பிப் பிழைப்பதற்கு வழியொன்றைக் கண்டுபிடித்துவிடும் என்று அப்பா சிலசமயம் கூறுவது சரிதான் போல் பட்டது.

தொடரும்

## கணவன்...

ஒரு அப்பாவிப் பெண்ணைச் சந்தேகித்த பாவம் மட்டுமல்ல, இனிமையான குடும்ப வாழ்வுக்குள் இருட்டையும் அழைத்துச் செல்வதற்கு ஒப்பானது.

இப்படி என்றால் எங்கள் மனைவி சுத்தமானவள் என்று எப்படித் தெரிந்து கொள்ள முடியும் என்று சிலர் கேட்கக் கூடும். சரி. அப்படியென்றால் திருமணமான பின் மனைவி சுத்தமானவள் என்று காண அளவு கோல் ஏதும் வைத்திருக்கிறீர்களா?

கணவன் மனைவி சந்தோசமாக சிரித்துப் பேசிக் கொண்டிருந்தால் அது தாம்பத்திய வாழ்வின் முழுமைக்கு சான்று? இதற்கு ஆம் என்றும் இல்லை என்றும் பதில் சொல்பவர்கள் உள்ளார்கள்.

பரஸ்பர புரிந்துணர்வு தான் தாம்பத்திய வாழ்வின் வெற்றிக்கு திறவு கோல். பாலியல் பிரச்சனை என ஒன்று இருப்பதையே எம்மவர்கள் ஏற்க மறுக்கிறார்கள். அப்படி ஒன்று இருந்தாலும் அதை பத்திரிகையில் எழுதி அசிங்கப்படுத்தக் கூடாது என்பது பலர் கருத்து. நோயை அறியாமல் மருந்து தேட முடியாது என்பதாலேயே இத்தொடர் எழுதப்பட்டது. சில விடயங்கள் விளக்கம் கருதி 'கொஞ்சம் அதிகமாகவே' எழுதப்பட்டிருக்கலாம். பாலியல் இன்பம் பெறுவது எப்படி என்ற விசயங்களை விபரிப்பது இத்தொடரின் நோக்கம் அல்ல.

மேலும் அறிய விரும்புவர்களுக்காக சில நூல்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. பாலியல் பிரச்சனைக்கான காரணங்களை ஓரளவு அறிந்திருப்பீர்கள். இனி மருந்து வேண்டியவர்கள் மருந்தை வாங்கிக் கொள்ளுங்கள். ஊட்டம் தேவையானோர் வைட்டமின்களை வாங்கிக் கொள்ளுங்கள். முன்ஜாக்கிரதையாக தடுப்பூசி போட வேண்டியவர்கள் காலம் கடத்தாது ஊசி போட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் நோயற்ற திடகாத்திரமானவர்களாயின் நோயுள்ள மற்றவர்களுக்கு இது போன்ற ஆக்கங்கள் கிடைக்க வசதி செய்யுங்கள்.

ஏற்கனவே இவ்வாறான ஆக்கங்களை பத்திரிகைகளில் காணுதவர்களுக்கு சிலவேளை ஜீரணிக்க முடியாமல் இருக்கலாம். காலம் மாறுகிறது. வாழ்க்கை முறைகள் மாறுகின்றன. புரிந்து கொள்வோம்.

மேலதிக வாசிப்புக்காக..

The Joy of Sex
Sex without Shame
Sexual Behaviour in Human Male
Sexual Behaviour in Human Female
Human Sexual Inadequacy
Studies in Psychology of Sex
Women's Experience of Sex

## காவிகள்

நிழலாய் நம்மைத் தொடரும்
இந்நோய் எந்நோய்???.........

பெயரில்லை ஆனால்
நோய் என்ற பெயருண்டு
வெளிநாடொன்று
தாய்நாட்டில் இருந்தெம்மவரை
தத்தெடுக்கும் போது
சுற்றுடல் மாற்றம்
பேருடல் வியாதியைக்
கொண்டு வருகின்றது

நம் நாட்டுச் சூழலை
நாம் பார்த்தால்
முன்னொரு காலத்தின்
நன்னீர்க் கிணறொன்று
இடிந்து தூர்ந்து
பாழடைந்திருப்பது போல்
கண்ணுக்குப் புலப்படும்

கட்டங்கள் தகர்க்கப்பட்டும்
மதசார்நிலையங்கள் இடித்தும்
மதில்களின் கன்னங்களைச்
சன்னங்கள் துளைத்தும்....

இன்னாலுறும் மக்கள்
இலவச விலைமாது போல்
பலராலும் பலவிதமாய்,
பலவந்தமாய்......

வேலிகளே பயிர்களை
மேய்ந்து கொண்டுள்ளன.....

சிங்கள, இந்திய, தமிழ்க்
குண்டர்களின் காலத்துக்குக்
காலம்
மாறும் ஆட்சிகள்
அப்பாவித் தமிழனை
அநியாயமாய்க் கொல்லும்
அரசியல் முறைகளின்றும்......

அப்பாவி உடல்களை
மண்ணுக்குரமாக்கி
அழுகிய மணத்தை
அயலவர்க் கிலவசமாய்
விநியோகம் செய்யும்.....

மண்முட்டைகளுக்கு
முன்னும், பின்னும்
பாய்ந்து முன்னேறும்
துப்பாக்கிச் சன்னங்களும்
கரும்புகை கக்கி
வெடிக்கும் குண்டுகளும்
மிகமிகச் சிறிய துகள்களைக்
காற்றில் கலக்க விடுகின்றது
'வளி'க்கொரு
வழி செய்யும் படலம்
வெற்றிகரமாகவே
வீறுநடை போடுகிறது......

முற்றத்தில் இட்ட கோலம்
முழுநாளும் சிதைவது போல்
நாளுக் கொரு கோலமாய்
நாடு முன்னேறுகின்றது......

நன்னீர்க் கிணறுகளே இன்று
இரசாயனக் கலவைகளை
வழங்கும் அளவுக்கு
முன்னேறி விட்டன
இனியென்ன பயம்
நாமும் 'ரோபோ'க்கள்தான்

பொலிடோல், தமரோன்
மனிதப்பசளை என்று
ஆரோக்கியமாகவுள்ள
உணவுப் பயிர்கள் கூட
கடும் நஞ்சு கொண்ட
கனிகளை காலம் தப்பாமல்
வழங்குகின்றன.........

இவற்றைக் குடித்துண்டு
வாழும் மக்கள எப்படி
ஆரோக்கியத்தை
எதிர் பார்க்கலாம்

வெளிநாடு சென்ற
கன்னி ஒருத்திக்கு
இள வயதினிலேயே
இதயம் உக்கி விட்டதாம்
இதயம் என்ன துணியா
உக்கிப் போய்விட?
போன வேகத்திலேயே
போய் விட்டாளவள்.....

இன்னொரு பெண்
வந்திரண்டரை மாதத்தில்
ஒன்றரை மாதக் கணவனை
நுரையீரலின் செயலிழப்பால்
பிரிந்து சொர்க்கம் சேர்ந்தான்
என்ன காலமிது.....

கிழக்கைரோப்பாவுக்கு
கிளம்பிய பெண்ணொருத்தி
மூன்று மாதத்துள்
வாந்தி எடுக்கின்றதென்று
சென்றவளுக்கு
'விடுதலை' என்று
தீர்ப்பெழுதியாயிற்று....

தாய்நாட்டிலின்று
மருத்துவ வசதியின்றி
சத்துள்ள உணவுண்ண
முடியாது வாழும்
பேதைகளின்று
சரீரம் முழுக்க
நவீன நோய்காவும்
'காவி'களாக
காட்சியளிக்கின்றனர்

இப்படிப் போகுமின்னல்
என்றுவது ஓர்நாள்
முடிவுக்கு வருமா?
எங்கே??...
எப்போது
கேள்விகளே பதில்களாய்
என்றென்றும் எதிரொலிக்கும்.

சிவா.

குணமளிக்கும் நற்செய்தி
பிள்ளைகளால் பிரச்சனையா?
குடும்பத்தில் அமைதியின்மையா?
கலாசாரப் பாதிப்பா?
நோய் பிணிகளால் கவலையா?

பிரச்சனைகள் எல்லாவற்றுக்கும்
நற்செய்தி மூலம் தீர்வளிக்கிறார்
தமிழ்நாடு சகோதரர் குறூஸ் திவாகரன்

அலையெனத் திரண்டு வந்து உங்கள்
நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

Toronto Our lady of Lourdes
Sep 13,14 7 pm

Mississauga S.S.Salvador
Sep 15.16 7 pm

Scarborough, St.Rose of Lima
Sep 17.18 7 pm

St.Maria Goretti church
Sep 19 6 pm

மேலதிக விபரங்களுக்கு
தமிழ்க் கத்தோலிக்க அருங்கொடை
மறுமலர்ச்சி (புதுவாழ்வு)
266 3017


# கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்

## இரண்டாவது ஒழுங்கு கூடல் 29/08/1993

கடந்த ஜூன் 19ம் திகதி 1993 அன்று கனடாவில் தமிழ் எழுத்தாளர்களது அமையமொன்று இணையமென்று அங்குரார்ப்பணமாகியது ஈடுபாடுடைத்தோர் அறிந்ததே. இணையத்தின் இரண்டாவது ஒருங்கு கூடல் ஸ்காபரோவில் GREEN CABIN RESTAURANT இன் உரையாடு மண்டபத்தில் 29 ஒகஸ்ற் 93 நடந்தேறியது. இணையத்தின் இலக்குகளும், செயல் நடவடிக்கைகளும் தமிழின் வளர்ச்சியுடனும் தமிழர் சமூகத்ததும் தமிழும் தமிழர் சமூகமும் இன்னோரன்ன பிறவும் இணைந்துற்ற தொடர்புடையதும் அகப்புறக் காரணியுடன் ஊடிக்கொண்ட ஸ்திரப்பாட்டின் விளக்கமாக இணைய யாப்பொன்று அதற்கான குழுவால் உருவாக்கப்பட்டு இரண்டாவது ஒருங்கு கூடலில் பொதுக் குழுவிற்கு வாசிக்கப்பட்டது. காத்திரமான பலவேறு சிறுமாற்றங்களுடனும் சேர்க்கைகளுடனும் பூரணிக்கப்பட்ட இய்யாப்பு பொதுக்குழுவிலுள்ள ஒவ்வொரு எழுத்தாள அங்கத்தவர்களாலும் கரவுயர்த்தல் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இணைய உள்ளக விவகாரங்களை, இணையத்தின் அனுமதியில்லாமல் வெளிக்கு வெளிப்படுதல் தவிர்க்கப்பட வேண்டியது. மற்றும் எவ்வகையான ஆக்கப்பூர்வமான இலக்கிய வெளியீடுகளையும் விற்பனை போன்ற சகல முன்னெடுப்புகளிலும் ஆதரிப்பது போன்ற சமாச்சாரங்கள் சகல உறுப்பினர்களாலும் அங்கீகரிக்கப பட்டது இவ்விடை முக்கியமாக குறிப்பிடத்தக்கது.

தலைவரது வரவேற்புரை இன்னபிற வழமைகளையடுத்து இணையத்தின் முதற் செயற்றிட்டமாய் கனடா தமிழ் எழுத்தாளர் விபரத்திரட்டு வெளியீடு பற்றிய விபரணையை மூதெழுத்தர் கவிஞர் வி.கந்தவனம் முன்வைத்தார். விபரச் கொத்துக்கான தகவல்களைச் சேகரித்து தொடர்ந்து செயற்படுவதாக முடிவு செய்யப்பட்டது.

இணையம் முன்னெடுக்கக்கூடிய, வேண்டிய விவகாரங்கள் பற்றி கனதியான கருத்துப் பரிமாற்றங்கள் சுமுகமான சூழலில் ஆராயப்பட்டன. அங்குரார்ப்பண ஒருங்கு கூடலில் தேரப்பட்ட தற்காலிக செயற்குழு கலைக்கப்பட்டு புதுச் செயற்குழு தெரிவு செய்யப்பட்டது.

விபரம் வருமாறு:
தலைவர் தி. க. தெ. சண்முகராஜா
உபதலைவர்:
ஆர்.என் லோகேந்திரலிங்கம்
செயலாளர்:
அளவெட்டி சிறீசுக்கந்தராசா:
உப செயலாளர்: திரு. செ. மூர்த்தி
பொருளாளர் : திரு சாமி அப்பாத்துரை
உப பொருளாளர் திரு.இரா சம்பந்தன்
மக்கள் தொடர்புப் பொறுப்பாளர்:
திரு குமார் மூர்த்தி
நிர்வாக உதவிக் குழு: திரு. வீ. துருவசங்கரி திரு. எஸ்சரவணபவான் திரு எம். சிவானந்தன் திருஜெகதீஸ்வரன்
காப்பாளர் குழு: கவிஞர் வி.கந்தவனம் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம்(குறமகள்) திரு.க.செ. நடராசா (நாவற்குழியூர் நடராஜன்)

ஊருருசியான உணவுட் கொள்ளலுடன் ஒருங்கூடல் நிறைவெய்திற்று. ஒருங்குகூடல் பற்றிய அறிவித்தலை வெளியிட்ட பத்திரிகைகளான கனடா ஈழநாடு, தாயகம், தமிழோசை ஆகியவற்றின் நிறுவனத்தினர் மற்றும் GREEN CABIN RESTAURANT உரிமையாளர், பிரசுரத்தை அன்பளிப்பாக அச்சிட்டுத்தந்த ஆசிரியர் க.நவம், இணையத்தின் வளர்ச்சியில் கொண்ட மேவிய ஈடுபாட்டினால் ஆரம்ப அன்பளிப்பாக 100.00 டொலர்களுக்கான காசோலையைத் தந்த AHILAN ASSOCIATES ஸ்தாபகர் திரு எஸ்.திருச்செல்வம் ஆகியோருக்கு இப்போதில் நன்றிகளை உரித்தாக்குவது பொருத்தமானது.

இணையத்தின் அடுத்த செயற்பாடுகளையும் ஒருங்கூடல்களையும் பற்றிய விபரங்களை பத்திரிகைகள் வாயிலாக அறிவிப்பதாக முடிவெடுக்கப்பட்டது.

நன்றி
அளவெட்டி சிறீசுகந்தராசா
செயலாளர்
கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்

# இஸ்ரேல் பாலஸ்தீனம்:

## சமாதானத் திட்டம் வெற்றியடையுமா?

தி. உமாகாந்தன்

கடந்தவாரம் உலகத்தை ஒரு செய்தித் தலைப்பு அதிரச்செய்தது. சர்வதேச அரசியலின்பால் அக்கறை கொண்டவர்கள் இப்படியும் நடக்குமா என திகைத்தனர். இத்தகைய ஒரு நிலையை ஏற்படுத்தியசெய்தி "இஸ்ரேலின் இறைமையை பாலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) அங்கீகரிக்கின்றது. அதுபோலவே பாலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் இஸ்ரேல் அங்கீகரிக்கிறது. அது மட்டுமல்ல "காஸாவும் ஜெரிக்கோவும் முதலில் (Gaza Jericho first) என்ற சமாதானத்திட்டமும் அறிவிக்கப்பட்டிருக்கிறது

இத்தகைய ஒரு சமாதானத்திட்ட அறிவிப்பின்மூலம் பாலஸ்தீனிய மக்களின் 45 வருடகாலப் போராட்டங்களும் துன்பங்களும் முடிவுக்கு வந்துவிடும் என்று யாரும் எண்ணி விடமுடியாது. ஆனால் யதார்த்தத்தைப் புரிந்து கொண்ட இரு தரப்புத் தலைமைகளும் இதுவே சிறந்தது என்ற நிலையில் அல்ல, இதைவிட வேறுவழி எதுவும் இல்லை என்ற நிலையில் இந்த முடிவுக்கு வந்திருக்கின்றன.

சர்வதேச அரங்கில் அமெரிக்காவில் அனைவருக்கும் தெரிந்த வகையில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இஸ்ரேலிய அரசுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து பல கட்டங்களாக நடந்தன. ஆனால் ஆரோக்கியமான முடிவுகள் எதுவும் அனுகப்படவில்லை. இந்த நிலையில் நோர்வே அரசின் அனுசரணையுடன் இரகசியமாக நோர்வேயின் ஒதுக்குப்புறமொன்றில் தொடர்ச்சியாக பி.எல்.ஓவின் உயர் அதிகாரிகளுக்கும் இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சின் பொறுப்பதிகாரி உரி சவிர் தலைமையிலான இஸ்ரேலியக் குழுவுக்குமிடையில் நடைபெற்ற இரகசியப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக இம்முடிவு, அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிவிக்கப்பட்ட அமைதித் திட்டத்தின்படி 1967ம் ஆண்டிலிருந்து இஸ்ரேலின் ஆக்கிரமிப்பின் கீழ் இருக்கும் மேற்குக்கரை, மற்றும் காஸாப் பகுதிகளில் பாலஸ்தீனியர்கள் குறிக்கப்பட்ட அதிகாரங்களுடன் சுயாட்சி செய்ய வழிபிறக்கும் அதே சமயம் இஸ்ரேல் தனது படைகளை காஸாவிலிருந்தும் மேற்குக்கரையின் ஜெரிக்கோ மாவட்டத்திலிருந்தும் விலக்கிச் கொள்ளும். இருப்பினும் இஸ்ரேல் தனது பாதுகாப்புக் காரணமாக கட்டுப்பாடுகளையும், அதிகாரங்களையும் தன்னிடத்தில் வைத்துக்கொள்ளும் முதல் ஐந்துவருடங்களுக்கு இம்முறை தொடரும். ஆனால் இரண்டாவது வருடத்திலேயே ஒரு நிலையான உடன்பாட்டைக் காண்பதற்கான பேச்சுவார்த்தைகள் இருதரப்புகளுக்குமிடையில் ஆரம்பமாகும்.

உண்மையிலேயே இந்த அமைதித திட்டம் ஒரு பூரணப்படுத்தப்பட்டது அல்ல. பல ஓட்டைகளைக் கொண்டுள்ளது. குறிப்பாக இவ்வொப்பந்தத்தில் ஜெருசெலம் பற்றி எந்தக் குறிப்புமே இல்லை. இஸ்ரேலினால் பலவந்தமாக இணைக்கப்பட்ட ஜெருசெலத்தையே இன்னமும் பாலஸ்தீனியர்கள் தமது தலைநகரம் எனக்கூறிவருகிறார்கள்.

இது குறித்து அமைதிக்கான பேச்சுவார்த்தைத் தொடரில் பாலஸ்தீனக் குழுவின் தொடர்பாளராக இருந்த ஃபைசால் ஹூசெய்ன் கருத்துத் தெரிவிக்கையில் "இஸ்ரேல் ஜெருசெலம் பற்றிப் பேச மறுப்பது இந்த ஒப்பந்தத்தையே ஆபத்துக்குள்ளாக்கும்" என்கிறார் அதுமட்டுமல்ல "கிழக்கு ஜெருசேலத்தை விட்டுவிட்டு பாலஸ்தீனியர்கள் வேறு எதற்காவது சம்மதிப்பார்கள் என்று யாரும் நினைத்தால் அது தவறு" எனக்குறிப்பிடும் அவர் "ஆரம்பத்திலிந்தே ஜெருசலேம் பற்றிய எமது கொள்கை என்ன என்பதை இஸ்ரேல் அறியும் எனவே இதுகுறித்து இஸ்ரேல் காட்டும் மௌனம் அமைதித் திட்டத்துக்கு தடைக்கல்லாகவே அமையும்" என்கிறார். இதுபோலவே பேச்சுவார்த்தைகளில் பாலஸ்தீனிய தரப்பில் கலந்து கொண்டவரான ஃபருக் கடோமி குறிப்பிடும்போது "நாங்கள் ஜெருசலேத்தை விற்று காஸாவை வாங்க முடியாது" என்கிறார்.

ஆனால் பாலஸ்தீன விடுதலை இயக்கப் பேச்சாளர்களில் ஒருவரான ஹனன் அஷ்ரவி மிகுந்த அவதானத்துடன் கருத்துத் தெரிவிக்கையில் "கிழக்கு ஜெருசலேத்தை தலைநகராகக்கொண்ட சுதந்திர பாலஸ்தீனம் அமைவதென்பது உடனடியாக நடக்க முடியாதது. அதனை நீண்டகால நோக்கிலேயே பாலஸ்தீன மக்கள் பார்க்க வேண்டும் பாலஸ்தீன மக்களின் தனிநாட்டுக் கோரிக்கை என்பது ஒரு வெறும் கோஷமல்ல, அது அவர்களது உரிமை" எனக் குறிப்பிடும் அவர் "அதனை அடைவதற்கான முதல்படி இவ்வமைதித் திட்டம்" எனக் குறிப்பிடுகிறார்.

இஸ்ரேலிலுள்ள மதவாதிகளும், தீவிர வலதுசாரிக் குழுக்களும் பிரதம எதிர்க்கட்சியும் இவ்வொப்பந்தத்தை கடுமையாக எதிர்க்கின்றனர். ஆனால் அபிப்பிராய வாக்கெடுப்புக்களின்படி 52%மான மக்கள் ஒப்பந்தத்திற்கு ஆதரவளிக்கின்றனர். இது போலவே

### சுழலும் உலகம்



ஜோர்ஜ் ஹபாஷின் பி.எ.ஃப்.எல்.ரி போன்ற அமைப்புக்களும் ஈரானின் ஆதரவுபெற்ற ஹமாஸ் போன்ற அமைப்புக்களும் ஒப்பந்தத்தை எதிர்க்கின்றன. இது குறித்து ஈரான் தரப்பில் தொலைக்காட்சியில் கருத்துத் தெரிவிக்கப்பட்டபோது "முஸ்லீம் பாலஸ்தீனம் எனும் தேசத்தை அடைவதற்காக பல ஆண்டுகளாக நடந்துவரும் போராட்டத்தை இவ்வொப்பந்தம் மழுங்கச் செய்யும்" எனக் குறிப்பிடப்பட்டதுடன் 'சியோனிச அரசு இம்முறை வெகு தந்திரமாக பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் பாவித்தே இஸ்லாமிய மக்கள் எழுச்சியை ஒடுக்க முனைகிறது" எனக் குறிப்பிடப்பட்டது.

அரசியல், பொருளாதார ரீதியாக பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் அதன் தலைவர் யசீர் அரபாத்துக்கும் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலையிலிருந்து மீளவே பி,எல்.ஒ இந்த ஒப்பந்தத்திற்கு சம்மதித்தது என்ற எதிர்த்தரப்பு விமர்சனமும் பரவலாக உள்ளது. பாலஸ்தீன விடுதலை இயக்கம் மட்டும் பாலஸ்தீனிய மக்களுக்குப் பொறுப்பானதல்ல, பி.எல். ஒவின் குரல் பாலஸ்தீன மக்களின் குரலல்ல என்ற எதிர்ப்புப் பிரச்சாரங்களும் வெகு தாராளமாக எழுகின்றன.

இருப்பினும் தனது முயற்சியில் தளராமல் யசீர் அரபாத் ஒப்பந்தத் துக்கான ஆதரவைத் திரட்டுவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். எகிப்திய ஜனாதிபதி முபாரக், ஜோர்டானிய மன்னர் ஹுசெய்ன், சிரிய ஜனாதிபதி ஆசாத் ஆகியோரை சந்தித்து ஒப்பந்தம் குறித்து ஆரம்பத்தில் முரணான கருத்துக்களைத் தெரிவித்த அவர்களை ஆதரவுத் திசையை நோக்கி நகர்த்தியிருக்கிறார்.

இதுபோலவே இஸ்ரேலில் ரபினின் அரசும் ஒப்பந்தம் தொடர்பாக மிகமோசமான கண்டனங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. வலதுசாரி எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான பெஞ்ஜாமின் நெத்தன்தாயு ரபினை 'இஸ்ரேலை அழிக்கவேண்டியதே தனது இலட்சியம் எனக் கொண்டதும் இப்போது வங்குரோத்து அடைந்துவிட்டதுமான பி.எல்.ஒவை பாதுகாக்கிறார்' எனக் கண்டித்துள்ளதுடன் "ரபின், பெரஸ் ஆகியோரின் இந்த மோசமான நடவடிக்கைகள் இஸ்ரேலை அழிவை நோக்கியே நகர்த்தும்" என்றும் சாடுகிறார். ஆனால் இது குறித்து அலட்டிக் கொள்ளாத ரபின் 'சமாதானத் தீர்வை அடைவதற்கான நேரம் வந்து விட்டது. இனியும் காலம் கடத்த முடியாது' எனக் குறிப்பிடுகிறார்.

ஆனால் எதுவும் இலகுவானதல்ல, ஒப்பந்தம்... கைச்சாத்திடல் ...நடைமுறைப்படுத்தல் அனைத்துமே இந்த எதிர்ப்பு அலைகளிடையே சிரமமானதே. எதற்குமே உடன்படாத, எந்த ஒப்பந்தத்துக்குமே சம்மதிக்காத இருதரப்பு தீவிரவாத சக்திகளுமே தடைகளாக வன்முறைகளை விதைக்கும் இலட்சக்கணக்கான பாலஸ்தீனியர்களையும் பல்லாயிரக்கணக்கான இஸ்ரேலியர்களையும் பலி கொண்டு வன்முறையே வாழ்க்கையாகிப்போன இந்த மக்களின் எதிர்காலம் அலட்சியப்படுத்தப்படுவதோ அரசியல் சதுரங்கமாக்கப்படுவதையோ ஏற்றுக் கொள்ள முடியாதது.

கடந்த 45 வருடங்களாக பாலஸ்தீனிய மக்கள் வன்முறையோடு போராடி களைத்துவிட்டார்கள். 1948 இல் யூத குடியேற்றவாளர்கள் இஸ்ரேலைப் பிரகடனம் செய்தனர். அரபு அயலவர்களோடு அன்று ஆரம்பித்த யுத்தத்தில் பல அரபுப்பகுதிகளை இஸ்ரேல் தன்னுடன் இணைத்தது. 1956 இல் எகிப்து சுயஸ்கால்வாயை தேசிய மயமாக்கியது. இஸ்ரேல் சினாய் பகுதிமீது தாக்குதல் நடத்தியது. 1964 இல் பாலஸ்தீன விடுதலை இயக்கம் உருவாக்கப்பட்டது. 1967 ஆனிமாதம் இஸ்ரேல் எகிப்திடமிருந்து சினாய் மற்றும் காஸாப் பிரதேசங்களைக் கைப்பற்றியது. கோலான் குன்றுப் பகுதிகளை சிரியாவிடமிருந்தும் மேற்குக் கரை, கிழக்கு ஜெருசெலம் ஆகியவற்றை ஜோர்டானிடமிருந்தும் இஸ்ரேல் கைப்பற்றியது. 1967 நவம்பரில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை 242 வது தீர்மானத்தை நிறைவேற்றியது. இத்தீர்மானம் கைப்பற்றிய பகுதிகளிடமிருந்து இஸ்ரேலியப் படைகளை வெளியேறுமாறு கோரியதுடன் அப்பகுதியிலுள்ள அனைத்து அரசுகளையும் அங்கீகரிக்குமாறும் கோரியது. 1970இல் ஜோர்ஜ்தானில் பாலஸ்தீனப் போராளிகளின் நடவடிக்கைகள் அதிகரித்தால் ஜோர்தான் இராணுவத்தில் பிளவு ஏற்பட்டது அதனால் பாலஸ்தீனப் போராளிகள் லெபனானுக்குப் போக வேண்டி வந்தது. 1974ம் ஆண்டு எகிப்தும், சிரியாவும் சினாய் கோலான் குன்றுப் பகுதிகளில் இஸ்ரேல்மீது தாக்குதல் நடத்தின. 1977 இல் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக இஸ்ரேல் போனார் ஆனால் இதர அரபுநாடுகள் அவரை துரோகி என ஒதுக்கின. 1978 இல் எகிப்து, இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய நாடுகளி காம்ப் டேவிட் சமாதான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன. 1979 இல் இஸ்ரேலும் எகிப்தும் சமாதான ஒப்பந்தமொன்றை வாஷிங்டனில் வைத்து மேற்கொண்டன 1982 யூன் மாதம் இஸ்ரேல் பாலஸ்தீனப் போராளிகளை வெளியேற்ற லெபனானினுள் பிரவேசித்தது. யசீர் அரபாத்தும் இதர போராளிகளும் வெளியேற வேண்டி வந்தது. டிசம்பர் 1987ல் இன்ரிபாடா எனப்படும் பாலஸ்தீன மக்களின் எழுச்சி ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் கிளர்ந்தது. 1988 நவம்பரில் பாலஸ்தீன தேசிய சபை பாலஸ்தீனிய தேசத்தைப் பிரகடனம் செய்தது. 1988 டிசம்பரில் இஸ்ரேலின் வாழும் உரிமையை அங்கீகரித்த அரபாத் பயங்கரவாதத்தை நிராகரித்தார். 1993 ஜனவரி இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் பாலஸ்தீன இயக்கத்துடன் தொடர்பு வைத்தல் குற்றம் என்ற சட்டம் நீக்கப்பட்டது.

இவற்றைத் தொடர்ந்து இஸ்ரேலிய அரசு, பி.எல்.ஒ இருதரப்பும் பல்வேறு பிரச்சனைகளுக்குள்ளாகியுள்ளன. விளைவு அமைதிக்கான வழியை நாட இரு தரப்பையுமே சூழ்நிலைகள் இன்று உந்தியிருக்கின்றன. எதிர்வரும் நாட்கள் ஆச்சரியங்களை சுமந்து வரலாம். இல்லை. அதிர்ச்சிகளையும் சுமந்து வரலாம்.

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக, பற்றிக் பெர்னன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்; செ. லோகநாதன்

### 1984 ஜனாதிபதி தேர்தல்

1984ம் ஆண்டு நடைபெறவேண்டிய இலங்கையின் முதலாவது ஜனாதிபதி தேர்தலை 1982ல் நடாத்துவதற்காக அரசாங்கம் அறிவித்தது. இவ் அறிவித்தலைத் தொடர்ந்து ஏனைய அனேக கட்சிகளைப் போன்று ஜேவிபியும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக பெரும் ஆர்வம் காட்டியது. இவ் அறிவித்தல் வெளிவரும் வரை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவேண்டும் என்னும் கருத்து ஜேவிபியிடம் நிலவியதா என்பது பற்றி கூறமுடியாது. 1982ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அளவில் சுகததாச உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற ஜேவிபி மாநாட்டின் போது, பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதி தேர்தலுக்காக நிறுத்த ஏனைய கட்சிகள் சம்மதித்தால் அதற்காக வேலை செய்ய வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அனைவராலும் ஏற்றுக்கொள்ளப படக்கூடிய பொது வேட்பாளராக இளைப்பாற்றிய நீதியரசர் ஒருவரைப் பற்றிய கருத்தே அடிபட்டது. இம் மாநாடு முடிவடைந்த பின்னர் ஏதோ ஒரு கட்சியைச் சார்ந்தவர் என்னும் அடையாளங்கள் எதுவுமற்ற பொது வேட்பாளர் ஒருவரை ஜே.ஆர் ஜெயவர்தனவுக்கு எதிராக நிறுத்துவோம் என அனைத்து எதிர் தரப்பு கட்சிகளுக்கும் ஜேவிபி எழுத்து மூலம் அறிவித்தது. பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த எதிர்க்கட்சிகளுக்கு இயலாமல் போனால் இடதுசாரிக் கட்சிகள் ஒரு பொதுவேட்பாளரை நிறுத்த வேண்டும் எனவும் ஜேவிபி கூறியது. ஆயினும் இடதுசாரிகளின் அப்பொது வேட்பாளர் கட்டாயமாக ஜேவிபியைச் சார்ந்தவராக இருக்கவேண்டும் என்னும் கருத்தே ஜேவிபியிடம் நிலவியது.

தமது இவ் இரு பிரேரணைகளில ஒன்றாவது பயனளிக்காவிட்டால் தாம் வேட்பாளரை நிறுத்துவதற்காக ஜேவிபி கூறியது. இதன் பின்னர் பொது வேட்பாளர் தொடர்பாக ஏனைய இடது சாரிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. ஐக்கியம் தொடர்பாக ஜேவிபியுடனான முன் அனுபவம் காரணமாகவோ அல்லது ஜேவிபியினர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தொடர்பாக காண்பித்த கடும் எதிர்ப்புக் காரணமாகவோ, ஜேவிபியினால் முன்மொழியப்பட்ட பொது வேட்பாளர் தொடர்பான பிரேரணை எதிர்க்கட்சிகள் அல்லது இடதுசாரிக் கட்சிகள் மத்தியில் பயனளிக்கவில்லை.

பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப படவேண்டும் என்னும் பிரேரணை பயனளிக்காவிட்டால் தாம் வேட்பாளரை நிறுத்துவதாக ஜேவிபி கூறிய போதிலும், தனியாக போட்டியிடவும் முடியாது, போட்டியிடாமல் இருக்கவும் முடியாது என்னும் நிலையே அன்று ஜேவிபியிடம் காணப்பட்டது. தனியாக போட்டியிட்டு கணிசமான வாக்குகளைப் பெற முடியாவிட்டால் அது ஜேவிபியின் எதிர்காலத்துக்கு பிரச்சனையாக அமையலாம். போட்டியிடாமல் இருந்தால் பெலயீனம் காரணமாகவே போட்டியிடவில்லை என்னும் உணர்வு ஏற்படக் கூடிய நிலையுமே காணப்பட்டது. தான் இருந்த இரண்டும் கெட்டான் நிலையிலிருந்து கரையேறுவதற்காகவே எதிர்க் கட்சிகளின் பொது வேட்பானர் அல்லது இடது சாரிகளின் பொது வேட்பாளர் ஆகிய பிரேரணைகள் ஜேவிபியால் முன் மொழியப்பட்டன. ஆனால் இப் பிரேரணைகள் தோல்வி அடைந்த பின்னர் தனியாக போட்டியிடாமல் இருக்க முடியாது என்னும் நிலை ஏற்பட்டது. இந் நிலையிலேயே வேட்பானர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஜேவிபியின் விசேட மாநாடு ஒன்றை கண்டியில் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜேவிபி மத்திய கமிட்டி, மாநாட்டுக் குழு என்னும் பெயர்களில் அழைக்கப்பட்ட இரு சபைகளின் அங்கத்தவர்கள் சுமார் 60 பேர் கலந்து கொண்ட இம் மாநாட்டில் அக்காலகட்டத்தில் அரசியல் குழு உறுப்பினராகவிருந்த தயா வன்னியாராச்சி அவர்களின் பெயர் ஜனாதிபதி வேட்பாளராக விஜேவீரவால் பிரேரிக்கப்பட்டது. அனேகரது கருத்து இப் பிரேரணைக்கு எதிராகவே இருந்தது. ஜனாதிபதி தேர்தலுக்கு பிரபலமான ஒருவரை வேட்பாளராக நிறுத்தா விட்டால் பெரும் பின்னடைவுகளுக்கு முகங் கொடுக்க நேரிடும் என அவர்கள் எண்ணியிருக்கலாம். தான் போட்டியிட்டு குறைந்த வாக்குகளைப் பெறுவதைவிட வன்னியாராச்சி அல்லது வேறு யாராவது போட்டியிட்டு அதை விட குறைவான வாக்குகளைப் பெற்றாலும் பரவாயில்லை என விஜேவீர யோசித்திருக்கலாம். எவ்வாறாயினும் ஜனாதிபதி தேர்தலில் ஜேவிபி வேட்பாளராக விஜேவீர போட்டியிடவேண்டும் என்பது ஜேவிபிக்குள் பெரும் குரலாக ஒலித்தது. விஜேவீர அவர்களையே வேட்பானராக நிறுத்தவேண்டும் என்னும் பிரேரணைக்கு ஆதரவு அளிக்க வேண்டாம் என அக்காலகட்டத்தில் ஜேவிபி யின் பொதுச் செயலாளராகவிருந்த லயனல் போபகேவுக்கு விஜேவீர கூறிய போதிலும் ஜனாதிபதி வேட்பாளராக விஜேவீரவையே நிறுத்தவேண்டும் என்னும் பிரேரணையை லயனல் போபகே வழி மொழிந்தார். லயனல் போபகே அவர்களின் கருத்துப்படி அதுவரை காலமும் ஜேவிபி முன்னெடுத்துச் சென்ற அரசியலின்படி அடுத்த தர்க்கரீதியான செயல் ஜனாதிபதி தேர்தலுக்கு விஜேவீரவை வேட்பாளராக நிறுத்துவதைத் தவிர வேறு எதுவுமாக இருக்க முடியாது. (லயனல் போபகே அவர்களின் இராஜினாமா கடிதம்: பார்க்க பக்கம் 8) போபகே அவர்களின் கூற்றுப்படி தாக்குதல்களை தொடுப்பதற்காக 1971 ஏப்பிரல் 02ம் திகதி கூட்டத்தில் தீர்மானம் எடுத்ததைப் போன்றே, 1982 ஜனாதிபதி தேர்தலுக்கு விஜேவீரவை வேட்பாளராக நிறுத்தவேண்டும் என எடுத்த முடிவும் ஜேவிபி அரசியலின் கட்டாய விளைவாகும். லயனல் போபகே இவ்வாறு கூறுகிறார். "1971 ஏப்பிரல்

மாதம் 02 ம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானம் அதற்கு முன்னர் நாம் உருவாக்கிய அரசியல் வேலை முறையின் கட்டாயமும் இறுதியுமான முடிவாக அமைந்ததைப் போன்றே, 1982 ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு தோழர் ரோகணவை வேட்பாளராக நிறுத்த எடுத்த தீர்மானமும் அதற்கு முன்னர் நாம் உருவாக்கிய அரசியல் செயல் முறைகளின் ஒரேயொரு, இறுதி, கட்டாயமான தர்க்க ரீதியான விளைவாக இருந்தது என்பதே எனது கருத்தாகும். (லயனல் போபகேயின் இராஜினாமாக் கடிதம் பக்கம் 8)

ஜனாதிபதி தேர்தலுக்கு போட்டியிட ஜேவிபி தீர்மானிக்கும்போது தேர்தல் ஆணையாளரால் 1982ம் ஆண்டு ஜூலை மாதம் அங்கீகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாகவிருந்தது. இதனையும் தமக்கு நன்மையென்றே ஜேவிபி கணித்தது.

எவ்வாறாயினும் தாம் போட்டியிடுவது வெற்றி பெறுவதற்காக அல்ல, மக்கள் அபிப்பிராயத்தை உருவாக்கவே என ஜேவிபியினர் அறிவித்தனர். ஜனாதிபதி தேர்தலுக்காக அடியெடுத்து வைக்கும் போது வெற்றி பெறலாம் என்னும் எதிர்பார்ப்பு ஜேவிபி தலைமையிடம் காணப்படவில்லை. ஆனால் சாதரண அங்கத்தவர்களின் நிலைமை இதற்கு வேறுபட்டது. தாம் நாட்டின் இரண்டாவது பலம் பொருந்திய கட்சியாக மாறிவிட்டதாக ஜேவிபி தமது அங்கத்தவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தியிருந்தது. இவ்வாறான நம்பிக்கை ஏற்படும் வகையிலேயே விஜேவீரவும் பொதுக் கூட்டங்களில் பேசியிருந்தார். சுகததாச உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற 71 ஏப்பிரல் கிளர்ச்சி நினைவு தினப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போது விஜேவீர இவ்வாறு கூறினார். "யூஎன்பியின் பிரதான எதிரிகள் நாம் என்பதை தற்போது யூஎன்பி அங்கீகரித்துள்ளது. இச் சந்தர்ப்பத்தில் போராட வேண்டி இருப்பது வேறு யாருடனும் அல்ல, ஜேவிபியுடன் தான் என கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி யூஎன்பி காரர்களை கூட்டி நடாத்திய உரையாடலில் மல்லிமாராச்சி கூறியுள்ளார். ஜனதா விமுக்தி பெரமுன தான் பிரதான எதிர்க்கட்சி என்பதை ஜே.ஆர்.ஜெயவர்தன அவர்கள் கூட அங்கீகரித்துள்ளார்." இவ்வாறான பேச்சுகள் மூலமாக ஜேவிபி அங்கத்தவர்கள் மத்தியிலே பெரும் எதிர்பார்ப்பு நிலவியது.

மாபெரும் பிரச்சார வேலைகளுடன் கூடவே ஜேவிபி ஜனாதிபதி தேர்தலுக்கும் அடியெடுத்து வைத்தது. பிரச்சார வேலைகளில் யூஎன்பிக்கு மட்டுமே இவர்கள் இரண்டாவதாக காணப்பட்டனர். ஜேவிபியின் கொள்கைப் பிரகடனம் தேர்தல விஞ்ஞாபனமாக அச்சடிக்கப்பட்டு இலட்சக்கணக்கில் விணியோகிக்கப்பட்டது. தேர்தல் பிரச்சாரத்துக்காக ஒட்டப்பட்ட அனைத்து போஸ்டர்களையும் மீறி விஜேவீரவின் பெரிய உருவத்துடன் கூடிய போஸ்டர்கள் நாட்டின் சகல மூலை முடுக்குகளிலும் பளிச்சிட்டன. வாக்கு வேட்டைக்காக வீடு வீடாகச் சென்ற ஜேவிபி ஊழியர்களின் எண்ணிக்கை ஏனைய கட்சிகளை விட அதிகமாக காணப்பட்டது. பொதுக் கூட்டங்களுக்கும் சனம் பெருமளவில் இழுபட்டு வந்தது. தேர்தல் இயக்கம் முன்னுக்குச் செல்லும்போது வெற்றியைக் கூட அடையலாம் என்னும் ஊகத்துடனான எதிர்பார்ப்பு ஜேவிபிக்கும் விஜேவீரவுக்கும் ஏற்பட்டது. ஜேவிபி தலைமை மட்டுமன்றி ஆதரவாளர்கள் கூட சுய மோகனத்தில் மூழ்கியிருந்தனர். ஜேவிபியினரது கூற்றின்படி அவர்களது அங்கத்துவம் நான்கு இலட்சமாக அதிகரித்திருந்தது. தேர்தல் பிரச்சார வேலைகள் மூலமாக கணிசமான தொகையினரை கவர்வதிலும் ஜேவிபி வெற்றி அடைந்ததையே காண முடிந்தது. வெற்றி அடைவது எவ்வாறாயினும் ஜனாதிபதி தேர்தலில் இரண்டாவது இடம் விஜேவீரவுக்கே என்னும் உணர்வுடன் ஜேவிபி அங்கத்தவர்கள் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியிருந்தனர். அனேக இடங்களில் தமக்கு கிடைக்கவிருக்கும் வாக்குகள் பற்றிய கணக்கு வழக்குகளைச் சமர்ப்பித்து போட்டியில் விஜேவீர இரண்டாவதாக இருப்பதை தமது அங்கத்தவர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் விளங்கப் படுத்தினர். ஜேவிபி தலைமை எவ்வளவு தூரம் சுயமோகனத்தில் மதி மயங்கியிருந்தது என்பதைக் கூறுவதாயின் மொனராகலையில் தயா வன்னியாராச்சி "நாம் தற்போது வெற்றியை அடைந்து விட்டோம்" எனக் கூறும் அளவு தூரத்துக்குக் கூடச் சென்றனர்.

ஆனால் ஜனாதிபதி தேர்தல் முடிவு ஜேவிபியினரை கனவு உலகத்திலிருந்து நிலத்துக்கு இழுத்து வீழ்த்தியது. ஜே. ஆர் ஜெயவர்தனவுக்கும் கொப்பேகடுவவுக்கும் முறையே 34,50,811 (52.91%), 25,48,438 (39,07%) வாக்குகள் கிடைத்தபோது விஜேவீரவுக்கு 2,73,428 (4.19%) வாக்குகள் கிடைத்தன. ஜனாதிபதி தேர்தலின் போது காண்பிக்கப்பட்ட சக்தியோ, ஜனரஞ்சகமோ அற்ற மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் சில மாவட்டங்களில் மட்டும் போட்டியிட்டு பெற்ற வாக்குகளை கூட நாடு பூரவும் வாக்குகள் அளிக்கப்பட்டும் (யாழ்ப்பாணத்திலும் வாக்குகள் கிடைத்த நிலையில்) பெறமுடியவில்லை. மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலின் போது கொழும்பு மாவட்டத்தில் 78,912 வாக்குகள் கிடைத்த போதிலும் ஜனாதிபதி தேர்தலின் போது 28, 580 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. அதாவது 63.8 வீதம் குறைவாகவே கிடைத்தது. கம்பஹ மாவட்டத்தில் மாவட்டசபை தேர்தலின் போது 77,104 வாக்குகள் கிடைத்தன. ஆனால் ஜனாதிபதி தேர்தலின் போது 23,701 வாக்குகளை மட்டுமே பெறமுடிந்தது. அதாவது 69.3 வாக்குகள் குறைவாக கிடைத்தன. காலி மாவட்டத்தில் 52.5 வீதமும் களுத்துறை மாவட்டத்தில் 46.6 வீதமும், மாத்தளை மாவட்டத்தில் 61.5 வீதமும் அநுராதபுரம் மாவட்டத்தில் 58.6 வீதமும் பதுளையில் 74.7 வீதமும் என வாக்குகள் குறைந்தன. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மட்டுமே வாக்குகள் அதிகமாக கிடைத்தன. அங்கு அபிவிருத்திசபைத் தேர்தலின் போது 28,275 வாக்குகள் கிடைத்தன. ஜனாதிபதி தேர்தலின் போது 28,835 வாக்குகள் அதாவது 1.9 வீதம் அதிகரிப்பைக் காண முடிந்தது. இது உறுதியாகவே விசேஷமானதாகும்.

அம்பாந்தோட்டை மாவட்டம் தவிர்ந்த வேறு எந்த மாவட்டங்களிலும் ஜேவிபியினால் புதிதாக வாக்குகளை பெற முடியவில்லை என்பதே இதிலிருந்து தெரிகிறது. ஜேவிபியினரின் கூற்றுப்படி நான்கு இலட்சம் அங்கத்தவர்களைக் கொண்ட ஜேவிபிக்கு 2,73,428 வாக்குகள் மட்டுமே கிடைத்தன என்பது புதுமையான ஒன்றாகும்

தொடரும்

# திருத்தல புராணம்

மைக்கேல் ஜாக்சன் பற்றி சமீப காலங்களில் கொஞ்சம் 'பச்சையான' விடயங்கள் வெளிவரத் தொடங்கி விட்டன. சிறுவர்கள் சிலருடன் இவர் 'அங்க சேஷ்டைகள்' புரிந்ததாக செய்தி(You know what I mean? ஏதாவது விபரமாய் எழுதப் போக சீறிக் கொண்டு பச்சை என்று பெயிண்ட் அடிக்க பலர் உண்டு. இதில் ஒரு கொசுறு.. இந்த பச்சை விவகாரி முன்பு பையன் ஒருவன் தந்தையை டடி என்றது பற்றி விமர்சித்தது தெரிந்ததே. இதே விமர்சகருக்கு 'ரொம்பவும் வேண்டப்பட்ட' ஒருவர் தனது தாயை 'மம்மி' என்றே அழைப்பதுண்டாம். உறவினர் ஒருவர் கியூரியஸிற்கு தந்த தகவல் இது.. கியுரியஸ்க்காக உறவு உளவு! என்ன பலாய் இழவு இது?)

ஜாக்சன் பற்றி செய்தி வந்ததும் அவருக்கு ஒரு உணர்வு பூர்வமான ஆதரவு கொடுக்க, எலிசபெத் டெய்லர் சிங்கப்பூர் பறந்திருக்கிறார். ஜாக்ஸன் பற்றிய செய்தி பாலியல் பிரச்சனை பற்றியது.. ஆனால் ஆதரவு கொடுக்கப் போன எலிசபெத் டெய்லரின் லட்சணம்..

★ ★ ★

ஹோட்டல் அதிபர் ஹில்டன் முதல் நடிகர் றிச்சாட் பேட்டன் (இரு முறை) வரை ஏழு திருமணம் செய்தவர் இந்த டெய்லர். இப்போது அறுபதாம் வயதில் 35 வயதான வேலையற்ற ஒருவரை திருமணம் செய்திருக்கிறார். இருவரும் சந்தித்தது மதுவுக்கு எலிசபெத் அடிமையானதால் அதிலிருந்து விடுபட சிகிச்சைக்கு சென்ற இடத்தில... இவர்கள் முதல் சந்தித்தபோது எடுத்த படம் என்று சொல்லி ஒரு மங்கலான படத்தை National Enquirer வெளியிட்டு ரீல் விட்டிருந்தது.

★ ★ ★

இந்த ரீல விடுதலை தற்போது கொழும்பிலிருந்து வரும் தினமுரசு வாரமலரும் தொடங்கி விட்டது. சுரு ஒன்று படகை விழுங்கியதாக முன்பக்கச் செய்தி.. அதற்கு படம் வேறு.. சுரு விழுங்கும் போது படம் எடுத்தார்களாம்! அடுத்த றீல் பிரேசில் காட்டில் டைனோசார் ஒன்று விஞ்ஞானியை விழுங்கும் படம். அடுத்து ஜோன் எஃப். கென்னடி உயிரோடு இருக்கிறார், அவரை சந்தித்த கிளின்டன் என்று இன்னொரு செய்தி.. எல்லா செய்திகளுக்கும் 'ஆதாரமாக' படம் வேறு.. அமெரிக்கப் பத்திரிகைகளில் வருவதை அப்படியே வொய்ஸ் ஒப் அமெரிக்கா மாதிரி 'ஜொள்ளு' பரப்புகிறார்கள். போகிற போக்கில் 'அந்தமான் காட்டில் ஆடையில்லா அழகிகளுடன் கிட்டு' என்று படம் போட்டு, கிட்டு சாகவில்லை, இந்தியா தான் கிட்டுவை அங்கு அனுப்பியது என்பார்களோ என்னவோ?

வீரகேசரிக்குப் போட்டி என்பதற்காக இப்படியாக கயிறு திரிப்பது? தோழர்காள்! தமிழ் மக்களுக்கு கொஞ்சமாவது நன்மை செய்யுங்களேன். D.D என்ரர்பிரைஸ் என்றதும் துணிச்சலான Dare Devils ஆக இருக்கக் கூடும் என்று நினைத்தேன். பார்த்தால் Dirty Dozen ஆக இருக்கும் போலிருக்கே.

★ ★ ★

மைக்கேல் ஜாக்ஸனின் இந்த குற்றச்சாட்டு பொய் என்று ஜாக்ஸன் தரப்பு கூறுகிறது. பையனின் தந்தை பணம் பறிக்கச் செய்த விளையாட்டு என்று கதை வேறு.. ஜாக்ஸனுக்கு எலிசபெத் டெய்லர் எமோஷனல் சப்போட் கொடுத்த மாதிரி.. இங்கே கோயில்கள் பற்றி நான் கொஞ்சம் 'கடிக்க' இன்னொரு பத்திரிகை அந்தக் கோயிலில் தனது இணைவெளியீடு ஒன்றை வெளியிட்டு சப்போட் பண்ணியிருக்கிறது. யாமிருக்கப் பயமேன் என்ற மாதிரி.. துர்க்கை அம்மனைத் துதித்தால் என்றும் துன்பம் பறந்தோடும்.. தர்மம் காக்கும் தாயும் அவனைத் தரிசனம் கண்டால் போதும்.. ஜெயதுர்க்காதேவியிடம் சரணடைந்திருக்கிறார்களோ என்னவோ?

★ ★ ★

இங்கே சஞ்சிகை விடுதல் அதிகமானதால் தற்போது பெயர்களுக்குப் பஞ்சமாகி விட்டது. (இவர்களுக்கு கற்பனைவளம் என்று ஒன்றிருந்தால் தான் கற்பனைக்கு பஞ்சம் என்று சொல்லலாம். இவர்களின் கற்பனை எல்லாம் இங்கேயிருந்தபடி யுத்த முனையில் சஞ்சயன், தனஞ்சயனோடு சரி) இதனால் ஏற்கனவே வந்த சஞ்சிகைகளின் பெயர்களையே றிசைக்கிள் பண்ணுகிறார்கள். அல்லது மறுபிரசுரம் செய்த பழக்க தோசத்தில் சஞ்சிகைகளின் பெயரையே மறுபிரசுரம் செய்து விடுகிறார்கள்.

ஒரு தடவை மூத்த பத்திரிகையினதும் பாரிசில் பூத்த பத்திரிகையினதும் ஆசிரியர்கள் சந்தித்த போது 'நீங்கள் இங்கு வரவேண்டாம், நாங்கள் அங்கே வரமாட்டோம்' என்று ஒப்பந்தம் செய்தார்களாம். (பின்னர் ஒருவர் இரகசியமாக தொடர்பை



ஏற்படுத்தியதால் தான் கனடிய பதிப்பு வந்ததாக கேள்வி) அப்போது இருவருமாக சர்வதேச வார இதழ் ஒன்றை கூட்டாக செய்வதாகவும் திட்டமிட்டார்களாம். அப்போது அந்த சஞ்சிகைக்கு பெயரும் வைக்கப்பட்டதாம். பெயர் என்ன தெரியுமா? தென்றல்.. what a neat name? என்னே கற்பனை வளம். இது ஒன்று தான் அவர்கள் மறுபிரசுரம் செய்யாத பொருளாக இருக்கும்.. அசைந்தாடும் தென்றலே தூது சொல்லாயோ?

★ ★ ★

தாமரை இணைப் பத்திரிகையாக மஞ்சரியை விட்டது. இந்த மஞ்சரி முன்பு கலைமகளின் இணைப் பத்திரிகை. அதில் அதிகமாக இலக்கிய விடயங்களை விட, றீடர்ஸ் டைஜஸ்ட் மாதிரி மறுபிரசுரங்களும் அறிவுபூர்வமான, விஞ்ஞான விடயங்கள் வரும். இம்முறை மஞ்சரியைப் பார்த்தால் அதில் ஐலண்ட் பத்திரிகையில் தராக்கி என்ற புனைபெயரில் சிவராம் எழுதிய கட்டுரை சிவராம் பெயரிலேயே பிரசுரமாகி இருக்கிறது. இது சிவராமைப் புலிகளுக்குக் காட்டிக் கொடுக்கும் முயற்சியா? அல்லது 'மஞ்சரிக்கென்றே விசேடமாக இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்டது என்ற பிரமையை ஏற்படுத்தவா? என்பது தெரியாது.

★ ★ ★

இதே போல யாழ்ப்பாணப் பத்திரிகையின் பெயரை பாரிசில் மறுபிரசுரம் செய்த பத்திரிகையை கனடாவில் மறுமறுபிரசுரம் செய்த பத்திரிகையும் இணைவெளியீடு ஒன்றை வெளியிட்டுள்ளது. அட்டைப் படத்தில் பாளம் வெடித்த நிலத்தில் கால்விலங்கு, கைவிலங்கு சகிதம் நிற்கும் இளைஞனும் (சமாதானப்) புறாவும் ஏன் இரத்தம் வடிக்கின்றன என்ற காரண காரியம் தெரியாமல் கியூறியஸ் மண்டையை உடைக்க... (முன்னறிவித்தலாக.. இதை எழுதுகிறேன் என்பதற்காக மட்டையோடு வந்திடாதீங்கப்பா) ஆசிரியர் தலையங்கத்தில் 'வாசகர்களின் ஆதரவொன்றையே முதலீடாக வைத்து' வெளியிடுவதாக கூறி விட்டு இறுதியில் 'எழுத்தாளர்களாகிய உங்களையே முற்றுமுழுதாக நம்பி வெளிவருகிறது' என்றும் இருக்கிறது.

★ ★ ★

இந்த ஆசிரிய தலையங்கங்கள் பற்றி.. முன்பு ஒரு இருவார இதழ் பதினைந்து ரூபாவுக்கு வேறு யாரையோ கொண்டு ஆசிரியர் தலையங்கம் எழுதி வந்தது. பின்னர் இடையில் நின்று போனதாக அறிவிப்பு வந்த ஒரு சஞ்சிகை மீண்டும் வந்ததல்லவா? அதன் ஆசிரிய தலையங்கம் முன்பு பழைய ஆசிரியர் எழுதி புதிய ஆசிரியர் பெயரில் வெளிவந்திருக்கிறதாம். (அந்த சஞ்சிகையைச் சேர்ந்தவர்கள் சாதாரணமாக தொலைபேசியில் பேசி விட்டு அதை பிரசுரித்திருக்கிறார்கள் என்று ஒருவர் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்)

கொழும்புப் பத்திரிகை ஒன்றில் ஆசிரிய தலையங்கத்தில் வாசகர்கள் தொலைபேசியிலும் கடிதத்திலும் வாழ்த்தினார்கள் என்றிருந்தது. தேடிப் பார்த்ததில் போன் நம்பரைக் காணோம். என்ன காது குத்தலோ?

★ ★ ★

உள்ளே ஈழம் சென்று மீண்டு வந்த ஒரு பெண்மணி புலிகள் தன்னிடம் பணம் கேட்கவில்லை என்று கூறியிருக்கிறார். ஆனால் மொன்றியலில் புலிகளுக்கு வேண்டப்பட்ட ஒரு பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் புலிகளின் பரம ஆதரவாளர். இவரிடம் புலிகள் ஐந்து லட்சம் கேட்டு, இறுதியில் ஒன்றரை லட்சம் கொடுத்து வந்த பின்னர் தற்போது புலியும் வேண்டாம், மொன்றியலும் வேண்டாம் என்று விட்டதாக கேள்வி. Heil Praba! என்றும் பயனில்லை என்பது புரிந்திருக்கலாம் இவருக்கு.

★ ★ ★

பெயர் விவகாரத்திற்கு வருவோம். நோர்வேயில் சுவடுகள் என்ற சஞ்சிகை ஒன்று வருகிறது. புலிகளின் அராஜகங்களை துணிச்சலுடன் எழுதும் சஞ்சிகை அது. கலாநிதி சிவத்தம்பி நோர்வே வந்த போது சுவடுகள் அவரைப் பேட்டி காண முயன்ற போது அப்படி ஒரு சஞ்சிகையை தனக்கு தெரியாது என்று சிவத்தம்பி மறுத்திருந்தாராம். அதே பெயரில் இப்போது கனடாவில் சஞ்சிகை.. பெயர் தட்டுப்பாடாக இருந்தால் தென்றல் என்று பெயர் வைத்தவரிடம் கேட்டால் மாருதம், சண்டமாருதம், சண்டப்பிரசண்டமாருதம், சூறாவளி என்றெல்லாம் காற்றில் சேதி சொல்ல மாட்டாரா?

கனடிய மண்ணில் ஆயிரக்கணக்கான எழுத்தாளர்கள் இலைமறை காய்களாக இருப்பதால் அவர்களுக்கு களம் அமைக்க இந்த சஞ்சிகை முயல்கிறது. ஏற்கனவே நூறு பத்திரிகை வந்தாயிற்று. அதில் ஆயிரக்கணக்கில் எழுதியாயிற்று. இனியும் இலைமறைகாயாக இருக்கும் அந்த எழுத்தாளர்கள் யாரோ?

★ ★ ★

கோயில் பற்றி எழுதப் போய் எங்கோ போய் விட்டேன். நாடு விட்டு நாடு வந்த தமிழன் எதைத் தான் விட்டு வந்தான்? பனம்பழமும் வேலியும் தவிர்ந்த எல்லாமே இலங்கையிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்டு கிடைக்கின்றன. சாதி, சீதனம், ஊர் அடிபாடு என்று தமிழ் மணம் கமகமக்கிறது. அதே போல கோயில்களும் இங்கே உருவாகி விட்டன.

ஊரில் கோயில்கள் அரச மரத்தடியில் உருவாகும் போது ஆகம விதிகளைப் பார்த்தா கோயில் கட்டுகிறார்கள்? முதலில் காக்கையும் மற்றும் பறவைகளும் எச்சம் போட ஆல், அரசு உருவாகின்றன. அதன் பின்னால் சூலம் வருகிறது. கோயில் உருவாகிறது. அங்கே குன்றிலும் குளத்தருகிலும் கூடுகின்ற சந்தியிலும் குடியிருந்த தெய்வங்கள் எல்லாம் இங்கே வெயர்ஹவுஸில் தஞ்சம் அடைந்து விட்டன. இங்கே வெயர்ஹவுஸில் பொருட்களை சேமித்து வைத்து விற்பனை செய்வது போல, கடவுள்களையும் ஷெல்ஃபுகளின் மேல் வைத்து ஆராதனை செய்கிறார்கள். தெய்வங்களும் மதமும் வியாபாரப் பண்டங்கள் என்பதைக் காட்டுவதற்காகத் தான் இந்த வெயர்ஹவுஸ் கோவில்கள் தோன்றினவோ என்னவோ? இந்தக் கோயில்களில் எல்லாம் ஆகம விதிகளை யாரையா பார்த்தான்? கோயில கிழக்காக பார்த்திருக்கும், மதில்களில் சிவப்பு, வெள்ளையில் பெயின்ட் அடித்திருக்கும் போன்ற வழமையான அமைப்பு கூட இங்கே கிடையாது. (எகிப்திய பிரமிட்கள் எல்லாம் சரியான காந்த வடக்கை நோக்கிப் பார்த்திருக்குமாம். அதே போல தான் இந்த கிழக்கு வாசல் கோயில்களோ என்னவோ?)

★ ★ ★

ஆகம விதிகளை விட றியல் எஸ்டேட் ஏஜண்டின் விதிகள் பெரிதல்லவா? கோவில்கள் உருவாகின்றன. காரணம் ஏதாவது... பக்தர்கள் வணங்க வேண்டும் என்பது முதல் முன்னைய கோவிலில் கொழுவிக் கொண்டு புதிய கோவில் அமைத்தல், வியாபார நோக்கம், பதவி ஆசை காரணமாக என்று பல காரணங்கள்...

மதம் வேண்டாம் என்ற திராவிடக்கழகம் பிரிந்து பிரிந்து புதிய கழகங்கள் வந்த மாதிரி, மதம் வளர்க்கும் கோயில்களும் பிரிந்து பிரிந்து புதிய கோயில்கள் தோன்றுகின்றன. இன்னமும் மேப்பிள் மரங்களுக்கு கீழ் சூலம் வைக்கும் வியாதி வரவில்லை.

இந்த களேபரங்களுக்குள் அகப்படாமல், கோயில் அமைத்து சேவை செய்யாமல், ஹோல் ஒன்றை வாடகைக்கு எடுத்து திருமண வைபவங்கள் போன்றவற்றை நடத்தி பணம் பண்ணுபவர்களும் இருக்கிறார்கள். பிரச்சனை இல்லாத வேலை.. இந்தக் கையால காசு, அந்தக் கையால் அர்ச்சனை.. கோயில், சங்கம் என்று போய் எதற்கு வீண் வம்பு?

★ ★ ★

இதில் சில நியாயங்கள் இருக்கின்றன. வெளிநாட்டில் ஆயிரக்கணக்கில் வரும் போது அவர்கள் வழிபட ஒரு வழிபாட்டுத் தலம் தேவை என்றால் அதை அந்த நாட்டு அரசாங்கம் கட்டிக் கொடுக்கப் போவதில்லை. யாரோ தனிநபரோ, சங்கமோ மனது வைத்தால் தான் உண்டு. அதற்காக பதவி வேண்டும் என்பவர்களும் பணம் வேண்டும் என்பவர்களும் கோயில்களை உருவாக்குவது இறைவனின் பெயரைச் சொல்லி தன் நலனை வளர்க்கும் நோக்கமே.

ஆரம்பத்தில் வந்த இந்தியர்கள் கட்டிய கோயிலுக்குள் நுழைந்த ஒட்டகங்களும் உண்டு.

★ ★ ★

ஊரில் கோயில் கட்டினால் அந்தக் கோயிலின் மெயின் கதாநாயகன், அல்லது கதாநாயகியாக ஒரு தெய்வம் தான். பிள்ளையார் என்றால் அவர்தான் அந்தக் கோயிலில் ஹீரோ.. அவருக்குரிய திருவிழாக்கள் மட்டுமே அங்கு நடைபெறும். நல்லூர் முருகன் என்றால் அங்கே முருகன் சம்பந்தப்பட்ட திருவிழாக்கள், தினங்கள் மட்டுமே கொண்டாடப்பட்டும். வைரவர் என்றால் கடா வெட்டு வேள்வி மட்டும் தான் அங்கு.. மற்ற தெய்வங்களின் சிலைகள் அங்கு இருந்தாலும் அவர்கள் கதாநாயகனின் நண்பர்கள் மாதிரி.. முக்கியத்துவம் இருக்காது.

ஆனால் இங்கே... உடன் மீளையும் விமானச்சீட்டுக்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்ற மாதிரி அனைத்து கடவுள்களையும் ஒரே இடத்தில் வைத்து எல்லா பக்தர்களையும் வர வைக்கும் தந்திரம்... போகிற போக்கில் வைரவர் சிலையையும் வைத்து விட்டு இங்கே கடா வெட்டி வேள்வியும் செய்வார்களோ என்னவோ?

பக்தர்களை வரவழைத்து பணத்தை பெற வேண்டும் என்பதற்காக அந்தந்த மூல தெய்வங்களை விட மற்ற தெய்வங்களுக்கான தினங்களையும் கொண்டாடி லாபம் பெற முயல்கிறார்கள்.. எங்கு போய் முடியுமோ? ஒருவேளை பக்தர்களை விட தெய்வச் சிலைகள் அதிகமாகி விடுமோ என்னவோ?

★ ★ ★

ஒரு கோயில் American Express போன்ற காட்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. certified cheques போன்றவற்றையும் ஏற்றுக் கொள்ளும் வசதி செய்வதோடு ஒரு Automated Banking Machine ஒன்றையும் அங்கு வைத்தால் எவ்வளவு வசதியாயிருக்கும்?

ஒரு தடவை ஒரு கோயிலில் நிர்வாகத்திற்கும் ஐயருக்கும் ஏற்பட்ட பிரச்சனையின் போது தாயகத்திடம் முறையிடப்பட்டது. பின்னர் தாயகம் இது குறித்து விசாரணை செய்திருந்தது. கொஞ்சக் காலத்தில் பார்த்தால் அதே ஐயர் இன்னொரு கோயிலில்....

★ ★ ★

பக்தர்கள் வணங்க என்று ஆரம்பித்த கோயில்கள் பணம் பிடுங்க என்பதில் நிற்கின்றன. ஒரு கோயிலில் பிரசாதம் கேட்கப் போனவரிடம் ஐயர் கேட்டாராம்.. அர்ச்சனை செய்தீர்களா என்று. இல்லை என்றதும் அர்ச்சனை செய்தவர்களுக்கு மட்டும் தான் பிரசாதம் என்றாராம்.. இது எப்படி இருக்கு..


**This newspaper is published by**
**Georgicka communications.**
**A member of**
**Ethnic Press Council Of Canada.**

**Editor: George R.Ckrhushchev**



**P.O.Box 1031, Station "F", Toronto, Ont, M4Y 2T7.**

**Tel: (416) 920 9081**
**Fax: 963 5738**
**E mail:71650,3216 Compuserve**



இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்:
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்


*உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.*

*ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும்.படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.*

## தாயகம் சந்தா விபரம்

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**
**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**

ஏற்படுத்தியதால் தான் கனடிய பதிப்பு வந்ததாக கேள்வி) அப்போது இருவருமாக சர்வதேச வார இதழ் ஒன்றை கூட்டாக செய்வதாகவும் திட்டமிட்டார்களாம். அப்போது அந்த சஞ்சிகைக்கு பெயரும் வைக்கப்பட்டதாம். பெயர் என்ன தெரியுமா? தென்றல்.. what a neat name? என்னே கற்பனை வளம். இது ஒன்று தான் அவர்கள் மறுபிரசுரம் செய்யாத பொருளாக இருக்கும்.. அசைந்தாடும் தென்றலே தூது சொல்லாயோ?

★ ★ ★

தாமரை இணைப் பத்திரிகையாக மஞ்சரியை விட்டது. இந்த மஞ்சரி முன்பு கலைமகளின் இணைப் பத்திரிகை. அதில் அதிகமாக இலக்கிய விடயங்களை விட, றீடர்ஸ் டைஜஸ்ட் மாதிரி மறுபிரசுரங்களும் அறிவுபூர்வமான, விஞ்ஞான விடயங்கள் வரும். இம்முறை மஞ்சரியைப் பார்த்தால் அதில் ஐலண்ட் பத்திரிகையில் தராக்கி என்ற புனைபெயரில் சிவராம் எழுதிய கட்டுரை சிவராம் பெயரிலேயே பிரசுரமாகி இருக்கிறது. இது சிவராமைப் புலிகளுக்குக் காட்டிக் கொடுக்கும் முயற்சியா? அல்லது 'மஞ்சரிக்'கென்றே விசேடமாக இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்டது என்ற பிரமையை ஏற்படுத்தவா? என்பது தெரியாது.

★ ★ ★

இதே போல யாழ்ப்பாணப் பத்திரிகையின் பெயரை பாரிசில் மறுபிரசுரம் செய்த பத்திரிகையை கனடாவில் மறுமறுபிரசுரம் செய்த பத்திரிகையும் இணைவெளியீடு ஒன்றை வெளியிட்டுள்ளது. அட்டைப் படத்தில் பாளம் வெடித்த நிலத்தில் கால்விலங்கு, கைவிலங்கு சகிதம் நிற்கும் இளைஞனும் (சமாதானப்) புறுவும் ஏன் இரத்தம் வடிக்கின்றன என்ற காரண காரியம் தெரியாமல் கியூறியஸ் மண்டையை உடைக்க... (முன்னறிவித்தலாக.. இதை எழுதுகிறேன் என்பதற்காக மட்டையோடு வந்திடாதீங்கப்பா) ஆசிரியர் தலையங்கத்தில் 'வாசகர்களின் ஆதரவொன்றையே முதலீடாக வைத்து' வெளியிடுவதாக கூறி விட்டு இறுதியில் 'எழுத்தாளர்களாகிய உங்களையே முற்றுமுழுதாக நம்பி வெளிவருகிறது' என்றும் இருக்கிறது.

★ ★ ★

இந்த ஆசிரிய தலையங்கங்கள் பற்றி.. முன்பு ஒரு இருவார இதழ் பதினைந்து ரூபாவுக்கு வேறு யாரையோ கொண்டு ஆசிரியர் தலையங்கம் எழுதி வந்தது. பின்னர் இடையில் நின்று போனதாக அறிவிப்பு வந்த ஒரு சஞ்சிகை மீண்டும் வந்ததல்லவா? அதன் ஆசிரிய தலையங்கம் முன்பு பழைய ஆசிரியர் எழுதி புதிய ஆசிரியர் பெயரில் வெளிவந்திருக்கிறதாம். (அந்த சஞ்சிகையைச் சேர்ந்தவர்கள் சாதாரணமாக தொலைபேசியில் பேசி விட்டு அதை பிரசுரித்திருக்கிறார்கள் என்று ஒருவர் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்)

கொழும்புப் பத்திரிகை ஒன்றில் ஆசிரிய தலையங்கத்தில் வாசகர்கள் தொலைபேசியிலும் கடிதத்திலும் வாழ்த்தினார்கள் என்றிருந்தது. தேடிப் பார்த்ததில் போன் நம்பரைக் காணோம். என்ன காது குத்தலோ?

★ ★ ★

உள்ளே ஈழம் சென்று மீண்டு வந்த ஒரு பெண்மணி புலிகள் தன்னிடம் பணம் கேட்கவில்லை என்று கூறியிருக்கிறார். ஆனால் மொன்றியலில் புலிகளுக்கு வேண்டப்பட்ட ஒரு பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் புலிகளின் பரம ஆதரவாளர். இவரிடம் புலிகள் ஐந்து லட்சம் கேட்டு, இறுதியில் ஒன்றரை லட்சம் கொடுத்து வந்த பின்னர் தற்போது புலியும் வேண்டாம், மொன்றியலும் வேண்டாம் என்று விட்டதாக கேள்வி. Heil Praba! என்றும் பயனில்லை என்பது புரிந்திருக்கலாம் இவருக்கு.

★ ★ ★

பெயர் விவகாரத்திற்கு வருவோம். நோர்வேயில் சுவடுகள் என்ற சஞ்சிகை ஒன்று வருகிறது. புலிகளின் அராஜகங்களை துணிச்சலுடன் எழுதும் சஞ்சிகை அது. கலாநிதி சிவத்தம்பி நோர்வே வந்த போது சுவடுகள் அவரைப் பேட்டி காண முயன்ற போது அப்படி ஒரு சஞ்சிகையை தனக்கு தெரியாது என்று சிவத்தம்பி மறுத்திருந்தாராம். அதே பெயரில் இப்போது கனடாவில் சஞ்சிகை.. பெயர் தட்டுப்பாடாக இருந்தால் தென்றல் என்று பெயர் வைத்தவரிடம் கேட்டால் மாருதம், சண்டமாருதம், சண்டப்பிரசண்டமாருதம், சூறாவளி என்றெல்லாம் காற்றில் சேதி சொல்ல மாட்டாரா?

கனடிய மண்ணில் ஆயிரக்கணக்கான எழுத்தாளர்கள் இலைமறை காய்களாக இருப்பதால் அவர்களுக்கு களம் அமைக்க இந்த சஞ்சிகை முயல்கிறது. ஏற்கனவே நூறு பத்திரிகை வந்தாயிற்று. அதில் ஆயிரக்கணக்கில் எழுதியாயிற்று. இனியும் இலைமறைகாயாக இருக்கும் அந்த எழுத்தாளர்கள் யாரோ?

★ ★ ★

கோயில் பற்றி எழுதப் போய் எங்கோ போய் விட்டேன். நாடு விட்டு நாடு வந்த தமிழன் எதைத் தான் விட்டு வந்தான்? பனம்பழமும் வேலியும் தவிர்ந்த எல்லாமே இலங்கையிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்டு கிடைக்கின்றன. சாதி, சீதனம், ஊர் அடிபாடு என்று தமிழ் மணம் கமகமக்கிறது. அதே போல கோயில்களும் இங்கே உருவாகி விட்டன.

ஊரில் கோயில்கள் அரச மரத்தடியில் உருவாகும் போது ஆகம விதிகளைப் பார்த்தா கோயில் கட்டுகிறார்கள்? முதலில் காக்கையும் மற்றும் பறவைகளும் எச்சம் போட ஆல், அரசு உருவாகின்றன. அதன் பின்னால் சூலம் வருகிறது. கோயில் உருவாகிறது. அங்கே குன்றிலும் குளத்தருகிலும் கூடுகின்ற சந்தியிலும் குடியிருந்த தெய்வங்கள் எல்லாம் இங்கே வெயர்ஹவுஸில் தஞ்சம் அடைந்து விட்டன. இங்கே வெயர்ஹவுஸில் பொருட்களை சேமித்து வைத்து விற்பனை செய்வது போல, கடவுள்களையும் ஷெல்ஃப்களின் மேல் வைத்து ஆராதனை செய்கிறார்கள். தெய்வங்களும் மதமும் வியாபாரப் பண்டங்கள் என்பதைக் காட்டுவதற்காகத் தான் இந்த வெயர்ஹவுஸ் கோவில்கள் தோன்றினவோ என்னவோ? இந்தக் கோயில்களில் எல்லாம் ஆகம விதிகளை யாரையா பார்த்தான்? கோயில கிழக்காக பார்த்திருக்கும், மதில்களில் சிவப்பு, வெள்ளையில் பெயின்ட் அடித்திருக்கும் போன்ற வழமையான அமைப்பு கூட இங்கே கிடையாது. (எகிப்திய பிரமிட்கள் எல்லாம் சரியான காந்த வடக்கை நோக்கிப் பார்த்திருக்குமாம். அதே போல தான் இந்த கிழக்கு வாசல் கோயில்களோ என்னவோ?)

★ ★ ★

ஆகம விதிகளை விட றியல் எஸ்டேட் ஏஜண்டின் விதிகள் பெரிதல்லவா? கோவில்கள் உருவாகின்றன. காரணம் ஏதாவது.. பக்தர்கள் வணங்க வேண்டும் என்பது முதல் முன்னைய கோவிலில் கொழுவிக் கொண்டு புதிய கோவில் அமைத்தல், வியாபார நோக்கம், பதவி ஆசை காரணமாக என்று பல காரணங்கள்...

மதம் வேண்டாம் என்ற திராவிடக்கழகம் பிரிந்து பிரிந்து புதிய கழகங்கள் வந்த மாதிரி, மதம் வளர்க்கும் கோயில்களும் பிரிந்து பிரிந்து புதிய கோயில்கள் தோன்றுகின்றன. இன்னமும் மேப்பிள் மரங்களுக்கு கீழ் சூலம் வைக்கும் வியாதி வரவில்லை.

இந்த களேபரங்களுக்குள் அகப்படாமல், கோயில் அமைத்து சேவை செய்யாமல், ஹோல் ஒன்றை வாடகைக்கு எடுத்து திருமண வைபவங்கள் போன்றவற்றை நடத்தி பணம் பண்ணுபவர்களும் இருக்கிறார்கள். பிரச்சனை இல்லாத வேலை.. இந்தக் கையால காசு, அந்தக் கையால் அர்ச்சனை.. கோயில், சங்கம் என்று போய் எதற்கு வீண் வம்பு?

★ ★ ★

இதில் சில நியாயங்கள் இருக்கின்றன. வெளிநாட்டில் ஆயிரக்கணக்கில் வரும் போது அவர்கள் வழிபட ஒரு வழிபாட்டுத் தலம் தேவை என்றால் அதை அந்த நாட்டு அரசாங்கம் கட்டிக் கொடுக்கப் போவதில்லை. யாரோ தனிநபரோ, சங்கமோ மனது வைத்தால் தான் உண்டு. அதற்காக பதவி வேண்டும் என்பவர்களும் பணம் வேண்டும் என்பவர்களும் கோயில்களை உருவாக்குவது இறைவனின் பெயரைச் சொல்லி தன் நலனை வளர்க்கும் நோக்கமே.

ஆரம்பத்தில் வந்த இந்தியர்கள் கட்டிய கோயிலுக்குள் நுழைந்த ஒட்டகங்களும் உண்டு.

★ ★ ★

ஊரில் கோயில் கட்டினால் அந்தக் கோயிலின் மெயின் கதாநாயகன், அல்லது கதாநாயகியாக ஒரு தெய்வம் தான். பிள்ளையார் என்றால் அவர்தான் அந்தக் கோயிலில் ஹீரோ.. அவருக்குரிய திருவிழாக்கள் மட்டுமே அங்கு நடைபெறும். நல்லூர் முருகன் என்றால் அங்கே முருகன் சம்பந்தப்பட்ட திருவிழாக்கள், தினங்கள் மட்டுமே கொண்டாடப்பட்டும். வைரவர் என்றால் கடா வெட்டு வேள்வி மட்டும் தான் அங்கு.. மற்ற தெய்வங்களின் சிலைகள் அங்கு இருந்தாலும் அவர்கள் கதாநாயகனின் நண்பர்கள் மாதிரி.. முக்கியத்துவம் இருக்காது.

ஆனால் இங்கே... உடன் மீனையும் விமானச்சீட்டுக்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்ற மாதிரி அனைத்து கடவுள்களையும் ஒரே இடத்தில் வைத்து எல்லா பக்தர்களையும் வர வைக்கும் தந்திரம்... போகிற போக்கில் வைரவர் சிலையையும் வைத்து விட்டு இங்கே கடா வெட்டி வேள்வியும் செய்வார்களோ என்னவோ?

பக்தர்களை வரவழைத்து பணத்தை பெற வேண்டும் என்பதற்காக அந்தந்த மூல தெய்வங்களை விட மற்ற தெய்வங்களுக்கான தினங்களையும் கொண்டாடி லாபம் பெற முயல்கிறார்கள்.. எங்கு போய் முடியுமோ? ஒருவேளை பக்தர்களை விட தெய்வச் சிலைகள் அதிகமாகி விடுமோ என்னவோ?

★ ★ ★

ஒரு கோயில் American Express போன்ற காட்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. certified cheques போன்றவற்றையும் ஏற்றுக் கொள்ளும் வசதி செய்வதோடு ஒரு Automated Banking Machine ஒன்றையும் அங்கு வைத்தால் எவ்வளவு வசதியாயிருக்கும்?

ஒரு தடவை ஒரு கோயிலில் நிர்வாகத்திற்கும் ஐயருக்கும் ஏற்பட்ட பிரச்சனையின் போது தாயகத்திடம் முறையிடப்பட்டது. பின்னர் தாயகம் இது குறித்து விசாரணை செய்திருந்தது. கொஞ்சக் காலத்தில் பார்த்தால் அதே ஐயர் இன்னொரு கோயிலில்....

★ ★ ★

பக்தர்கள் வணங்க என்று ஆரம்பித்த கோயில்கள் பணம் பிடுங்க என்பதில் நிற்கின்றன. ஒரு கோயிலில் பிரசாதம் கேட்கப் போனவரிடம் ஐயர் கேட்டாராம்.. அர்ச்சனை செய்தீர்களா என்று. இல்லை என்றதும் அர்ச்சனை செய்தவர்களுக்கு மட்டும் தான் பிரசாதம் என்றாராம்.. இது எப்படி இருக்கு..

**This newspaper is published by**
**Georgicka communications.**
**A member of**
**Ethnic Press Council Of Canada.**

**Editor: George R.Ckrhushchev**

**P.O.Box 1031, Station "F",**
**Toronto, Ont, M4Y 2T7.**

**Tel: (416) 920 9081**
**Fax: 963 5738**
**E mail:71650,3216 Compuserve**

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்:
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

*உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.*

*ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.*

## தாயகம்
## சந்தா விபரம்

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**
**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**

ANTONY BROTHERS
516 3903

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அந்தனி பிறதர்ஸ்

**1472 Queen St West**
**(Queen/Lansdowne),**
**Toronto, Ont. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும்
காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
பழவகைகள்
மலிவு விலையில்

**தமிழக, இலங்கை வாரப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் உடனுக்குடன்**


லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

தமிழ், ஹிந்தி,
மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப்
பெறலாம்

- முத்திரை, சிகரெட்,
  TTC Tickets, Lottery Tickets
- ஃபாக்ஸ், போட்டோக்கொப்பி வசதிகள்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**



SIVA'S TRADING CO. LTD
321-2739

அனைத்து வகையான இலங்கை,
இந்திய உணவு வகைகள்,
பலசரக்கு வகைகளை மலிவு
விலையில் பெற்றுக் கொள்ள

## சிவாஸ் ரேடிங் கோ

**3852 FINCH AVE EAST**
**KENNEDY/FINCH**

இலங்கையிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடன் இறால், நண்டு,
கணவாய், மீன் மற்றும்
கடலுணவு வகைகள்
மலிவு விலையில்

உலகெங்கும் செல்வதற்கான
விமானச்சீட்டுக்களை மலிவுவிலையில்
பெற தொடர்பு கொள்ளுங்கள்
சுந்தரலிங்கம் (சுந்தரி)

தோசை, இடியப்பம், அப்பம்
சுடச்சுடக் கிடைக்கும்

இந்தியா ருடே, பேசும்படம்,
சினிமா எக்ஸ்பிரஸ், ராசி பலன்,
பொம்மை தவிர்ந்த
அனைத்து தமிழக சஞ்சிகைகளும்
89 சதங்கள் மட்டுமே

# P.S.S.T

| | |
|---|---|
| எக்கோ, தொம்சன் கசட்டுகள் | 1.99 |
| 8 லேசர் இசைத்தட்டுக்கள் | 29.99 |
| வீடியோ பிரதி வாடகைக்கு | 99 சதம் |
| VIDEO TRANSFER (ANY SYSTEM) | 8.99 |

$40 க்கு மேல்பொருட்கள் வாங்கினால்
இரண்டு வீடியோப் பிரதிகள்
வாடகைக்கு இலவசம்
$75 க்கு மேல் கொள்வனவு செய்தால்
ஒரு தமிழ்ப்படம் இலவசம்

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு
வகைகளின் மொத்த விற்பனையாளர்

**TEL:609-0141**

**5210 FINCH AVE EAST #23**
**(FINCH/MIDDLEFIELD)**

சகல தமிழ், இந்தி, மலையாளப்
படங்கள் வாடகைக்கு கிடைக்கும்